REG. NO. M. 1597. WHOLE NUMBER 37. VOL. IV, NO. 1

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் IV.] அக்ஷய—ஆவணி. August 1927. [இதழ் 1.

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

நிரந்தர (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு ரு. 50-0-0. வெளிநாடு டாலர் 40.

	ரு.	அ.	பை.
மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா	50	0	0
ஜமீந்தார்களுக்கு	30	0	0
போஷகர்களுக்கு	25	0	0
நன்கொடையாளருக்கு...	15	0	0
அபிமானிகளுக்கு	10	0	0
உள்நாடுகளுக்கு	5	0	0
வெளி நாடுகளுக்கு	6	0	0

All Rights Reserved.

ஸ்ரீமான் கரு. கும. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மைடான் டெல்லியிலிருந்து 12-4-26ல் எழுதுவது:—

அன்பார்ந்த சகோதரியே !

நமது அருமை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் விண்ணவரும் போற்றத் தக்க வீர புதல்வர்களை-உலகம் புகழத் தக்க உத்தமர்களை-கவியரசர்களைப் பெற்று உதவவேண்டிய தாய்மார்கள் இந்நாள் அடிமைகளாய், கண்ணிருந்தும் குருடாய்ச் சிற்றின்பப் பொருள்களாய் மிளிர்வது வருந்தத் தக்கதே. அவர்களை-உலகிற்குப் பராசக்தி அம்சமாயிலங்கும் பெண்மணிகளை-இவ்விழிய நிலைக்குக்கொண்டு வந்த ஆடவர் செயலும் கண்டிக்கத் தக்கதாகும். இவர்கள் இந்நிலையை யடைந்ததாலன்றோ, நமது பாரத நாடு ஒளிமழுங்கிக் கிடக்கின்றது. இறைவனருளாலும் தம் கூரிய மதியாலும் உணரப்பெற்ற பெரியார் பலர் இப்பொழுது ஆடவரால் ஒதுக்கித்தள்ளப் பெற்ற அருமைத் தாய்மார்களும் தீண்டாத வகுப்பாரெனப் படுவாரும் முன்னேற்றமடைவதற்கான முயற்சியைச் செய்து வருகின்றனர். இச்சமயத்தில் தாங்களும் தங்கள் "சிந்தாமணியும்" செய்து வரும் தொண்டினு முயர்ந்தது வேறுண்டோ? ஒவ்வொரு மாதமும் பல திறப்பட்ட மக்களையும் தங்கள் கொள்கையில் ஈடுபடுத்தும் முறையில் நாவல், கதை, விகடம் ஆகிய பல வழிகளிலும் விஷயங்களைப் புகுத்தி எழுதி வருவது பற்றி அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நமது சிந்தாமணியின் போதனையாலேயே 'பெண்கள் படிக்கக் கூடாது' என்று பேசிய ஆண்டில் முதிர்ந்த பெரியார் பலர் இப்பொழுது பெண் பாலார்மீது அனுதாபங்காட்டி வருவதையும் அடிக்கடி "சிந்தாமணி வந்து விட்டதா", "சிந்தாமணி வந்து விட்டதா" என்று வினவுவதையும் நான் நேரிற் கண்டிருக்கிறேன். இங்ஙனமாக நற்றொண்டாற்றி வரும் நமது "சிந்தாமணி" பல்லூழி வாழப் பரமன் அருளைக் கூடுவதாக. இத்துடன் இரண்டு புதிய சந்தாதார்களின் விலாசமும் அனுப்பியிருக்கிறேன். நமது "சிந்தாமணி" நாடெங்கும் பரவ என்னாலியன்ற தொண்டியற்றுவேன்.

ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்டு, 28—5—25ல் அலஸ்டாரிலிருந்து எழுதுவது.

அன்பார்ந்த சகோதரியே,

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மனமகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம். அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே ஓர் பெருமையுமாகும். எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது. சமயமின்மையால் இத்துடன் விடுத்தனன்.

ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு உபயக்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும் சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்கள் நம் தேசம் முன்னேற வேண்டுமெனப் பேராவக்கொண்டவர்களென்பதைத் தாங்கள் ஆரம்பித்துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்து கொண்டேன். அதற்காக யான் வந்தனமும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சி விருத்தியுறக் கருணைபுரிவார்.

ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது.

சகோதரி !

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன். படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் தலைமை நாயகமாய் விளங்குவது பற்றி நாட்டிலுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்களென்பதில் சந்தேகமுண்டோ? எல்லாம் வல்ல ஈசன் செயலும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ சந்தா அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவுசெய்து எனக்குப் பத்திரிகையை யனுப்பி வரவும்.

பொருளடக்கம்.

	பக்கம்.
ஸுபோதராம சரிதம் — அர்த்தத்துடன் (ஸகோதரி வி. பாலம்மாள்)	1
சிந்தாமணியின் நான்காவது ஆண்டு (பத்திராதிபர்)	2
தேகாரோக்கியமும் பெண்மக்களும் (பத்திராதிபர்)	5
வறுமையும் — அனுபவமும் (ஓர் சிறிய கதை)	7
ஸ்திரீகள் என்ன செய்யவேண்டியது? (ஸ்ரீமான் K. அனந்தாசாரி, B.A.)	14
ஸுபத்திரா கலியாணம் (ஒரு சிறிய நாடகம்) (ஸ்ரீமான் S. N. கோபாலகிருஷ்ண அய்யர்)	17
பெண்மணிகளின் முன்னேற்றங்கள் (ஸ்ரீமான் மதுரவாசன்)	22
நூர்ஜஹான் அல்லது பாதகண்டத்துச் சௌந்தரியக்கொடி (ஸ்ரீமதி பாரேதி அம்மாள்)	24

	பக்கம்.
கட்டாய இலவசக்கல்வியும் ஸ்திரீகளும்	29
ருக்குமணியம்மாளின் இல்லற சித்திரம் (ஸ்ரீமதி பி. மங்களாபாயி)	31
ஜோன் ஆப் ஆர்க் (ஜனாப் A. M. அல்லாபிச்சை)	36
ஸ்ரீ கிருஷ்ணன் காலடி (An Adaptation சிறு கதை) (ஸ்ரீமதி எஸ். அம்புஜவல்லி)	40
கற்பகத்தின் காதற் கடிதம் (சகோதரி வி. பாலம்மாள்)	44
பெரிய புராணப் பெண்ணரசிகள் (ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாள்)	46
ஸதி (ஒரு சிறு கதை) (ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்)	48
எட்டிக்குப் போட்டி (ஓர் சிறிய கதை) (ஸ்ரீமான் வி. சிவராஜன்)	54

M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M. A., B. L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—

I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.

Some Select Opinions on "Chinthamani.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani.* From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the womanhood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a hign class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society,

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.— *West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban; 25th April 1925.

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR — SISTER V. BALAMMAL.

Vol. IV.] August 1927. [No. 1.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

ஸுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. B. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(*All Rights reserved by the Authoress*)

207616
600 008

सुबोधरामचरिते

॥ किष्किन्धाकाण्डः ॥

स पुनर्दुन्दुभेः कायं पादाङ्गुष्ठेन राघवः ।
निरस्य दूरे सुग्रीवस्याशङ्कामप्यपाकरोत् ॥ ८ ॥

सः அந்த राघवः ஸ்ரீராகவன் पुनः மேலும் दुन्दुभेः துந்துபி யென்ற அசுரனின் कायं உடலை पादाङ्गुष्ठेन கால்கட்டை விரலினால் दूरे தொலைதூரம் निरस्य தள்ளி सुग्रीवस्य சுக்ரீவனுடைய ஆசங்காம் சந்தேகத்தை अपाकरोत् நீக்கினார் ॥ ८ ॥

सप्तसालद्रुमान्रामस्तत्र सुग्रीवदर्शितान् ।
बाणेनैकेन युगपदविध्यल्लघुविक्रमः ॥ ९ ॥

लघुविक्रमः பராக்கிரம சாலியான रामः ஸ்ரீராமர் तत्र அவ்விடத்தில் सुग्रीवदर्शितान् சுக்ரீவனால் காண்பிக்கப்பட்ட सप्तसालद्रुमान् சப்த ஸாலமென்ற மரங்களை एकेन ஒரே बाणेन பாணத்தால் युगपत् ஏக காலத்தில் अविध्यत् வீழ்த்தினர் ॥ ९ ॥

अथ राघवसन्दिष्टस्सुग्रीवो योद्धुमग्रजम् ।
आहूय वालिनं तेन विजिग्ये प्रथमं रणे ॥ १० ॥

अथ பிறகு राघवसन्दिष्टः ஸ்ரீராமரால் ஏவப்பட்ட सुग्रीवः சுக்ரீவன் अग्रजं தமையனான वालिनं வாலியை योद्धुं யுத்தத்திற்கு आहूय அழைத்து प्रथमे रणे முதல் யுத்தத்தில் तेन அந்த வாலியால் विजिग्ये ஜயிக்கப்பட்டான் ॥ १० ॥

कृताभिज्ञानमालेन सुग्रीवेण पुना रणे ।
वाली तदा युध्यमानो दलितो राघवेषुणा ॥ ११ ॥

पुनः மறுபடியும் रणे யுத்தத்தில் वाली வாலியானவன் कृताभिज्ञानमालेन மாலையால் அடையாளமிடப்பட்டிருக்கும் सुग्रीवेण சுக்ரீவனோடு युध्यमान (सन्) யுத்தம் செய்பவனாக तदा அச்சமயம் राघवेषुणा ராமபாணத்தால் दलितः அடிக்கப்பட்டான் ॥ ११ ॥

(*To be continued*)

REGISTRAR OF BOOKS
19 SEP 1927
MADRAS

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

[Vol. IV.] அக்ஷய—ஆவணி. August 1927. [இதழ் 1.

சிந்தாமணியின் நான்காவது ஆண்டு.

(பத்திராதிபர்).

எல்லாம் வல்ல இறைவனருளாலும் அன்னையின் ஆசீர்வாதத்தாலும் இன்று முதல் நமது "சிந்தாமணி"க்கு நான்காவது ஆண்டு ஆரம்பமாகின்றது. பத்திராதிபர் என்ற பெயர் மெத்த கௌரவமளிப்பதாயினும் பத்திரிகையைச் சரிவர நடத்தி வருதல் மெத்த சிரமசாத்தியமான தொழிலென்பதை நாமே எடுத்துக் கூறலவசியமில்லை. பத்திரிகை ஆரம்பித்த மூன்று வருஷகாலமாக இன்றளவும் சந்தாவை யனுப்பாது பாக்கி வைத்திருப்பவர் பலர் ஆவார். வருஷம் முடியும் வரை ஒழுங்காகப் பத்திரிகையைப் படித்து வந்து முடிவில் ஒரு காசு மனுப்பாமல் தங்களுக்குப் பத்திரிகை தேவையில்லை யெனத் தயவுடன் தெரிவித்தவர் பலர். பத்திரிகையை வி. பி. யிலனுப்பச் செய்து பன்முறை திருப்பி விட்டவர் பலர். இதனால் எவ்வளவு கஷ்ட மேற்பட்டிருக்கு மென்பதை யுரைக்கவும் வேண்டுமோ. பெண் மக்கட்கென ஒரு பத்திரிகை யவசியமென உணர்ந்தும் பத்திரிகை நடத்துவதிலுள்ள சிரமத்தை யுத்தேசித்துப் பன்னாட்கள் சிந்தித்திருந்தும் தெய்வச் செயலாக எதிர்பாராவண்ணம் "சிந்தாமணியை" வெளியிட எமது மனந்துணிந்தது பற்றி இப்பெருங் காரியத்தில் ஈடுபட நேர்ந்துள்ளது. ஆரம்ப காலம் முதல் இன்றளவும் தவறாது சந்தாவை முன்பணமாக அனுப்பியும் பிறரிடமிருந்து வசூலித்தனுப்பியும் உதவிபுரிந்து வரும் சில சகோதரர்களின் ஆதரவைக் கொண்டே உற்சாகங் குறையாது சிந்தாமணியை நடத்தி வந்திருக்கிறோம். பலர் பலமாதங்களாகத் தங்களுக்குப் பத்திரிகை கிடைக்கவில்லை யென்று

தெரிவிப்பதிலிருந்து சில போஸ்டாபீசுகளில் சிறு சுண்டெலிகள் ஒளிந்திருந்து பத்திரிகைகளைச் சாப்பிட்டு விட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகமுண்டாகின்றது. இவ்வருஷத்திலேனும் இவ்விதத் தொந்தரவுகள் ஏற்படாதிருக்குமென நம்புகிறோம். சில அபிமானிகளின் யோசனையையும் ஆதரவையும் முன்னிட்டு "சிந்தாமணிக்கு" "சாசுவத" சந்தாவென்ற திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. உள்நாட்டிலுள்ளவர்கள் 50ரூபாயையும், வெளிநாட்டிலுள்ளவர்கள் 60 ரூபாயையும் அனுப்பினால் சாசுவத சந்தாதாரராகக் கருதப்படுவார்கள். இவர்களுக்குப் பத்திரிகையின் ஜீவியம் உள்ளவரை பத்திரிகை யனுப்பப்படும். இம்முறையை யாதரித்து சாசுவத சந்தாதாராக இன்றளவும் கையொப்பமிட்டிருப்பவர்களின் பெயரையும் பத்திரிகையிற் காணலாம். நமது பத்திரிகாபிமானிகளில் ஒவ்வொருவரும் இம்முறையை யாதரிப்பரேல் சிந்தாமணிக்குக் கூடிய சீக்கிரம் சொந்த அச்சாபீஸ் ஏற்படுத்தக் கூடுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். சாசுவத சந்தாதாரின் தொகை நூறு ஆனதும் அச்சாபீசை யேற்படுத்திப் பெண்மணிகளுக்கேற்றதான வேறு பிரசுரங்களையும் பிரசுரித்து எமது சமூகத்திற்கு முழுசேவையையும் புரியவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும். அனுவசியமான விஷயங்களையும் ஆடம்பரமான விளம்பரங்களையும் கைகொள்ளாது சமூக ஊழியத்திற்கென வெளிவரும் சிந்தாமணியை ஒவ்வொரு ஸ்திரீ வித்தியாபிமானிகளும் சாசுவத சந்தாதாராகச் சேர்ந்து ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சிந்தாமணிக்குத் தமது வியாசங்களை யளித்து அலங்கரிக்கும் நிருபசகோதர சகோதரிகள் பொருள் வருமானத்திற்காக எழுதுபவர்களன்று. எமது நோக்கத்தை நன்கறிந்து விஷயதானம் செய்து வரும் அன்னார்களின் வியாசங்களினாலேயே சிந்தாமணி ஆரம்பம் முதல் பெரும் புகழும் கொண்டு உலவி வருவதைப் பத்திரிகாபிமானிகள் நன்கறிவார்கள். தமது பெயரை வெளியிட மறுத்துப் பல சீமாட்டிகள் சிந்தாமணியை அழகிய வியாசங்களால் அலங்கரிக்க முன் வந்திருப்பது சிந்தாமணியின் நற்காலமென்பதிற் தடையில்லை. எமது சுற்றுப்பிரயாண காலங்களில் தற்சமயம் பத்திரிகையுலகில் சில இடங்களில் நடை பெறும் பல விஷயங்களை எடுத்துக் கூறப்படுவதைக் கேட்குங்கால் மனந் திடுக்கிடுகின்றது. சிந்தாமணிப் பத்திரிகையானது அவ்வித ஊழல்களுக்கு இதுவரை ஆளாகாமல் தப்பியிருப்பதுபோலவே என்றென்றும் சிறப்புடன் ஜீவிக்கும்படிக் கடவுளை மனமாறப் பிரார்த்தித்து நான்காவது ஆண்டைத் தொடங்குகிறோம். சிந்தாமணியானது மெத்த பிரபலப்பட்டிருப்பதைக் கண்டு வியக்கும் ஸ்திரீ வித்தியாபிமானிகள் இன்றளவும் இரண்டாயிரம் சந்தாவும் பூர்த்தியாக வில்லை யென்பதை யறிந்து தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராக்கிப் பணமனுப்பச் செய்யக் கோருகிறோம். எமது சுற்றுப்பிரயாண காலங்களில் பத்திரிகையின் நிர்வாகத்தில் சிறுபிழையும் ஏற்படாது கவனித்து வரும் மானேஜருக்கும், தாமதமின்றி அச்சடித்து வெளியிடச் செய்யும் மெஸர்ஸ் ஸ்ரீனிவாசவரதாச்சாரி கம்பெனிக்கும் தவக்கமின்றி காகிதமுதவும் பேபர் கம்பெனிக்கும் நாமெழுதி ஞாபகப்படுத்த வேண்டுமென்ற சிரமமின்றி வியாசங்களனுப்பிவரும் சகோதர சகோதரிகளுக்கும் மனமார்ந்த வந்தன மளிக்கிறோம். பழைய பாக்கியை யனுப்புவதுடன், இனி முன்பணமாகச் சந்தாவை யனுப்பி ஆதரிக்கவேண்டுமாய்ச் சந்தாதார்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். பலமாதங்கள் பேசாமலிருந்து பிறகு பத்திரிகை கிடைக்கவில்லை யெனக் குறைகூறுது

பத்திரிகை கிடைக்கத் தவறியதும் உடனே ஆபீசுக் கெழுதித் தெரிவித்தல் சந்தாதாரின் கடமையாகும். தங்கள் விலாசம் மாறுங் காலத்தில், புதிய விலாசத்தை எழுதித் தெரிவிக்கும்படிக்கும் ஞாபகப் படுத்துகிறோம். சிந்தாமணியும், சிந்தாமணி யபிமானிகளும் நாளுக்கு நாள் விருத்தியடையும் படிக்கும் சிந்தாமணிக்கு சந்தாதார்களும் சாசுவத சந்தாதார்களும் நாளுக்குநாள் பெருகும்படிக்கும் ஈசனருள் புரிவாராக.

சுபம்.

தேகாரோக்கியமும் பெண் மக்களும்.

(பத்திராதிபர்.)

மானிட வாழ்க்கைக்கு தேகாரோக்கியம் அவசியம். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு வித புருஷார்த்தங்களை யடைவதற்கு தேகாரோக்கியமின்றி முடியாது. இதையறிந்த பெரியார் "நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்" என்று பாடியுள்ளார். தேசத்தில் சுகமில்லையேல் மனதில் உற்சாகமில்லை மன உற்சாக மின்மையால் சோம்பலும் இதனால் முகத்திற் பிரகாசமின்மையும் கைகால்களில் ஓய்ச்சலும் முறையே ஏற்பட்டு விடுகின்றன. தேக சுகமற்ற வாழ்க்கையை நரகவாழ்க்கையாகக் கூறவேண்டுமன்றி நல்வாழ்க்கையாகக்கூற முடியாது. நாகரிகம் பெருகிவரும் இக்காலத்தில் அழகையும் ஆரோக்கியத்தையும் அயல் நாடுகளிலிருந்து வரும் மருந்துப் புட்டிகள் அளிக்கக் கூடுமென்ற நம்பிக்கை நம்மவரில் வேரூன்றி விட்டமையால் தேக சுகமில்லை யென்றால் உடனே பத்து மருந்துப் பெட்டிகளை வீட்டில் நிறப்புகலன்றி தேக அசௌக்கியத்திற்கான காரணம் யாது என்பதைக் கனவிலும் சிந்திப்பாரில்லை யென்றே தெரிகிறது. எங்கு சென்றாலும் வரிசை வரிசையாக மருந்துப் பெட்டிகள் வைத்திராத வீட்டைக்காண்பதரிது. சிலர் "இதோ பாருங்கள்! எங்கள் வீடு ஒரு சிறு டிஸ்பென்ஸரிதான் (மருந்துச்சாலை)" என்று பெருமையாகப் பேசிக் கொள்வதையும் கேட்கலாம். ஆடவர்களின் நிலைமையே இந்த லக்ஷணத்தில் இருக்கும் போது பெண்களின் நிலைமையைப் பேசவும் தேவையில்லை. உலகத்திலுள்ள சீர்திருத்தங்களும் முன்னேற்றமும் ஆராய்ச்சியும் ஆடவர்களுக்கு மட்டுமன்றிப் பெண் மக்களுக்கு மிவைகளுக்கு மனுவளவும் சம்பந்தமில்லை யென்பதாகவே பொதுவாய்க் கருதப் படுகின்றது. சாதுக்களாகிய பேதைப் பெண்களின் தேக சுகத்தைக் கவனிப்போமாயின் மெத்த பரிதாபமேற்படுகின்றது. மாளிகையில் அளவற்ற ஐசுவரியத்தில் காலங்கழிப்பதானாலும் அப்பெண்மணிகளின் தேகத்தில் திடனில்லை, முகத்தில் ஒளியில்லை, மனதில் உற்சாகமில்லை, சுறுசுறுப்பில்லை. அவர்கள் வயிற்றிற் பிறக்கும் குழந்தைகளின் தேக உறுதியைச் சொல்லவும் வேண்டியதில்லை. கர்ப்பகாலத்திலும் அதற்கு முந்தியும் தாய் குடித்துள்ள மருந்துகளையெல்லாம் உடம்பிலேற்றிக் கொண்டே அவைகள் பிறக்கின்றன. பெண்களின் தேக சுகக் குறைவினால் இயற்கையாயுள்ள அழகு இல்லாது செயற்கை யழகைத் தேடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு அது நாளுக்குநாள் பெருகியும் வருகின்றது. தலைமுடிக்குப் பொய்க் கொண்டை, முகத்தினழகுக்கு வெள்ளைமாவு, உடம்பின் பிரகாசத்திற்கு சரிகை உடைகள்,

இவைகளை உபயோகித்தல் சர்வ சாதாரணமாய் விட்டது. நாகரிக முதிர்ச்சியால் அயல்நாட்டு மாதர்கள் தம் தலைமுடியை வெட்டிவிட ஆரம்பித்ததிலிருந்து நம் நாட்டின் பலபாகங்களிலுள்ள பெண்மணிகளின் கொண்டை அளவுக்கு மீறிப் பெருக்க சௌகரியமாயிருக்கிறது போலும். முகத்திற் பிரகாசமும் தலைமுடியிற் செழுமையும் சுயமாக அமைவதற்கு தேக சுகமே மூலகாரணமாகும். இம்மட்டோ! தேகசுகமின்மையால் குடும்ப நிர்வாகத்திலும் பெண்கள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல. உண்மையில் தற்காலச் சிறுமிகளிடத்தில் திடமென்பது எள்ளளவுமில்லை. இளமையிலிருந்தே தேக பலமற்று வளரும் பெண்களிடத்தில் கடமையென்றும் சிக்கனமென்றும் நிர்வாகமென்றும் குடும்பக்காரியமென்றும் பிள்ளை வளர்ப்பென்றும் பேசுவதில் யாது பிரயோசனம்? உடல் நலம் வளர்த்தாலன்றி மற்ற நலம் வளர்வதெங்ஙனம்? பெண் மக்களின் தேகாரோக்யத்திற்கு ஆடவர்களே பொறுப்பாளிகளென்று கூறல் விளையாட்டுப் பேச்சன்று. பெண் மக்களுக்காக வேண்டிய ஒவ்வொரு காரியங்களிலும் முன் நின்று உதவி புரிதல் ஆடவரின் கடமையாகும். ஆயினுமென்ன? இவர்கள் பெண்கள் தங்களுக்கடங்கி கீழ்படிந்து நடக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டிருந்தலன்றி அவர்களின் க்ஷேமலாபங்களைக் கவனித்தல் தங்கள் கடனென்பதையறவே மறந்து விட்டார்களென்றே சொல்வோம். பெண் மக்களென்று பொதுவாகக் கூறுமிடத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை ஒவ்வொரு அம்சத்திலும் பரிதாபம் வாய்ந்திருப்பதைக்காண மனம் நடுக்குறுகின்றது. தமிழர் தம் தாய் மொழியைத் தள்ளிவிட்டமையால் தமிழ்ப் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவும் சிலர் அயல் படிப்பைப் படித்து அயல் நாகரிகத்தை யநுசரிப்பவர்களாகவும் காணப்படுகிறார்கள். மற்றமொழிகள் போலத் தமிழ் மொழியானது தமிழரால் ஆதரிக்கப் படாதவரை தமிழர்களைக் கல்வியறிவுள்ளவர்களாகக் கூற முடியாதென்றால் தமிழ்ப் பெண்களின் நிலையை விவரித்துரைக்கவும் வேண்டுமோ! இந்தியாவில் உள்ள ஆசாரங்களெல்லாம் ஆரோக்கியத்திற்கென அமைந்தவைகள். அந்தந்தப் பாகங்களுக்கேற்றது போல ஆசார அநுஷ்டானங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஆராய்ந்து பார்த்தாலன்றி விளங்கமாட்டா. அவற்றிலும் தமிழரின் நாகரிகமும் ஆசார அநுஷ்டானங்களும் பழக்க வழக்கங்களும் ஒப்பற்றவை. இவைகளைத் தமிழ்க் கல்வியன்றிக் கடைப்பிடித்தல் முடியாத காரியம். உற்றுநோக்கின் அயல்நாட்டு நாகரிக வாழ்க்கை நந்தமிழரிடத்தில் நாளுக்கு நாள் வேரூன்றி வளர்தலைக் கண்டு எந்த தேசாபிமானியின் மனமும் வருந்தாமலிராதென்பது நிச்சயம். மற்ற பாகங்களெல்லாம் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்க நந்தமிழ் நாடு நாளுக்கு நாள் தாழ்வுறுவதற்குத் தமிழ்ப் பெண்களின் நிலையே காரணமாயிருக்கின்றது. கல்வியறிவில்லாமையாலும் தாய் மொழிப் பயிற்சியின்மையாலும் ஆடவர்களின் அசட்டையாலும் பெண்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டு அதனால் குடும்ப நலமும் சீரழிந்து பிரஜாபிவிருத்தியும் சீர் குலைந்து சமூக வாழ்க்கையும் நாசமுற்று வருதலைத் தமிழர் இனியேனும் சிந்திப்பரோ?

வறுமையும்—அநுபவமும்.

ஓர் சிறிய கதை.

சிதம்பரத்தின் அருகாமையில் இருக்கும் வெல்லம்பட்டி என்னும் கிராமத்தில் சிதம்பர அய்யர் என்று நாமதேயம் புனைந்த பிராமணர் ஒருவர் வசித்து வந்தார். இக்கிராமம் கொள்ளிடக் கரையிலுள்ளது. ருசிகரமான கறிவகைகளுக்குப் பெயர் போனவிடம். நல்ல செழிப்பான பூமி. இக்கிராமத்தில் நமது அய்யர் கிராம முன்சீப்பு உத்தியோகம் வகிப்பவர். இவர் தலைமுறையில் எல்லோரும் கிராம முன்சீப்பாய் இருந்தவர்கள். நல்ல கௌரவம் பெற்ற குடும்பம். இவர் மனைவி சிவகாமி அம்மாள் செல்வம் படைத்த குடும்பத்திற் பிறந்தவள். உதார குணம் பொருந்தியவளாயினும் தானாகவே பெருதவி செய்ய இசைவாளே ஒழிய, ஒருவர் இவள் குணத்தை அறிந்து உதவி செய்ய வற்புருத்துவரேல் சிறிதும் உதவ மனமிசையாள். கடுங்கோபம் வந்துவிடும். “‘எரிகிற வீட்டிற் பிடுங்கியது லாபம்’ என ஒருவர் மனமிளகியவர்களென்றால் அவர்களைத் தொந்திரவு செய்வதா” என்று சினந்து கூறுவாள். கணவரிடத்தில் மரியாதை உண்டு என்றாலும் அவர் இவளிடத்தில் கௌரவத்துடன் அடங்கியிருப்பதில்தான் அம்மாளுக்கு மெத்தப் பிரியம். சிலவேளைகளில் மனைவி தானாகப் புருஷனைத் தன் சொல்லிற்கு அடங்கி ஒழுகும்படி வெளிப்படையாய்க் கூறி நடக்க செய்தால், அது கணவன் மனைவி இருவருக்கும் அகௌரவம் என்றும், தாமாகவே கணவர் ‘நம்மனைவி நமக்கு விரோதமாய் ஒன்றையும் கூறாள்’ என்ற திடத்துடன் நடந்து கொள்வரேல் அது இருவர் தாம்பத்தியத்திற்கும் அன்பையும், கீர்த்தியையும் உண்டு செய்யும் என்று கூறுவதுமுண்டு. நமது அய்யரும் பெரிய இடத்துப் பெண் என்று விசுவாசத்துடன் அவள் சொல்லிற்கு இரண்டில்லாமல் நடந்து வந்தார் என்பது கூறுமலே வெளியாகும். இவருக்குப்பின் இவர்கள் சேமித்து வைத்திருக்கும் செல்வத்தை அநுபவிப்பதற்கும், இவர் பரம்பரையான உத்தியோகத்தை வகிப்பதற்கும் ஓர் ஆண் மகன் உண்டாகவில்லை. கதை நடக்கும்போது சிதம்பர அய்யருக்கு சுமார் ஐம்பது பிராயமிருக்கலாம், சிவகாமி அம்மாளுக்கும் வயது நாற்பதைந்து ஆகிறது. பிள்ளை பிறக்கவில்லையே என்று கவலை உண்டாகி நாகப்பிரதிஷ்டை சேதுஸ்நானம் முதலியவைகள் இயற்றி, இனி மக்கட் பேறு பெறுவது அரிது என்று கவலை நீங்கிய காலம். “ஒவ்வொரு கோயிலிலும் கடவுளைத் தொழுது புத்திரச்செல்வத்தை அளிக்கவேண்டி நின்றது பொய்யாக இப்பொழுது “நாம் கண்மூடிய பின்னர் நம்முடைய சொத்தை யார் கொண்டுபோனால் என்ன! இருக்கும் வரையில்தான் அஞ்ஞானம்; போனபிற்பாடும் இந்த வீண் கவலை ஏன்? பிள்ளையில்லாதாருக்கு எல்லாம் பிள்ளை” என்ற வேதாந்த வார்த்தைகள் தாராளமாய் உலவ ஆரம்பித்தன. சிதம்பர அய்யர் சகோதரி ஒருவள் இளம் பருவத்தில் ஆண் பிள்ளை ஒன்றைவிட்டு இறந்து விட்டபடியால் அதை அம்மாளும், அய்யருந்தான் ஆதரித்து வளர்க்க வேண்டியதாயிற்று. அப்பிள்ளையை சிதம்பரம் ஹைஸ்கூலிற் படிப்பித்து, அதற்கு மேற்பட்ட கல்லூரி அப்பொழுது அவ்விடமில்லாமையால் சென்னைக்கு அனுப்ப ஏராளமான திரவியம் செலவாகுமென்று பயந்து அத்துடன் அவன் படிப்பு நிறுத்தப்பட்டது. பையனுக்கு மேலே

படிக்க ஆசையிருப்பினும் மாமாவைத் தானாக கேட்க மனந்துணியாமல் உத்தியோகத்தில் அமர்ந்து தன் ஜீவனத்திற்கு வேண்டிய பொருளைத் தானே தேடவிரும்பி, சிறிதுகாலம் முன்பு நடைபெற்று வந்த (New India) "நியூ இந்தியா" என்ற தினசரிப்பத்திரிகையில் ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்திருந்ததைக் கண்ணுற்று, சென்னைக்கு வந்து, பத்திராதிபரான பெஸண்டு அம்மையாரைக்காண, மிகவும் உதாரகுணமமைந்த அவ்வம்மையாரும் மாதம் ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபாய் சம்பளம் கொடுத்து வேலையில் அமர்த்திக் கொண்டார். "ஓர் ஆண்பிள்ளை தன் சாண்வயறுக்கும் தேடிக்கொள்ள மாட்டாமல் இருப்பது மிகுந்த மதியீனமும் அகௌரவமுமாகையால், பையனைத் தாம் அனுமதித்தது தம்முடன் வைத்துக் கொள்ள மனமுவந்தாலும், உத்தியோகந்தான் பிள்ளையென்று பிறந்தவர்களுக்கு அழகு என்றும் அபமான சந்தோஷித்து ஆசிர்வதித்து வழி அனுப்பினுள். சிதம்பர அய்யருக்குப் பட்டணம் அனுப்புவதில் முதலிற் கொஞ்சம் மனமில்லாவிடினும், உத்தியோகம் என்று இருந்தால்தான் நல்ல இடமாய்ப் பெண் வருமென்று அம்மாள் கூறியதின்பேரில் சரி என்று ஒப்புக்கொண்டு சென்னையில் சிக்கனமாயும் ஜாக்கிரதையாயும் இருக்கும்படி புத்திமதி கூறிப் பையனை அனுப்பிவிட்டார். வீட்டிலேயே வைத்துக்கொண்டால் இவர்களுக்குப் பின் தலையைத்தான் வார்சாகக் கொள்வார்கள் என்ற திடத்துடன் வீண் ஜம்பமும் டம்பு வணக்கமும் போய்விடுமென்று சிவகாமு அம்மாளுக்கு பயம். வெளியிற் சென்று பொருள் தேடுவதால் செல்வத்திற் பற்றுதலும் அடக்கமும் ஏற்படுமென்பதாம்.

வேலையில அமர்ந்து விட்டபடியால் இனி அவனுக்கு இட்டிருக்கும் கோபாலன் என்ற பெயரையே வழங்குவோம்.

இவ்விதம் சில மாதங்கள் சென்ற பிறகு ஒரு நாள் இரவு ஒன்பது மணி சுமாருக்கு அய்யர் இராப் போஜனம் உண்டு தாம்பூலம் தரித்துப் படுக்கைக்குச் சென்றதும் 'சாமி! தந்தி, தந்தி' என்று சேவகனொருவன் கதவைத்தட்ட 'என்னடா இப்பொழுது தந்தி! கோபாலனுக்கு ஏதாவது உடம்பு அசௌக்கியமா என்ன!' என்று பரபரப்புடன் கதவைத்திறந்து தந்தியை வாங்கினுர். சிவகாமு அம்மாளுக்கு நித்திரையில் மிகப் பிரியம். படுத்த பிறகு எழுந்திருப்பது அருவருப்பான காரியம். "பாரது! ராத்திரிவேளையில் தந்தியும், தபாலும் அடிப்பது!" என்று கருத்துரைத்துப் பிறகு, "டோராஜா! எல்லாரும் க்ஷேமமாய் இருக்கவேண்டும், உமக்கு நெய்தீபம் ஒன்று ஏற்றிவைக்கிறேன்" என மனதுள்வேண்டிக்கொண்டு நீ க்குடன் வாசலில் வர, அய்யர் தீப வெளிச்சத்தில் தந்தியைப் படித்துப் பார்த்து "விசேஷ ஒன்றுமில்லை; கோபாலனுக்கு அவசரமாய் இருபத்தைந்து ரூபாய் தந்தி மணியார்டர் செய்யவேண்டுமாம்; காரணம் நேரில் தெரிவிப்பதாய் எழுதியிருக்கின்றான்" என்றார்.

சிவகாமு:—(கோபமாய்) இதற்குத் தந்தி என்ன! பட்டணம் தர்பாரா? ஒருவன் மாதம் ஒன்றுக்கு 25 ரூபாயும் என்ன செய்தான்? சினிமாவும், டிராமாவும் பார்த்துத் துலைத்திருப்பான். மாமா இருக்கிறாரே என்று தந்தி அடித்து விட்டானுக்கும்.

சிதம்பர:—பார் கண்டா! இந்த நாள் பையன்களை இப்படித்தான! எவ்வளவு ஆனாலும் செலவழித்துவிடுகிறது. இதற்குத்தான் நான் படிக்கப் பட்டணம் அனுப்பவில்லை. இப்பொழுது என்ன செய்கிறது! பணம் அனுப்புவதா? அல்லது புத்திவரட்டும் என்று பேசாமல் இருந்து விடுவதா?

சிவகா:—மேலும் தந்தி மணியார்டரல்லவோ செய்யும்படி கூறுகிறான்! அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது? காலையில் அனுப்பினுல் போதாதா? இருட்டுவேளையில் எங்கு போய் அலைகிறது! அதற்கு வேறே தனிக் காசு கொட்டவேண்டும்.

சித:—எல்லாம் சேர்த்து கொடுத்து விடுவதாய்க் கூறுகிறான்.

சிவகா:—"பிச்சை கேட்பதில் ஜம்பத்திற் கொன்றும் குறைவு இல்லை. ராமனை வாசலில் இருக்கச் சொல்லிவிட்டு எங்கு வேணுமானாலும் போய் வாருங்கள். உத்தியோகம் செய்கிறானாம்! பட்டணத்தில் உத்தியோகம்! இதற்கு இவ்விடமே பேசாமல் இருந்திருக்கலாம்" என்று கூறிக்கொண்டே உள்ளேபோய் படுத்துக் கொண்டாள். (அம்மாளுக்கு உண்மையில் மனமில்லையாதலால் வேண்டாம் என்று மறுத்துக்கூற மனம் வரவில்லை.)

அய்யர் சிறிது யோசித்துக் கையில் ரூபாய்களை எடுத்துக்கொண்டு தந்தி ஆபீசுக்குப் போய் கோபாலனுக்கு மணியார்டர் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும்போது மணி பதினொன்று ஆகிவிட்டது. தந்தி அடிப்பவன் சும்மாயிராமல் "என்ன அய்யர்வாள்! மருமானுக்கு என்ன விபத்து? இவ்வளவு அவசரத்தில் மணியார்டர் செய்கிறீர்கள். சிறுபையன்கள் பட்டணங்களில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்" என்று பிரசங்கம்செய்ய ஆரம்பித்துவிட்டான். அய்யருக்கு ரொம்ப அவமானம். தப்பு சால்ஜாப்பு ஏதோ கூறிவிட்டு மெள்ளத் திரும்பி விட்டார். காலையில் ஊரில் எல்லாரும் பலவிதமாய்த் தன்னைக் கேட்பார்களே என்று சிந்தித்த வண்ணம் படுத்துக்கொண்டார்.

இரண்டு நாட்கள் கழித்து கோபாலன் மாமாவை நேரிற் காண வந்து தான் அவசரமாய்த் தந்தி அடித்ததற்கு மன்னிக்கும்படியாகவும், தான் அமர்ந்திருந்த ஆபீசு மூடி இரண்டு மாதமாகிறபடியால் தனக்கு வேலைபோய் விட்டதென்றும், கைச்செலவிற்கு ஒன்றுமில்லாமையால் தந்தி அடித்ததாகவும், மாமாவைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று எண்ணியே எவ்வளவோ சிக்கனமாய் இருந்தும் தன்னிடமிருந்த சில சாமான்களையுங்கூட அடகு வைத்துச் சாப்பிட்டதாகவும், சிலநாட்களொரு வேளை போஜனமும் சிலநாள் அதுவும் இல்லாமல் இருந்ததாகவும், அப்படியும் கஷ்டமாகிவிட்டபடியால் தந்தி அடிப்பதற்குக்கூட காசு இல்லாமல் தன் மேற் சட்டையை அடகு வைத்து அடித்ததாகவும், மற்றொரு தினசரிப் பத்திரிகையில் வேலைக்குக் கேட்டிருப்பதாயும், அது கிடைத்தவுடன் ரூபாய்களைத் திருப்பிக் கொடுத்து விடுவதாயும் கூறி முடித்தான்.

மாமனும் மாமியும் ரொம்பக் கோபங்கொண்டார்கள். "மாதம் இருபத்தைந்து ரூபாயும் செலவழித்ததுமல்லாமல் சாமான்களைக் கொண்டு வைத்துச் சாப்பிட்டேன் என்று சொல்ல உனக்கு வெட்கமில்லையா? கடன் வாங்குவதும் அடகு வைப்பதும் நமது குடும்பத்தில் கேட்டதுண்டா?" என்று இரைந்தார்கள்.

கோ:—(பொறுமையுடன்) மாமா! கோபித்துக் கொள்ளக்கூடாது. சென்னை நமது ஊரைப் போல் அல்ல. அவ்விடம் எல்லாம் கிராக்கியானது. ஹோட்டலுக்கு ஒருவர் சாப்பாட்டிற்கு மாதம் 12 ரூபாய்கள் கொடுத்துவிட வேண்டும். இதற்குமேல் சாப்பிடச் சிற்றுண்டி வகைகளுக்கு நாலைந்து ரூபாய்கள் ஆகும். ஆபீசுக்குப் போய்வர வண்டிச் செலவு ஐந்து ரூபாய், வண்ணான் அம்பட்டன் முதலிய சில்லரைச் செலவுகளுக்கு பாக்கி செலவாகிவிடுகிறது. இரண்டு மாதங்கள் சம்பளமில்லாமையால் தங்களைக் கேட்க நேர்ந்தது. நீங்கள் வீட்டோடு இருப்பதால்

சிரமம் தெரியாமற் கூறுகிறீர்கள். கையிற் காசு இல்லாமல் ஒரு நாள் கழிப்பது பட்டணங்களில் மிகவும் சிரமம். எதைத் தொட்டாலும் செலவுதான். நான் சில பிள்ளைகளைப் போல் டிராமா முதலியவைகளுக்குச் சென்றவனல்ல. சம்பளத்தில் மீதம் பிடித்து வைத்திருந்த சொற்பத் தொகையும் வேலைக்காக அலைந்ததிற்கும் மலைவதிலும சாப்பாட்டிற்கும் செலவாகிவிட்டது.

சித:—எல்லாம் பங்கடைத்துக் கூறிவிட்டாயே. வேறுவேலைகள் கிடைக்கும் வரையில் ஏதாவது சில்லரை வேலைகளில் அமர்ந்து அதைக் கொண்டு ஜீவனம் செய்யாமல் பெண் பிள்ளைபோல் திகைப்பது ஆண் பிள்ளைக்கழகா! நானும் சில வருஷங்களுக்கு முன் சென்னை போய் வந்திருக்கிறேன். நீ சொல்வதுபோல் செலவாகுமென்று நினைக்கவில்லை.

கோ:—நானும் பல விடங்களில் வேலைக்காக அலைந்து திரிந்தேன். ஒவ்வொரு இலாகாவிலும் ஆட்கள் அதிகமென்று குறைக்கும்போது நான் என்ன செய்வது? மேலும் தற்காலம் பிராமணர்கள் என்றால் வேலை கிடைப்பது அரிதாகிவிட்டது.

சித:—என்ன அவசரமானாலும் இரவில் தந்தி அடித்தது முற்றிலும் பிசகு. உன் அப்பாமி யாருக்கு என்ன உடம்போவென்று மிகவும் பயந்து விட்டாள்.

சிவகாமு:—என்னைப்பற்றி என்ன! உன் மாமா இரவு முழுவதும் கண்களைக் கொட்டவே இல்லை.

சித:—கேட்பவர்களுக்குப் பலவிதமாய் மூகாந்திரம் சொல்ல வேண்டியதாயிற்று. மற்றொரு தடவை இவ்விதம் உன் உறவினர்களுக்குத் தொந்திரவு கொடுக்காதே. எவ்விதமாயினும் உன் வயிற்றை அலம்ப நீயே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

கோ:—(விசனத்துடன்) வாயினாற் கூறினால் போதுமா? எவ்விதம் ஏற்பாடு செய்து கொள்வது?

சித:—(கடுகடுப்பாய்) மூட்டை தூக்கியாயினும் பரிசாரகம் செய்தாயினும் எவ்வித இழி தொழிலாயினும் கௌரவம் பாராட்டாமற் செய்யவேண்டியது. உன்னைப்போல் நான் இருந்தால் பிறர் உதவி தேடுவதைக் காட்டிலும் அவ்விதமே செய்வேன்.

கோ:—மூட்டை தூக்குவதையும், சமையல் செய்வதையும் எளிதாய்க் கூறி விட்டீர்கள். நாம் மூட்டை தூக்குவதாய்ச் சென்றபோதிலும் நம்பிடம் மூட்டையைக் கொடுக்கவேண்டாமா? உண்மையில் மூட்டை தூக்கியல்ல என்று தெரிந்து கொள்கிறார்கள். சமையல் வேலைக்குச் சென்றால், எஜமானர் இறங்கி அனுமதி கொடுப்பினும் எஜமானி 'பேனா பிடித்த கை கரண்டி பிடிக்குமா? வேலை இல்லாமல் ஓர் ஆளை உட்காரவைத்துச் சோறுபடைக்க யாரால் ஆகும்?' என்று துரத்திவிடுகிறாள்.

சித:—துரைபோல் இருக்கவேண்டுமென்றால் பிறவிச் சீமானாய் இருக்கவேண்டும். ரயில் பிரயாணமென்றால் எனக்குப்பிடிப்பதில்லை. மேலும் உடம்பிற்கும் ஒத்துக்கொள்வதில்லை. ஒரு முறை வந்து பார்த்து விடுகிறேன். அப்படி என்ன குபேரப் பட்டணம்! ரூபாயாக விழுகிறதற்கு? (ஐயருக்கு வறுமையின் அனுபவம் போதாது. சுகமாய் வேளா வேளையிற் சாப்பிட்டவர்)

கோ:—மாமா! அப்படியே செய்யுங்கள். என்னுடன் வந்தால் நான் கூறியவளவும் உண்மை என அறிந்து வரலாம்.

சித:—இப்பொழுது பனிநாள். பிரயாணம் செய்வது உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. வருஷப்பிறப்பு ஆனதும் புறப்பட்டு வருகிறேன். நீ தங்கியிருக்கும் ஹோட்டலின் விலா

சத்தைத் தெரிவித்து விட்டு போனால் புறப்படுமுன் கடிதம் எழுதுகிறேன்.

அவ்விதமே கோபாலன் தெரிவித்து விட்டு மறுநாள் சென்னை போய்விட்டான். மாமனும் மாமியும் இவன் சொன்னதெல்லாம் பித்தலாட்டம் என்றும் போய் உண்மையை உணர்ந்து வரவேண்டுமென்றும் பேசிக்கொண்டார்கள்.

சித்திரை பிறந்ததும் ஒரு நல்லநாள் பார்த்து சிதம்பர அய்யர் சென்னைக்குப் பிரயாணமானார். ஓர் சிறிய கைப்பெட்டியும் கூஜாவும் எடுத்துக் கொண்டு மனைவியிடம் விடைபெற்று வாசலில் வந்து நின்று கிழக்கும் மேற்கும் பார்த்து சகுனம் பார்த்துக்கொண்டு, வேலைக்கார ராமன் சாமான்கள் எடுத்துக்கொள்ள, ரயில் ஸ்டேஷனை நோக்கி நடக்கலானார். சிவகாமு அம்மாள் வாயிற்படிவரை வந்து "பெட்டி பத்திரம்; உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். குழாய்த் தண்ணீர் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாது. வீட்டை விட்டு வெளியில்போய் வழக்கமில்லை உங்களுக்கு. தாமதமில்லாமல் புறப்பட்டு வந்து விடுங்கள்" என்று அடுத்தகத்துக் கிருஷ்ண அய்யர் காதில் பட்டதும் படாததுமாய்க் கூற, வழி அனுப்ப வந்த அவரும் "ஆம், சிதம்பர அய்யரே! பெண்டுகளுக்குக் கவலை வைக்கக்கூடாது. சீக்கிரம் வந்து விடும். வீட்டை நாங்கள் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுகிறோம். போய்க் கடிதம் போடும்" என்றார்.

ஸ்டேஷனுக்கு வந்து மூன்றாம் வகுப்பு டிக்கெட் ஒன்று வாங்கிக்கொண்டு ராமனுக்கு ஒரு அணாக் கொடுத்து வீட்டைத் தாம் வருமளவரையில் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி எச்சரித்துவிட்டுவண்டியில் உட்கார்ந்தார். புதிதாய்ப் பிரயாணம்செய்பவராதலால் வெகுநேரம் விழித்திருந்து ஒவ்வொரு ஸ்டேஷனையும் எழுந்து பார்ப்பதும் படுப்பதுமாய் இருக்க நடு இரவில் அயர்ந்து நித்திரை போய்விட்டார். காலை ஆறு மணிக்கு ரயில் எழும்பூர் வந்து நின்றதும் கண்ணை விழித்துக்கொண்டு எட்டிப் பார்க்க, கூலியாள் ஒருவன் 'சாமி, மூட்டையை குடுங்க; இங்குதான் இறங்கவேண்டும்' என்றான்.

அய்யர் அறையிற் பார்க்கப் பெட்டியைக் காணோம். நன்றாய் நான்கு புறமும் மேலும் கீழும் பார்த்தும் தென்படவில்லை. ஜனங்கள் அவரவர் மூட்டைகளை எடுத்துக் கொண்டு இறங்கி விட்டார்கள். இப்பெட்டியில்தான் டிக்கெட்டும் பணப் பையும் வைத்திருந்தார். பட்டணம் போனால் ஜோராய் உடை உடுக்க வேண்டுமென்று சில ஜரிகை வஸ்திரங்களும் ஒரு தங்க கடிகாரச்சங்கிலியும் வைத்திருந்தார். எல்லாம் களவு போய்விட்டது. புறப்படும் போதே அம்மாள் சாமான்கள் ஜாக்கிரதை என்று எச்சரித்திருக்கிறாள். புறப்படும் அவசரத்தில் மருமகனுக்கு ரயிலடிக்கு வரும்படி எழுதத்தவறிவிட்டார். ஊரோ புதியது. கையில் தம்பிடி காசு கிடையாது. மேலும் டிக்கெட் கூடக்காணாமல் ரயில் அதிகாரிகள் சந்தேகித்து வெளியே விடாவிட்டால் என்ன செய்வது? அய்யர் பிளாட்பாரத்தில் திகைத்து நிற்பதைக் கண்டு டிக்கட் கலெக்டர் (Ticket please) 'டிக்கட் ப்ளீஸ்' என்றான். அய்யர் மௌனமாய்ப் பல்லைக்காட்டி 'பெட்டி களவு போய்விட்டது' என்று கையைப் பிசைந்தார்.

அதிகாரி:—களவு போனது உண்மையானால் உடனே அறையில் தொங்கும் சங்கிலியை பிடித்திழுக்க ரயில் நின்றுவிடுமே. நீர் சொல்வது உண்மையாய்த் தோன்றவில்லை. டிக்கட் வாங்காத குற்றத்திற்காக இரட்டிப்பான தொகை கட்டவேண்டும். ரயில் அதிகாரிகளை ஏமாற்றுவது முடியாத காரியம். எடுமே ரூபாயை' என்று மிரட்டினான்.

சிதம்பர அய்யர் தன்னுடன் வண்டியிலிருந்தவர்களைக் கேட்க உண்மை விளங்குமென்று மன்றாடியும் காதில் வாங்காமல் இவரை ஓர் அறையில் தள்ளித் தாளிட்டுத் தலைமை துரை ஆபீசுக்கு வருமளவும் அவ்விடமே இருக்கும்படி கூறிச்சென்றான்.

என்ன செய்வார் பிராமணன். முதல் நாள் பிற்பகல் மூன்று மணிக்குச் சாப்பிட்டது. பல் கூட இன்னும் விளக்கவில்லை. படுக்கை விட்டெழுந்ததும் ஸ்நானம் செய்ததும ஒரு சொம்பு காப்பி பருகியாய்விடும். மணிபத்தாகிவிட்டது. டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ததாய்க் குற்றம் சாற்றிக் கொட்டகையில் அடைத்துவிட்டாலவார் கேள்வி. ஊருக்குத் தந்திகொடுத்துப் பணம் வரவழைப்பதற்கும் கையிற்காசு இலலை. இவ்விதமாய் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் தருவாயில் சேவகனொருவன் இவரைப் பெரிய துரையின் முன்பு அழைத்துப்போனான். அய்யருக்கு மார்புபடபடத்துக் கண்களில் நீர்ததும்பிவிட்டது. துரையுடன் நேரில் சம்பாஷித்து நடந்தவைகளைக்கூற ஆங்கில பரிச்சயம் போதாது. சலாம் செய்து துரையின் முன்பு தாழ்மையுடன் நின்றார். அய்யரைப் பிடித்த நல்ல காலம் துரை இவர் பரிதாபமான நிலையைக்கண்டு களவு போனது உண்மைதானென நம்பி விட்டுவிட உத்தரவு அளித்துவிட்டார். குடம் பால் நடராஜனுக்கு அபிஷேகம் செய்வதாய் அய்யர் எண்ணிக் கொண்டார். ஸ்டேஷனை விட்டு வெளி ஏறினதும் வெயில் கடுமையாய்க் காய்ந்து கொண்டிருந்தது. எங்கு போவது என்று புலப்படவில்லை. அங்கு சிலரைக் கேட்டு தெரிந்துகொண்டு ஒரு ஹோட்டலின் வாயிற் புறத்தில் வந்து நின்று எட்டிப் பார்க்க யாவரும் போஜனம் செய்து கொண்டிருந்தார்கள். ஹோட்டல் அதிகாரி 'யார் அது?' என்றான்.

'நான்தான் அயலூர் பிராமணன்; போஜனம் ஏற்பாடு செய்யவேண்டும்' என்றார்.

ஹோட்டல்காரன் உடனே இலை போட்டுப் பரிமாறச் சொல்லிவிட்டு எட்டணா கொடுத்து உள்ளே போகும்படி சொல்ல அய்யர் பசபசவென்று விழிக்கலானார் 'ஐயா,சாமான்கள்களவு போயின' என்று ஆரம்பிக்கு முன் ஹோட்டல்காரன் 'போதும் நிறுத்தும்; எவ்வளவோ பெயர் வழிகள் பதி கொடுத்தவர்கள். நாங்கள் தர்ம சத்திரங்கள் வைக்கவில்லை, வந்த வழியைப் பார்த்துக் கொண்டுபோம' என்றுரைத்துவிட்டுக் கதவை இவர் முகத்தில் படீர் என்று சாற்றிக்கொண்டு உள்ளே போய் விட்டான்.

தெருக் குழாய் ஒன்றில் பல்விளக்கிக் கைகால்களை சுத்தம் செய்துகொண்டு வீடுகளிற் போய் போஜனம் செய்யலாமென்று மனதை திடப்படுத்திக்கொண்டு பிராமணர்கள் வசிக்கும் தெருவு ஒன்றை அடைந்து வினவ, சிலர் 'மணி பன்னிரண்டாகி விட்டது. எஜமானர் வேலைக்கும் போய்விட்டார். சிறிது முன்பே வந்திருந்தால் கிடைக்கும். இனி முடியாது' என்றார்கள். சில சீமாட்டிகள் 'ஓய் பிராமணா! மத்தியானம் எல்லாரும் உண்ட பிறகு சாதமேது. சமையற்காரனும் வெளியே போய்விட்டான. போடுவார் யாருமில்லை' என்று அனுப்பி விட்டார்கள் சிலவிடங்களில்வாயிற்சேவகர்கள் உள்ளே நுழையக் கூடாதென்று துரத்தி விட்டார்கள். அகாலமாகிவிட்டது; பசி காதடைக்கிறது; நாவுலர்கிறது; கால்வெயிலில் அலைந்து சோர்ந்துவிட்டது இவ்வளவு சீமான்கள் நிறைந்தவிடத்தில் ஏழை ஒருவனுக்கு அன்னமளிக்கும் புண்ணியவான்கள் யாரும் முற்பட்டிலர். கிராமங்களில போல் யார் வேண்டுமானாலும் திண்ணையிற் படுத்துறங்கப் பட்டணங்களில் சமமதிப்பதில்லை. புருஷர்கள் வெளிச் செனறு ஸ்திரீகள் தனித்திருக்க வண்டியிருப்பதால்

ஆடவர்கள் திண்ணையில் உட்காருவதும் படுப்பதும் அனுமதிக்கப்படவில்லை. மெய் சோர்ந்து துக்கம் தொண்டை அடைக்க சிதம்பர அய்யர் மருமகன் கையில் காசு இல்லாமல் பட்ட கஷ்டங்களை எண்ணிக் கொண்டார். அதை உணராமல் கடிந்துரைத்தோமே என்று மனம் வருந்தினர். கையிற் காசு இல்லாமல் ஒரு நாட்பொழுது போக்குவது இவ்விதமிருக்கப் பல நாட்கள் எப்படி கழித்தானோ என்று ஏங்கினர். நாம் கடிந்துரைத்தபோதும் எவ்வளவு பொருமையாய் பதில் உரைத்தான் என்று வியந்தார். இவ்விதம் பலவித எண்ணமிட்டுக் கொண்டே ஓர் மரத்தடியிற் படுத்து பசிக் களைப்பால் சோர்ந்து நித்திரை போயினர். கண்ணை விழிக்கும்பொழுது சாயங்காலமாகிவிட்டது. வெயிற்கொடுமை குறைந்து குளிர்ந்த காற்று வீசலாயிற்று.

சிதம்பர அய்யர் யாரையேனும் மீண்டும் யாசித்து மைலாபூர் சேர்ந்து விட்டாற் போதுமென்று அங்குமிங்கும் பார்த்துமெள்ளக் கடை வீதிப் புறமாய் நடந்தார். பட்டணம் ரஸ்தாவில் நடந்து அனுபவம் போதாமையாலும் பசியின் தளர்ச்சியாலும் இவர் தாறுமாறாய் நடப்பதைக் கண்டு மோட்டார் வண்டிக்காரர்கள் ஒதுங்கும்படி மிரட்டினார்கள். போலீஸ் செந்தலைப்புலி ஒருவன் மடியைப் பிடித்து ஒரு புறமாய்த் தள்ளினான். பட்ட சிரமங்கள் போதாதென்று வசை வேறு கிடைத்தது. நடராஜனை மனதுள் துதித்து ஒரு புறமாய் ஒதுங்கி நிற்க, கடையிற் சாமான்கள் வாங்க வந்த பெண்மணி ஒருவள் பார்த்து மனமிரங்கி வினவ, அவளிடம் யாவற்றையும் கூறி ஏதாவது உபகரிக்கவேண்டினார். அம்மாதும் பிராமணர் நல்ல சாதுவாய் இருப்பதை அவர் முகக்குறியால் உணர்ந்து நாலணாவை அவர் கையிற் கொடுத்து போஜனம் செய்யும்படி கூறினாள். அய்யரும் நடராஜனின் கிருபையில் நீண்ட காலம் பிள்ளைகுட்டிகளுடன் க்ஷேமமாய் இருக்கவேண்டுமென்று வாழ்த்தி 'அநேகருக்கு அன்னமளிக்கும் செல்வம் தமக்கிருந்தும்பேருடம்பைச் சுருக்கிக்கொண்டு வீடுவீடாய்ப் பிச்சை கேழ்க்க நேர்ந்ததே! இது பற்றி யல்லவோ பகவானும் பலிச்சக்ரவர்த்தியின் யாகத்தில்மூன்றடி மண் யாசித்தபொழுது தன் அகண்டமான திருவுருவைக் குறுக்கி வாமனராய் யாசித்தனர் போலும்!' என்று எண்ணி, பின் வண்டிகள் நிற்குமிடம் சென்று தன்னை மைலாபூர் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். நாலணாவை அப்படியே பண்க்காரனிடம் அளித்துத் தன்னை சங்கர அய்யர் ஹோட்டல் முன்பு கொண்டுபோய் விட்டால் மேலும இனும் தருவதாய் வாக்களித்தார். தீபம் ஏற்றும் தருவாயில் பண்க்காரன் அய்யரை ஹோட்டலின் முன்பு இறக்கிச் சென்றான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல் கோபாலன் கடற்கரைக்குப்போக வாயிலில் வர இருவரும் சந்தித்தார்கள். சிதம்பர அய்யர் மருமகனைப் பேசவொட்டாமற் கட்டி அணைத்து விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டார். கோபாலனுக்கு ஒன்றும் விளங்கவில்லை அவரை மெதுவாய்ச் சமாதானம் செய்து தனது அறைக்கு அழைத்துச் சென்று வினவ, நடந்த வரலாறு யாவற்றையும் கூறி "இப்பட்டணத்தில் பணமில்லாதவர் பிணத்திற்கு சமானம். இப்பொழுதானப்பா தெரிந்தது நீ பட்ட சிரமம். என் கண்ணே! எப்படியடா சகித்தாய் வறுமையை? நீ தெய்வந்தானப்பா" என்று கண்ணீர் சொரியக் கோபாலனுக்கும் துக்கம தொண்டையை அடைத்தது. மனதைத் தேற்றிக்கொண்டு முதலில்சாப்பிட்டுப் பிறகு பேசிக்கொள்ளலாம் என்றான். அய்யர் கையில் காசு இல்லையே என்று ஏங்க 'மாமா, வேண்டுவது தருகிறேன். எனக்கு ஹிந்துப்பத்திரிகையில் மாதம 50 ரூபாய்சம்பள

மாகிவிட்டது. நீங்கள் உதவிய ரூபாய் இருபத்தைந்தும் இதோ இருக்கிறது" என்று சலசலவென்று ரூபாய்களை மேஜையின்மீது கொட்ட, அய்யர் அவைகளைத் திருப்பக்கொடுக்கவேண்டாமென்று மறுத்து ஆவலாய் போஜனம் முடித்துக்கொண்டார்.

கோ:—ஏன் மாமா! நீங்கள் முதலிலேயே போலீஸ் ஸ்டேஷனில் கிராம முன்சிப்பு என்பதை தெரிவித்து, சாமான்கள் களவு போனதிறகு எழுதி வைத்திருக்கலாமே. அவர்களே தங்களுக்கு உதவி செய்து ஊருக்கும் தந்தி அடித்துப் பணம் வரவழைத்தும் கொடுத்திருப்பார்களே. எனக்காயினும் வருவதற்கு முன் ஓர் கடிதம் வரைந்திருக்கலாமே.

சித:—நான் இருந்த ஸ்திதியில் என்னை ஓர் கிராம முன்சீப்பு என்று சொல்லிக்கொள்ள மிகுந்த வெட்கமாயிருந்தது. மேலும் அவர்கள் என்னை நம்பி உதவிசெய்வார்கள் என்று நான் நம்பவில்லை.

கோ:—இப்பொழுதே போலீஸ் (complaint) கம்ப்ளேய்ண்டு செய்து விடுகிறேன். அநேகமாய்ச் சாமான்கள் கிடைத்துவிடும்.

சித:—அப்படிக் கிடைக்குமானால் நீயே என் அடையாளமாய் கடிகாரத்தை வைத்துக்கொள். பட்டணம் பார்க்க வந்தது போதும்! நல்லவேளையில் ஊர்போய்ச் சேருகிறேன். இவைகளை அம்மாமி கேட்டால் மிகவும் வருந்துவாள். உன் கஷ்டங்களை உணராமல உதாசீனமாய்ப் பேசியதற்கு மன்னித்துவிடு.

கோ:—“மாமா, ஆயாசப்படாதீர்கள். போனது போகட்டும். நீங்கள் என்மேல் மனமிரங்கிச் சகாயம் செய்து என்னை வீட்டிலேயே வைத்திருப்பீர்களாயின் இந்த ஐம்பது ரூபாய்ச் சம்பளத்தை நான் பெற்றிருக்க மாட்டேன். தெய்வம் ஒவ்வொன்றையும் நமக்கு நலமாகத்தான் செய்கிறது. நாளை நான் உங்களைக் கூட அழைத்துப்போய் எல்லா விநோதங்களையும் காக்ஷிகளையும் காட்டுகிறேன். சில தினங்கள் இவ்விடமே இருந்து போகலாம். ஊரில் உள்ளவர்களுக்குப் பட்டணத்து விமரிசைகள் கூறவேண்டாமா?” என்று தேற்றினான்.

இவ்விதம் இருவரும் பேசிக்கொண்டு இராப்பொழுதைக் கழித்தனர். சிதம்பர அய்யர் கோபாலன் குணத்தை மனதுள் எண்ணி எண்ணி மகிழ்ந்து மனையாளிடம் கூறித் தனக்குப் பின் தன் சொத்துக்களை அவனே அடையவேண்டுமென்று ஏற்பாடுசெய்யத் தீர்மானித்துக்கொண்டார். இனி யார் தன் வீடுதேடிப் போஜனம்கேட்பினும் மறுப்பதில்லை என்றும் உறுதி செய்து கொண்டார். தன் மைத்துனர்பெண்ணை கோபாலனுக்கு விவாகம் செய்து விட்டால் மனைவிக்கும் மனது சந்தோஷமாகிவிடும், அவனைச் சேர்ந்தவர்களுக்கும் ஆயாசமிராது என்று திடம் செய்து கொண்டார்.

ஸ்திரீகள் என்ன செய்ய வேண்டியது?

(ஸ்ரீமான் K. அனந்தாசாரி, B.A.)

நமது நாடு முன்னேற்றமடைய வேண்டியதற்கு அநேகவித சீர்திருத்தங்கள் நம்மவரில் ஏற்படவேண்டுமென்பது அவசியம். அதிலும் ஸ்திரீகளில சில முக்கியமான மாறுதல்கள் அதிசீக்கிரம் உண்டாகவேண்டும். மிஸ் ஆன் ஸ்மீடி என்னும் ஐரோப்பியப்பெண் “பாரத்” என்கிற பத்திரிகையில் ‘இந்தியாவில் பெரிய ஸோஷல் கிளர்ச்சி (Social Revolution) உண்

டாகவேண்டும் இப்பொழுது இருக்கும் பழக்கங்கள் அடியோடே ஒழியவேண்டும். அம்மாதிரி மாறுதல்களைத் திடீரென்று ஏற்படுத்தி ஐரோப்பிய வழக்கங்களை ஸ்தாபிக்க இக்கால இந்தியச் சிறுவர்களும் சிறுமிகளும் முன்வரவேண்டும்’ என்று எழுதியிருக்கிறார் ‘ஆனால் நமது ஜாதி வழக்கங்களை மாற்றுவதற்கு நாங்கள் என்ன செய்யலாம்; எல்லாம் புருஷர்கள் கையில்தானிருக்கிறது’ என்று சில பெண்கள் சொல்லலாம். இது முற்றிலும் உண்மையன்று. ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீகளுக்குச் செல்வாக்கு (influence) அதிகமாயிருக்கிறதென்பதில் ஐயமில்லை. ஏதோ சிற்சில விஷயங்களில் புருஷர்கள் முரட்டுத்தனமாய்த் தங்கள் இஷ்டப்படி நடக்கிறார்கள் என்பதைத்தவிர புருஷர்கள் ஸ்திரீகளை முக்கியமான விஷயங்களுக்கு யோசனை கேழ்க்காமல் இருப்பதில்லை. ஆகையினால் இந்த மாறுதல்களைக்கொண்டு வருவதற்குத் தற்காலப் பெண்களே முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி அவர்கள் உண்மையாக முயற்சி யெடுத்துக்கொண்டால் சிறுவர்களும்கூட ஒத்துழைப்பார்கள் என்பது நிச்சயம்

மிஸ். ஸ்மீடி “இந்தியர்கள் தங்கள் ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவதில் இஷ்டமில்லாதவர்களாயிருக்கிறார்கள் அவர்கள் ஸ்திரீகளை அவ்வளவு தெய்வீகமாயும் (Sacred) உயர்வாயும் வைத்திருக்கிறார்களானால் அதுவும் கிடையாது” என்று அதே பத்திரிகையில எழுதுகிறார். புருஷர்கள் ஸ்திரீகளை வேலைக்காரர்களைப்போல் வேலை வாங்கிக் கொள்வதோடு அவர்களை அடித்தும் ஹிம்ஸை செய்தும் வருகிறார்கள். எனக்குத் தெரிந்த இடத்தில் ஒரு பெண்ணை மூர்க்கத் தனமான அவள் புருஷன் அடிப்பது வழக்கம். ஒருநாள் அதிக கோபத்தினால் அவன் அருகிலிருந்த ஒரு உலக்கையால் அவளை அடிக்க அவள் முதுகு எலும்பு முறிந்து விட்டது. பெண் வலி பொறுக்கமாட்டாமல் பிறந்த வீட்டிற்குக் கடிதம் எழுத, அவர்கள் வந்து பட்டணத்திற்கு அழைத்துச் சென்று ஜனரல் ஆஸ்பத்திரியில் எக்ஸ்-ரே (X-Ray) படம் எடுத்துப் பார்த்துப் பிறகு ஒரு பெரிய டாக்டரால் உயிர் காப்பாற்றப் பெற்றாள். மறுபடியும் அப்பெண் புருஷனிடம் போயிருப்பதா என்று பெரிய வாதம் ஏற்பட்டு, பிறகு அவள் தாயார் மற்று முள்ளவர்கள் புருஷனிடத்தில் தான் போயிருக்கவேண்டும் என்று சொல்லி அப்பெண்ணை அழுத வண்ணமாகப் புருஷனிடம் கொண்டுபோய் விட்டார்கள். இந்த விஷயத்தில் குடும்பத்திலுள்ள எல்லா ஸ்திரீகளும் கட்டுப்பாடாய் பெண்ணை அனுப்பவே கூடாது என்றால் பெண்ணைச் சேர்ந்த புருஷர்களும் சும்மாயிருந்திருக்க மாட்டார்களா?

நமது பெண்கள் முதலில் அவர்களுள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பொறாமை, கர்வம், அகங்காரம், கோபம், வீண் பெருமை, சூது, வஞ்சகம் முதலிய துர்க்குணங்களை ஒழித்து, ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டும். கல்வி பயின்றிருப்பவர்கள் படிக்காத சகோதரிகளிடம் பன் மடங்கு பிரியம் காட்டவேண்டும். படித்த பெண்களும் தனவான் வீட்டுப் பெண்களும் அவர்களுக்குள்ளேயே சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு மற்ற ஸ்திரீகளை அலட்சியம் செய்கிறார்கள். ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் ஸ்திரீகள் கட்டுப் பாட்டினாலேயே அநேக காரியங்களைச் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஸ்திரீகள் மனது வைத்தால் அவர்களால் ஆகக்கூடாதது ஒன்றுமில்லை என்று நமது சாஸ்திரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் சில விஷயங்களைக் கவனிப்போம். விவாகங்கள் பெண்களுக்குப் பத்துவயதுக்குள் செய்துவிட வேண்டுமென்று பெண்களின் தாய்

மார்கள் வற்புறுத்தா விட்டால் புருஷர்கள் சிரத்தை எடுத்துக்கொள்ளவே மாட்டார்கள். ஸ்திரீகளின் தொந்தரவினாலேயே புருஷர்கள் தங்கள் சொத்துக்களை விற்று வரதட்சணை கொடுத்துப் பத்து வயதுக்குள் கலியாணம் செய்து வைக்கிறார்கள். ஆனால் சில வருஷங்களாக இந்த வழக்கம் மாறுபட்டு வருகிறது. அதிகமாகத் தங்கள் அந்தஸ்துக்கு மீறி வரதட்சணை கொடுத்து அநேகக்குடும்பங்கள் கெட்டுப் போனதை நாம் தெரிந்துகொண்டோம். இரண்டு மூன்று வருஷங்களாக வரதட்சணை குறைந்து விட்டது. இதற்கு வேறு காரணமும் உண்டு. தங்கள் சொத்துக்களை விற்று பி.ஏ., எம்.ஏ. படித்துத் தேறின அநேக வாலிபர்கள் தங்கள் ஜீவனத்துக்குக்கூட சம்பாதிக்க வேலை அகப்படாமல் கஷ்டப்படும்படி ஏற்பட்டுவிட்டதால் படிப்புக்கு இருந்த கௌரவமும் குறைந்து விட்டது. ஆகவே இப்பொழுது பெண்களைத் தகுந்த ஆஸ்தி உடையவர்களுக்கே மணஞ் செய்விக்க வேண்டுமென்று எல்லாரும் தீர்மானித்து விட்டார்கள். இதனால் இன்னொரு கெடுதலான வழக்கம் அதிகரிக்கின்றது. மருமகனுக்கு ஆஸ்தியிருக்கவேண்டு மென்பதையே பிரதானமாக எண்ணுகிறபடியால் அநேகர் பெண்களை வயது சென்றவர்களுக்குக் கலியாணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். "ஏன் ஐயா! தாங்கள் பெண்ணை வயது சென்றவனுக்குக் கொடுக்கவேண்டும்" என்று ஒருவரைக் கேட்டதற்கு அவர் "பி.ஏ. படித்துவிட்டு முப்பது ரூபாய் சம்பளத்துக்கு லாட்டரி போடுகிறான். இவனென்று இறந்து விட்டாலும் என் பெண்ணுக்கு அறுப்பதற்குக் கூடத்தாலி இல்லாமல் விட்டுவிடுகிறான். இதைவிட வயது சென்றவனுக்குக் கொடுத்தால் அதிகப் பிரியமாய் வைத்துக் கொள்வதோடு அவன் இறந்தாலும் பெண்ணுக்கு ஏராளமான சொத்துக்களை வைத்து விட்டுப் போகிறான்" என்று பதில் சொல்லுகிறார். இவர் சொல்லும் கட்சி ஒருவிதத்தில் நியாயந்தான். ஆனால் பெண்ணின் மனம் எப்படியிருக்கிறது என்பதை இவர்கள் சற்றும் கவனிப்பதில்லை. "அசட்டுக்கு வாழ்க்கைப்பட்டு ஆயிரம் வருஷங்கள் வாழ்ந்திருப்பதைக்காட்டிலும் சமத்துக்கு வாழ்க்கைப் பட்டுக் கொஞ்சகாலம் வாழ்ந்தால் போதும்" என்று ஸ்திரீகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். வயதும், அழகும், கல்வியும் உள்ள சிறுவர்களைப் பெண்கள் விரும்புவார்களேயொழிய வயது சென்றவர்களை எவ்வளவு சௌகரியங்கள் இருந்த போதிலும் விரும்பமாட்டார்கள். இதைப்பெற்றோர்கள் யோசிப்பதில்லை. இந்த மாதிரி விஷயங்களில் பெண்கள் தங்கள் மனதை வெளியிட்டுச் சொல்லவேண்டும். தற்காலத்தில் பெண்களுக்குப் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதுக்கு மேல் கலியாணப் பேச்சு நடந்து மாப்பிள்ளைகள் பெண்ணைப் பார்ப்பதற்கு வரும்போது ஏன் பெண்கள் தங்கள் மனதுக்கிசைந்த புருஷனை மணஞ் செய்துவைக்கும்படி சொல்லக்கூடாது? அல்லது பெண்ணைச் சேர்ந்த ஸ்திரீகளாவது அவளது மனதை அறிந்து தக்கபடி புருஷர்களிடம் சொல்லி மணஞ் செய்விக்கவேண்டும். இம்மாதிரி செய்யவேண்டிய கடமைகளை நம்மவரில் ஒருவரும் கைக் கொள்ளாமலிருப்பதால் புருஷர்கள் தங்கள் இஷ்டப்படி கலியாணத்தை நிச்சயம் செய்து விடுகிறார்கள். இதனால் ஏற்படும் தீங்குகள் அநேகம். வெகு குடும்பங்களில் ஸ்திரீ புருஷர்கள் ஒற்றுமையில்லாமலும், அதனால் மற்றுமுள்ள பந்துக்களுக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இல்லறவாழ்க்கையில் புருஷன் மனைவியின் ஒற்றுமையே முக்கியமானது. அதில்லாமல் நம்மவரில் அநேகரின் வாழ்க்கை பயனற்றதாகவே முடிகிறது.

சுபத்திரா கலியாணம்.

(ஒரு சிறிய நாடகம்)

(ஸ்ரீமான் S. N. கோபாலகிருஷ்ண அய்யர்.)

(மூன்றாவது மலர் 677-வது பக்கத் தொடர்ச்சி)

மூன்றாங்களம்.

இடம்—ரைவதக பர்வதம்.

காலம்:—பகல்.

பாத்திரங்கள்:—துவாரகை ஜனங்கள்; அர்ஜுனன்.

-வது நகரவாசி:—என்ன ஐயா, இவ்வளவு அவசரமாகப் பயணம்? ஏதேனும் விசேஷமுண்டோ? மேல் வஸ்திரம் கீழே விழுந்தது கூடத்தெரியாமல் மானம்பார்க்கி மகாதேவ சாஸ்திரிபோல் போகிறீரே.

-வது நகரவாசி:—என்ன ஓய்! தெரியாமல் பேசுகிறீர்களே. மகாதேவ சாஸ்திரியுமாச்சு. மானம்பார்க்கியுமாச்சு. நாளையதினம் ரைவதக பர்வதத்துத் திருவிழாவல்லவோ. நீர் மறந்துபோய்விட்டீரா? அங்கே போனால் ப்ரைச் சொன்ன சாஸ்திரியையும் நீர் பார்ப்பீர். நீர் என்ன யதுவம்சத்தைச் சேர்ந்தவராயிருந்தும் இக்கேள்விகளை யெல்லாம் கேட்கிறீர்களே. எனக்கே வெட்கமாயிருக்கிறது.

-வதுநகரவாசி:—கோபிக்காதேயுமய்யா. நான் உங்கள் வம்சத்தைச் சார்ந்தவனல்லன். உங்கள் வம்சமாயிருந்தால் நான் ஏன் இக்கேள்விகளைக் கேட்கிறேன். அது தெரியாமல் என் மேல் கோபிக்கிறீரே. அதிருக்கட்டும். திருவிழா எப்படியிருக்கும்?

-வது நகரவாசி:—மிகவும் நன்றாயிருக்கும். அதெல்லாம் எதற்கு. நீர் வந்து பார்க்கவேண்டுமானால் வாரும். என்னுடன் போகலாம்.

(போகிறான்)

1-வது நகரவாசி:—இருமய்யாவருகிறேன். ஏது பெரிய அவசரக் குடுக்கையாயிருக்கிறீரே. உம்! வேகமாய் நடக்கய்யா!

(போகிறார்கள்).

ஒருவர்:—ஏண்டா! ஸ்நானமாச்சோ இல்லையோ? நாழியாயிடுத்துடா. சீக்கிரம் மங்கள ஸ்நானம் செய்து பட்டுமடி உடுத்திண்டு வாடா. போ சீக்கிரம்.

மற்றொருவர்:—உம் ஏண்டா! சும்மாநிக்கரே. மேலே ஆகவேண்டிய காரியத்தைப் பாரேன். நல்ல புது வேஷ்டிகளை எல்லாம் எடுத்து ஜோராக் கட்டிக்கடா. திருவிழாச் சமயத்துலேதானே இதெல்லாம் உபயோகிக்கணும். போய் அம்மாகிட்ட இருக்கிற நகையெல்லாம் நீ வாங்கிப் போட்டுக்கொண்டுவா. போ.

ஒருவர்:—பேஷ் இதல்லவோ அழகு. இப்பதான் ஜில்லுனு ஆடுதன் ராஜாக்கணக்கா இருக்கு. சரிதான். "அதுவெல்லாம் கொறச்சவில்லை ஆட்டாபூசாரி" இன்னும் அதுபோவிருக்கடா. இவ்வளவு சாமானும் யாரிட்டேடா கடன் வாங்கினே நீ. சரி அதிருக்கட்டும். நாமெல்லோரும் அந்தப் பக்கம் போய் விடலாம். தொட்டில் நாட்டணம் ஜோராயிருக்கு. 3 காசுக்கு 30 சுத்து சுத்தரான்.

(எல்லோரும் போகிறார்கள்)

(யதுவம்சத்துக் குமாரர்கள் பிராமணர்களுக்கு தானங்களை வழங்குகிறார்கள். ஒரு பக்கத்தில் சந்நியாசி உட்கார்ந்திருக்கிறான்.)

கிருஷ்ணன்:—என்ன சாம்பா? தானமெல்லாம் செய்தாய் விட்டதா? நானும் செய்யவேண்டிய தானம் முதலான காரியத்தைச் செய்கிறேன். ஓய் மகாதேவ சாஸ்திரியாரே! இப்படிச் சற்று வாரும். இந்த தானத்தை வாங்கிக் கொள்ளுங்கள்.

பிராமணர்கள்:—உத்திரவு வாங்கிக் கொள்ளுகிறோம்.

கிருஷ்ணன்.—சரி, நமஸ்காரம். ஏ! சாம்பா! அங்கு போவோம் வா. யாரோ ஒரு சந்நியாசி உட்கார்ந்திருக்கிறார் போல் தோன்றுகிறது. போய் வந்தனம் பண்ணுவோம்.

(போய் நமஸ்கரித்தவுடன் இன்னமநேகர் நமஸ்கரித்தார்கள்.)

(ஒருபுறத்திலிருந்து சுபத்திரையும் தோழிகளும் வருகிறார்கள்)

கமலி:—அக்கா! இன்றைய வருஷத் திருவிழா போல் ஒருவருஷமும் நான் பார்த்ததில்லை, என்ன அலங்காரமாக விளங்குகிறது. நம் ஜனங்கள் எல்லோரும் எவ்வளவு அழகான ஆடையாபரணங்களை அணிந்து கொண்டு வந்திருக்கிறார்கள் பார்த்தனையா?

விமலி:—நம்முடன் வரும் சுபத்திரையின் அழகைவிட வேறுயார் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்? சுபத்திரையை இவ்வாடையாபரணங்களோடு நான் பார்த்துக் கொண்டேயிருந்தால் எனக்குப் பசிதாகம் ஒன்றும் தோன்றாது.

சுபத்திரை:—சரி, சரி. இதற்குத் தான் நான் இதையெல்லாம் உடுத்திக்கக்கூடாது என்கிறது. நீங்களாம் இப்படி கேலி பண்ணத்துக்குத்தான் உடுத்திக் கொண்டதோ? இது போறைப் போகிறது. இனிமேல் கேலி பண்ணுதீர்கள்.

கமலி:—அம்மா சுபத்திரை, அதோ பார். யாரோ ஒரு சந்நியாசி உட்கார்ந்திருக்கிறார். ஆடவரெல்லாம் நமஸ்கரித்துக் கொண்டிருக்கின்றனர். நாம் அவரை நமஸ்கரித்து விட்டு வாலாமா?

சுபத்திரை:—ஆடவரிருக்குமிடத்திற்கு நாம் ஏன் போகவேண்டும். நாம்போய் ஏதாவது வேடிக்கை பார்க்கலாம் வா.

(போகிறார்கள்)

(அர்ஜுனன் சுபத்திரையைக் கண்ணுற்ற முதல் காமவிகார மடைதல்.)

கிருஷ்ணன்:—(எல்லோரும் சென்றவுடன் சந்நியாசியைப் பார்த்து) ஓ! சந்நியாசியாரே! உம்மைப் பார்த்தால் உமது மனமானது நாட்டில் சம்சார முதலிய இகலோகப் பொருள்களை நாடுகிறதுபோல் தோற்றுகிறது. இது வாஸ்தவம்தானா? உண்மையை ஒளிக்காமற் கூறும். நான் உமக்கு உதவி புரிகின்றேன்.

அர்ஜுனன்:—ஆம், கிருஷ்ணா! என் மனம் காமக்கடலில் மூழ்கிக் கிடக்கின்றது. உமக்குத் தெரியாமற் போமோ. ஹே! முகுந்தா! நீ மனம் வைத்தால் முடியாமற் போமோ எக்காரியமும்! தயவு செய்து எனக்குதவி புரியவேண்டும்.

கிருஷ்ணன்:—பேஷ்! நல்ல சந்நியாசி! நல்ல ஆஷாட பூதி! வேஷம் சரியான வேஷம் தான்; இருக்கட்டும். சற்றுமுன் இங்குவந்த பெண்ணைப் பார்க்கவே உமக்கு மோகப்பேய் பிடித்து விட்டது. இவள் யார் தெரியுமா? அவளுடைய வாலாற்றைச் சற்றே சொல்லுகிறேன் கேளும்.

அர்ஜுனன்:—நன்கு விவரமாகச் சொல்லும், கிருஷ்ணா.

கிருஷ்ணன்:—அப்பெண்மணி என்னுடைய தங்கை; சுபத்திரையென்னும் பெயருடையவள். என் தகப்பனார் சுபத்திரை மேல் மிகவும் விசுவாச முள்ளவர். ஆதலால் உமக்கு இந்தப் பெண்ணினிடத்தில் கருத்திருந்தால் நானே என் தகப்பனாரிடத்தில் சொல்லுகிறேன். நீர் பயப்படாமற் சொல்லும்.

அர்ஜுனன்:—நான் என்ன சொல்வது! என்னை நீர் அடிக்கடி பரிகாசம் பண்ணுகிறீர். நான் வந்த காரியமே இதுவாயிற்றே. உம் தங்கையின் ரூபலாவண்ணியத்தைப் பார்த்த பிறகும் மகா தவசிரேஷ்டர்களும் மயங்காமலிருப்பரோ? ஆதலால் நீர் இதை வேடிக்கைப் பேச்சாகப் பேசவேண்டாம்.

கிருஷ்ணன்:—சரி, உம்மிஷ்டம்போல் முடிக்க யத்தனிக்கின்றேன்; இவ்வளவுதானே.

அர்ஜுனன்:—அவ்வளவு தான்! வேறொன்றுமில்லை. அவள் எனக்கு மனைவியாவாளேயாகில் சகல மங்களங்களும் வந்தாற் போலாகும். ஆதலால் பரிபூரண கடாக்ஷம் வைத்து நான் கலியாணம் செய்து கொள்ளும்படியான வகையைச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்:—நமக்குள் சுயம்வரம் என்பது ஒன்று உண்டு. அதன்படியே நடக்கலாமல்லவா? உனது கருத்தென்ன?

அர்ஜுனன்:—அதன்படி நடக்கலாம். ஆனால் அதில் பெண்ணினிஷ்டபடியே யன்றி புருஷனிஷ்டப்படி நடக்கமாட்டாது. சுபத்திரை எனக்கு மாலையிட்டாலாச்சுது! எனக்கில்லாமல் வேறு யாருக்காவது மாலையிட்டால் என் செய்வது! வேறு ஏதாவது உபாயம் சொல்லும்.

கிருஷ்ணன்:—ஆனால் சரி; இவ்வுபாயத்தைக் கேள். அது யாதெனில் அரசர்களும் ராஜாக்களும் பெண்களை வலிமையினாலே கொண்டு போகிறதுண்டு. அம்மாதிரி நீர் ஏன் செய்யக்கூடாது. அது உமது சாமார்த்தியத்தைப் பொறுத்து இருக்கிறது.

அர்ஜுனன்:—என்ன முரட்டுபாயம் சொல்லுகிறீர். அதெல்லாம் நடக்காது; நன்கு யோசனை செய்து சொல்லும்.

கிருஷ்ணன்:—வலிமையினாலே கொண்டு போவதுதான் உத்தமம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் அதன்படியே நடந்து கொள்.

அர்ஜுனன்:—அப்படிக்கொண்டு போவதென்றால் சாமானியமான காரியமா? சரியான சந்தர்ப்பம் வாய்த்தால்தான் நல்லது; என்ன செய்கிறது. ஏதோ உமக்கு என்னைப்பற்றின விஷயங்கள் நன்கு தெரிந்திருக்கின்றன. உம் குடும்பத்தில் மற்றவர்களுக்கும் அம்மாதிரி இருக்கும் பக்ஷத்தில் விசாரமில்லை.

கிருஷ்ணன்:—பயப்படாதே. அதற்கெல்லாம் சமயமிருக்கிறது. நான் அச்சமயத்தில் சொல்லுகிறேன். சொன்ன பிறகு எடுத்துக் கொண்டு போய்விடு. நாம் இவ்வாறு நிச்சயித்திருப்பதை யார் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். மற்றவைகளைப் பிற்பாடு பார்த்துக் கொள்வோம்.

அர்ஜுனன்:—சரி, ஆனால் நான் இங்குதானே இருக்கிறேன். திருவிழாவும் முடியும் சமயமாய் விட்டது. நீர் மாத்திரம் தயவு செய்து சமயம் பார்த்துக் கொண்டிருந்து எனக்கு உதவி புரியவேண்டும்.

கிருஷ்ணன்:—அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீர்கவலைப்படவேண்டாம். சமீபத்திலிருக்கும் சோலையில் சிஷ்யர்களை ஏற்படுத்தியிருக்கிறேன். நீர் அவ்விடத்திற் போயிருங்கள். எனக்கு நாழிகையான படியால் துவாரகைக்குச் செல்லுகிறேன்.

(போகிறார்).

(அர்ஜுனன் உட்கார்ந்து கொண்டு சுபத்திரையை தியானித்துக் கொண்டிருக்கிறான்.)

அங்கம் 2 களம் 1.

இடம்—ரைவதக பர்வதம்.

காலம்—பகல்.

பாத்திரங்கள்—பலராமர், சாம்பன், கதன், பானு, அர்ஜுனன், கிருஷ்ணன் முதலியோர்.

பலராமர்:—என்ன சாம்பா! இன்று பொழுது போகவில்லை; பொழுது போவதற்கு என்ன செய்யலாம் சொல் பார்ப்போம், அதோ பார்! கதன் கூட வந்து விட்டான், அவனுக்கும் பொழுது போவதில்லைபோல் தோன்றுகிறது.

கதன்:—(சமீபம் வந்து) என்ன அண்ணா! இன்று வீண் காலமாக இருக்கிறது. கிருஷ்ணன் இருந்தாலாவது ஏதாவது விளையாட்டாகவும் தமாஷாகவும் பேசிக்கொண்டிருப்பான். அவனும்கூட இன்று வேட்டைக்குப் போய்விட்டான்.

பலராமர், சாம்பன்:—ஆகா! உம். அப்படியா! நம் எல்லோரையும் விட்டுவிட்டுப் போய்விட்டான் பாருங்கள். அவன் பெரிய திருடன்! ஏமாந்த சமயம் எங்கே என்று காத்துக் கொண்டிருப்பான்.

பலராமர்:—சரி ஆனால் நாம் இன்று ரைவதக பர்வதம் வரையிலும் போய் வரலாம், நல்ல தென்றல் அடிக்கிறது. இன்னம் நம் சிநேகிதர்கள் பானு முதலியவர்களை அழைத்துவா. சீக்கிரமாகச் செல்வோம்.

(எல்லோரும் போகிறார்கள். பர்வதத்தின் ஓர் புறத்திலிருக்கும் அர்ஜுன சந்நியாசியிடம் போகிறார்கள்).

பலராமர்:—சிநேகிதர்களே, அதோ பாருங்கள். யாரோ ஒரு சந்நியாசி அமர்ந்திருக்கிறார். நாம்போய் வந்தனமளித்து வரலாம், வாருங்கள்.

மற்றவர்கள்:—அப்படியே போகலாம்.

(சந்நியாசியை அனுகி நமஸ்கரித்தவுடன்)

அர்ஜுனசந்நியாசி:—நாராயணா! நாராயணா! எல்லோரும் சற்று உட்காருங்கள். நீங்களெல்லோரும் க்ஷேமந்தானா? யாதவ வீரர்களெல்லோரும் க்ஷேமந்தானா?

பலராமர்:—ஸ்வாமி! ஈசுவரனுடைய அனுக்கிரஹத்தினால் எல்லோரும் க்ஷேமமாகவேயிருக்கிறார்கள். ஏதோ பொழுது போகவில்லையென்று இப்படி வந்தோம். பரமசரித்திரனுக்குப் பெரிய புதையலகப்பட்டது போல எங்களுக்குத் தங்கள் திவ்விய தரிசனம் கிடைத்தது.

அர்ஜுனன்:—எல்லாம் பகவானது அருள். நாராயணா!

பலராமர்:—தேவரீர் யாரோ தெரியவில்லை. எவ்விடத்தினின்று வந்தீர்கள். எதற்காக இப்பர்வதத்தில் எழுந்தருளியிருக்கிறீர்கள் என்பதை அடியேனுக்குத்தெரிவிக்கவேண்டுகின்றேன்.

சந்நியாசி:—அப்பா! என்னைப் போலொத்த சந்நியாசிக்கு ஊர் ஏது? வீடு ஏது? எல்லாவற்றையும் துறந்து காவியுடுத்தி எங்கும் சஞ்சரிக்கும் இக்கட்டையை எங்கிருந்து வந்ததென்று சொல்வது. ஏதோ புண்ணிய தீர்த்த க்ஷேத்திரங்களை தரிசித்து வருகிறேன்.

பலராமர்:—க்ஷேத்திர யாத்திரைகளெல்லாம் செய்தாய் விட்டதோ?

சந்நியாசி:—இன்னமநேக புண்ய ஸ்தலங்களிருக்கின்றன. அவைகளுக்கும் போகவேண்டும். இப்பொழுது ரொம்ப மழைகாலமாதலால் இவ்விடத்தில் தங்கியிருக்கிறேன்.

பலராமர்:—தாங்கள் இப்பிரதேசத்திற்கு வந்தது எங்கள் முன்னோர்கள் செய்த பூஜா பலனே யாகும். இனி இந்த நாட்டிற்கு என்றும் குறைவில்லாத க்ஷேமமுண்டாகும்படி அருளிக்கவேண்டும். தாங்கள் அநேக ஸ்தல க்ஷேத்திரங்களுக்கு சென்றிருப்பதாலும் அவைகளை நன்கு பார்த்திருப்பதாலும் சில ஸ்தல மகாத்மியங்களை உரைக்கவேண்டும். அதைக் கேட்டு சற்று ஆனந்தப் படுவோம்.

சந்நியாசி:—நாராயணா! (சில க்ஷேத்திரங்களின் மகிமையை சுருக்கமாகச் சொல்கிறார்.)

(பலராமர் முதலிய பேர்கள் ஒருபுறமாய் வந்து)

பலராமர்:—என்ன சாம்பா! சந்நியாசியைப் பற்றி என்ன நினைக்கிறாய். மிகவும் யோக்கியராய்க் காணப்படுகிறார். இந்த மழைகாலம் முடியும் வரை இச்சந்நியாசியை நம்மூரிலேயே இருக்கச் செய்வோம். அவரிருக்கத் தகுந்த இடம் வேண்டுமே? எவ்விடத்தில் வீற்றிருக்கச் செய்யலாம். சற்று யோசித்துச் சொல்.

சாம்பன்:—என்ன, நான் சொல்வது என்ன! உனக்குத் தெரியாததா? நீதான் பத்து பேருக்கு யோசனை சொல்வாயே. ஏதோ ஒரு இடம் பார்.

பலராமர்:—நான் பார்க்கிறதென்றால் உன்னையேன் யோசனை கேட்கவேண்டும். ஏதோ கேட்டால் கோணஷ்டை வார்த்தைகள் சொல்கிறாயே.

சாம்பன்:—சரி, கோபித்துக் கொள்ளாதே. நம்மூருக்குக் கிழக்கேயிருக்கும் மடத்தை சுத்தம் செய்து ஏற்பாடு செய்யலாம். அதில் அவரை இருக்கச் செய்யலாம். அது தான் சௌகரியமான இடமென்று தோன்றுகிறது.

பலராமர்:—அந்த இடம் மிகவும் பாழடைந்து விட்டது. கட்டிடமோ பழைய கட்டிடம். எந்த சமயத்தில் யார் தலையில் இடிந்து விழுமோ. அதில் அவரை இருக்கச்செய்தால் வீண் அபவாதத்திற்கு ஆளாகவேண்டும். ஏழேழு தலைமுறைக்கும் அப்பாவம் போகாது. ஆகலால் இதை விட்டுவிட்டு வேறு இடந்தான் பார்க்கவேண்டும்.

சாம்பன்:—சரி, உனக்குத் தகுந்த யோசனை சொல்ல உனது தம்பி கிருஷ்ணனும் அதோ வருகிறான். வேட்டைக்குப் போய்விட்டு உல்லாசமாய் வருகிறான். நீங்களிருவரும் சேர்ந்து ஒரு இடம் பார்த்து அதில் அமர்த்தி விடுங்கள். நாங்கள் சற்று அப்பால் இருக்கிறோம்.

(எல்லோரும் போகிறார்கள்).

அங்கம் 2 களம் 2.

இடம்—பர்வதம்.

காலம்—பகல்.

பாத்திரங்கள்—பலராமர், கிருஷ்ணன், அர்ஜுன சந்நியாசி.

பலராமர்:—என்ன கிருஷ்ணா! எங்களொருவரிடமும் சொல்லாமல் நீ மாத்திரம் தனியாய் வேட்டைக்குப் போய்விட்டாயே. இன்று நல்ல வேட்டைதானா.

கிருஷ்ணன்:—ஆம் அண்ணா! இன்று மிகவும் இன்பமாயிருந்தது. அதனால்தான் சற்று தாமதம். ஏது தாங்கள் இவ்வேளையில் வந்தது?

பலராமர்:—கிருஷ்ணா! இவ்விடம் ஒரு சந்நியாசி வந்திருக்கிறார். மிகவும் யோக்கியர் போல் காண்கிறார். மழையினால் அவஸ்தைப்படுகிறார். ஆகையால் இவரை நமது பட்டணத்திற்குள் அழைத்துச் செல்ல வேண்டுமென நினைக்கிறேன். உனது அபிப்ராயம் என்ன?

கிருஷ்ணன்:—எனது அபிப்பிராயம் என்ன இருக்கிறது? எல்லாம் தங்கள் உசிதம் போல் செய்யுங்கள். தங்கள் திருவுள்ளத்திற்கு மாறாக நான் ஏதேனும் சொல்வேனா?

பலராமர்:—ஆமாம். நமது பட்டணத்திற்குள் அழைத்து வந்துவிட்டோமென நினைத்துக்

கொள். அதைப்பற்றி ஒன்றும் யோசனையில்லை. அவரை எந்த இடத்தில் இருக்கச் செய்யலாம் என்பதல்லவோ கேள்வி. எவ்விடத்தில் வைக்கலாம்? சொல்.

கிருஷ்ணன்:—அண்ணா! நீரிருக்க நான் சொல்வதெப்படி. தலையிருக்க வால் ஆடுமா? உமக்கு எவ்விடத்தில் வைக்க இஷ்டமோ அவ்விடத்தில் வைக்கலாம். இதற்கென்ன யோசனை. அச்சந்நியாசியை எவ்விடத்திலமர்த்தலாமென்ற உத்தேசம் தங்களுக்கு?

பலராமர்:—நீ சொல்வது மிகவும் சந்தோஷமே. சரி, எனக்குத் தோற்றுகிறதைச் சொல்லுகிறேன், கேள்.

கிருஷ்ணன்:—சொல்லுங்கள் அண்ணா.

பலராமர்:—இவர் நமது சுபத்திரையினுடைய கன்னியா மாடத்தில் போஜனம் செய்து கொண்டு நம்முடைய தோட்டத்தில் கொடிகளினால் கட்டியிருக்கும் அறைகளிலே இந்த மழைகாலம் முடியும்வரை வாசஞ் செய்து கொண்டிருக்கட்டும். உனதிஷ்டமென்ன.

கிருஷ்ணன்:—(மனதிற்குள் மிகுந்த சந்தோஷமுடையவராய்) அண்ணா! உம்முடைய சம்மதிக்கும் உத்திரவுக்கும் எதிரில்லை. நீங்களோ மகா புத்திமான். மேலும் பக்திமான். எனக்குப் பெரியவர். ஆதலால் நான் ஒன்றும் மறுத்துச் சொல்லக்கூடவில்லை.

பலராமர்:—என்ன கிருஷ்ணா! மிகவும் சாதுர்யமாய்ப் பேசுகிறாயே. உனது வசனங்களை நோக்குங்கால், ஏதோ பொடி வைத்துப் பேசுகின்றாயென எனக்குத் தோன்றுகிறது. விவரமாக உனதபிப்பிராயத்தைச் சொல்.

கிருஷ்ணன்:—இருந்தாலும் ஒன்று யோசிக்க வேண்டியிருக்கிறது: எந்தப் புத்தில் எந்தப் பாம்பு இருக்குமோ? எந்தக் காலத்தில் எந்த சம்பவம் நேரிடுமோ? நீர் சொல்லுகிறபடி செய்வதில் ஒரு குறைவும் வாராமலிருப்பதைக் குறித்துக் கொஞ்சம் யோசிக்கவேண்டியதாய்த் தெரிகிறது. அவ்வளவுதான்.

பலராமர்:—சரி, நீ சொல்வதை யறிந்தேன். ஆனால் இச்சந்நியாசி நல்ல அறிவுடையவராயும், படித்தவராயும், சத்தியகுணசீலராயும், சிஷ்டராயும், சகல சாஸ்திரங்களையும் அநுபவத்தில் கொண்டுவருபவராயுமிருப்பதாய்க் காணப்படுகிறார்.

கிருஷ்ணன்:—அந்தரங்கமாகிய உள்ளம் எப்படியிருக்குமோ?

பலராமர்:—அது யாருக்குத் தெரியும்? இருக்கட்டும் பார்ப்போம். சரி, நீ இவரை அழைத்துக்கொண்டுபோய் கன்னியா மாடத்தில் விடு. சுபத்திரையிடம் இச் சந்நியாசிக்கு அன்னபான முதலிய உபசாரங்களைச் செய்துவரும்படி நான் உத்தரவுசெய்ததாகச் சொல்.

கிருஷ்ணன்:—ஆகா! அப்படியே செய்கிறேன். (அர்ஜுன சந்நியாசியை அழைத்துச் செல்கிறார்).

பெண்மணிகளை முன்னேற்றுங்கள்.

(ஸ்ரீமான் மதுரவாசன்).

உலக இல்வாழ்க்கைக் குரியவர்களில் பெண்மணிகளும் ஒரு பாகஸ்தராவார்கள். பெண்களில்லாத நாடும், ஆண்களில்லாத நகரமும் இப்புவியிற் காண்கலரிது. தற்காலத்தில் பெண்களைக்காட்டிலும் ஆண்மக்கள் கல்வி, கேள்வி முதலியவற்றால் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமடைந்து வருகின்றார்கள். எனினும் அவர்களுக்கு உயிர்த்துணையாகவுள்ள பெண்

மணிகளின் முன்னேற்றத்தைக் கொஞ்சங் கூட கவனிப்பதாகத் தெரியவில்லை. பொதுவாகப் பேச்சளவில் 'சகோதரிகளே' யென்கின்றார்களே தவிர, உண்மையில் ஒரு சிறிதும் அன்பு காட்டுவதாகக் காணப்படவில்லை.

பண்டை நாட்களில் பெண்களுக் கேற்பட்டுள்ள பெருமையை சீர்தூக்கிப் பார்க்க இக்காலத்தில் வெகு சிலரே காணப்படுவதால், பெண்களின் உரிமை புறக்கணிக்கப்படுவதாக நினைக்கவேண்டியதா யிருக்கிறது. அந்தோ! நம் அழகிய நாடு ஒருகாலத்தில் கதிரவன் தோன்றா வண்ணம் செய்ததும், தன் நாயகன் கள்வனல்லவென அரச அவை சென்று வாதித்து முடிவில் அந்நகரை தீக்கிரையாக்கியதும், கொழுநன் உயிர் பெற அந்தகனுடன் வாதாடி வெற்றியடைந்ததும் யார்? எவற்றால்? என்பதை யோசிக்கும் ஆடவர்கள் ஏன் மாதர் சிகாமணிகளையும் அவர்களுடன் பிறந்த கற்பையும் நேசிக்கக்கூடாது? கற்பின் மகிமையால் சர்வ வல்லமையுடைய கடவுளும் ஒருநாள் வெட்கப்பட நேர்ந்ததென்றால், அம்மாசற்ற கற்பைக் குறித்து எம்மால் வரையவும் கூடுமோ?

இத்துணைச் சீரும் சிறப்பும் வாய்ந்த மாதர் சிகாமணிகளின் முன்னேற்றத்தைக் கருதாது ஒரு நிமிடமும் வாழ முடியாது. மேல்நாட்டின் நடைமுறைகளை நாம் காணப்பெற்றால் அங்கு ஆடவர்களுக்கும் பெண்பாலர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமின்றி உரிமை வழங்கப்படுகிறது. நம் பாரத நாட்டில், இந்தியாவில், அவ்வித சுதந்திரம் நாம் பெண்பாலர்களுக்கு வழங்கப்படாமல் அவர்களைக் கேவலமாக மதித்து நடத்தி வருகின்றோம்.

நாம் வசிக்கும் இந்தியா இப்போது சுதந்திரதாகத்தி லீடுபட்டு சுதந்திரமளிக்கும் தாயை வேண்டியவண்ணமா யிருக்கிறது. அவ்வேண்டுதலில் தேசவூழியத்தில் பல தாய்மார்களும் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் அஞ்சா நெஞ்சத்தையும் அதிராவூக்கத்தையும் குறித்து எழுத வேண்டுவதில்லை. பண்டைக்காலத்து மாது சிரோன்மணிகளின் முன்னேற்றத்தையும், நல்லொழுக்கத்தையும் குறித்து எழுதத் தொடங்கினால் வருடம் ஒன்றானாலும் எழுதி முடியப் போவதில்லை. அப்பெரும் புகழ் படைத்தவர்கள் மரபிலுதித்த கற்புக்கரசிகள் பல கோடிப் பெயர்கள் நம் நாட்டில் வசித்து வருகிறார்கள். அவர்களின் சுய மதிப்பையும், முன்னேற்றத்தையும் கவனிக்க வேண்டியது ஒவ்வொரு ஆடவருடைய இன்றியமையாத கடமையாகும்.

வங்காள மாகாண அதிபதியாகிய லார்டு லிட்டன் பிரபு அவர்கள் சென்ற சில மாதங்களுக்கு முன்னர் இந்திய மாதர்களைக் குறித்துப் பேசியகாலையில், இந்தியாவெங்கும் ஓர் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டு அதனால் பலவிடங்களிலும் கண்டனக் கூட்டங்கள் கூட்டப்பட்டதோடு கவிச் சக்கரவர்த்தியாய ரவீந்திர நாத் டாகூருக்கும் லார்டு லிட்டன் பிரபுவுக்கும் கடிதப் போக்குவரத்துகளும் நடைபெற்றது. ஐரோப்பாக் கண்டம் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து கல்வியைப் பரப்பிவரும் டாகூர் உலகம் போற்றும் அரசியல் தலைவரான மகாத்மா காந்தியடிகளோடு அந்நியத் துணி பஹிஷ்கார விஷயத்தில் பெரும் வாக்குவாதம் நடத்தி, அவரது கொள்கைக்கு முரண்பட்டவராக இருந்தும், பெண்கள் விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட மேன்மை எவ்விதம் வர்ணிப்பது. இராஜீயக் கிளர்ச்சியின் சம்பந்தமாகப் பல ஆயிரக்கணக்கானவர்கள் சிறை சென்றபோது மௌனம் சாதித்த கவிச் சக்கரவர்த்தி டாகூர் பெண்மணிகளின் விஷயத்திலும் மௌனம் சாதிக்காது தாய் நாட்டின் மானத்தைக் காப்பாற்ற வெளிக்கிளம்பியது போற்றற் குரியதேயாகும்.

இந்தியாதி காரணங்களை யோசிக்குங்காலையில், நம் சகோதரி மாதர்கள் சமூக அபிவிருத்தியில் முன்னேற்றமடைந்தாலல்லது இந்தியா விடுதலை யடைவது துர்லபமென்ற கருத்துடன் ஸர் வி. சங்கரன் நாயர் அவர்களும் சமீபத்திற் கூடிய பெல்காம் ஆசார சீர்திருத்த மகா நாட்டில் வெகு அழுத்தமாகப் பேசியுள்ளார்.

ஆகவே நாட்டின் நலத்தையும் மக்கள் முன்னேற்றத்தையும் கோரும் ஒவ்வொரு ஆடவர்களும் பெண்களும் முன்னேற்றம், கல்வி முதலியவற்றிற் பின்னடைந்திருக்கும் நம் சகோதரிகளை முன்னேற்றச் செய்யவேண்டியது இன்றியமையாத கடமையாகும். இல்லையேல் இப் பொல்லா இந்திய நாட்டில் கற்புக்கரசிகள் வாழும் நாட்டில் கற்பாபரணிகளின் முன்னேற்றம் குன்ற நேரிடும். சகோதர சகோதரிகாள்! எழுமின்காள்! பண்டைக்காலத்துத் தாய்மார்களின் முன்னேற்றம், நல்லொழுக்கங்களைப் போதிக்க நம் வீரத் தாய் சகோதரி பாலம்மாள் சென்னையின்கண் தோன்றியிருப்பதால் அவர்தம் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கப் பல தாய்மார்கள் முன்வர எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

நூர்ஜஹான் அல்லது பாதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(667-வதுபக்கத் தொடர்ச்சி)

இருபத்தாறுவது அத்தியாயம்.

அக்பர் சக்ரவர்த்தி மந்திரிகளின் வேண்டுகோளின்படியே இளவரசன் சலீமைச் சேனைகளுக்கதிபதி யாக்கி மேவாடாவை எதிர்க்கும் பொருட்டு அனுப்பியபின் அயாஸ்பெக் பல நாட்களாய் மருமகனேயெனக் கருதியிருந்த ஷேர் ஆப்கனுக்குத் தன் புத்திரி மேஹருந்நிஸாவை மணம் புரிவிக்கும் விசாரத்திலாழ்ந்தனன். இவ்விஷயத்தைக் குறித்து ஷேர் ஆப்கனது சம்மதத்தையும் முன்னரே பெற்றிருந்தான்.

ஓர் நாளிரவு போஜனம் முடிந்தபின் மேஹர் வழக்கப்படித் தன்னறையில் சதார்வாசித்துட்கார்ந்திருக்கும்பொழுது அயாஸ் தன் மனைவியுடன் ஆங்கு போந்து ஆசனத்தில் அமர்ந்தனன். மேஹர் ஜீவனற்ற வஸ்துவாகிய சதாரை மீட்டி அதற்கு ஜீவனைக்கொடுத்து அதனது ஸ்வரத்திற் தன் மனதை ஈடுபடுத்தியிருக்க, சங்கீதப் பிரியனான அயாஸ்பேக்கும் மௌனமாய்க் கேட்டுவந்தனன். ஆனால் மேஹரோ திடீரெனச் சங்கீதத்தை நிறுத்தி யோசனையிலாழ்ந்தாள், மெய்மறந்தாள், பிரமை கொண்டவள்போல் தென்பட்டனள். ஆங்கு வீற்றிருந்த அவளது பெற்றோர்கள் ஆச்சரிய முற்றனர். சில நிமிடங்கள் சென்றபின் மேஹர் தன் நினைவிற்கு வரத்தன்னைச் சுற்றிலும் நோக்கவே அவ்வறையில் தன் பெற்றோர்கள் மௌனமுடன் உட்கார்ந்திருக்கக் கண்டு திடுக்கிட்டனள். உடனே தன் கரத்திருந்த சதாரை ஓர் புறமாக வைத்து, பீதிகொண்டு எழுந்திருந்து நின்றனள்.

அயாஸ்:—குழந்தாய் மேஹர்! நீ இவ்வளவு பீதி கொள்வானேன்? யாதொரு குற்றமுஞ் செய்தவளாகக் காணவில்லையே? ஈசுவரன்

எல்லோருக்கும் ஞானத்தைக் கொடுத்துள்ளான். ஆனால் யாரதைச் சரியானபடி உபயோகிக்கிறார்கள்? சரியான வழியில் உபயோகிப்பவர்கள் இவ்வுலகில் சன்மானத்தை யடைகின்றார்கள். அவ்வண்ணமே நீயும் சங்கீதத்தில் மனதைச் செலுத்திப் பூர்ண பலனையடையப் பிரயத்தனஞ் செய்து வருகின்றாய். இது தவறென யார்தான் பகருவார்கள்? நானே நீ அவ்வீர புருஷனை ஷேர் ஆப்கனை மணவாளனாக அடையும் பட்சத்தில் அவனது மனதை ரஞ்சிக்கச் செய்ய இச்சங்கீதமே சரியான கருவியாயிருக்கும்."

'ஷேர் ஆப்கன்' என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மேஹரது முகம் மழுங்கியது. தெளிவான நீரால் நிறைந்துள்ள ஓர் பாத்திரத்தில் ஒன்று அல்லது இரண்டு துளி மையை ஊற்றிய மாத்திரத்தில் எவ்வண்ணம் அந்நீர் கலங்குமோ அவ்வண்ணமே மேஹரது முகமுங் கலக்கமுற்றது. தன்னை யறியாமலேயே அவளது முகத்திலுள்ள தேஜஸ் திடீரென மறைந்தது. அவளது முக வேறுபாட்டை அயாஸ் கவனிக்கவில்லையாயினும் அவனது புத்திகூர்மையுள்ள மனைவி இதை யறிந்து தன் கணவனிடத்தில் இதைக் குறித்து மெதுவாகப் பகர்ந்தனள். ஆயினும் இவ்வண்ணம் அவள் கெட்ட எண்ணங்கொண்டு செய்தவளல்ல. ஸ்திரீகளது மனதை ஸ்திரீகளே அறிவர். ஷேர் ஆப்கன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மேஹரது முகங் கலக்கமடையக் கண்ட அவளது சிற்றன்னை மெதுவாக அச்சங்கதியைத் தன் கணவனிடம் பகரவே, அயாஸ்பெக் கொஞ்சநேரம் யோசனையிலாழ்ந்தான். மேஹரும் தன் முகத்தைத் தன் பெற்றோர் பார்க்காவண்ணம் சதாரை யெடுத்து உறைக்குள்ளிடும் பாவனையுடனிருந்தனள்.

சரியான வரனைச் சம்பாதித்து சீக்கிரத்தில் தன் புத்திரியின் விவாகத்தை முடிக்கவேண்டுமென்று அயாஸ் அநேக நாட்களாய் எண்ணியிருந்தான். இளவரசன் சலீம் மேஹரை மனைவியாக அடையக் கருதித் தன் மனதை வெளியிட்டது முதல் இவன் அவளது விவாகத்தைக் குறித்து அதிகமாகக் கவலை கொள்ளலானான். ஆனால் அக்பர் பாதுஷா சலீமை யுத்தத்திற்கு அனுப்பியபின்னர் இவன் சில காலம் சிந்தையில்லாதிருந்தனன்.

மேஹர் சதாரை உறையிலிட்டுக் கீழே வைத்தவுடன் அயாஸ்பெக் அவளருகிற் சென்று உட்கார்ந்து அவளது முதுகைத் தடவிக்கொண்டே "குழந்தாய் மேஹர்! நான் உன் தந்தையானபோதிலும் உன் வயதுக்குத் தகுந்தபடி நான் உன்னிடம் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆயினும் உன் ஜன்ம முழுதும் நீ சுகமாய்க் காலத்தைக் கழிக்க வேண்டியதைப்பற்றி சில புத்திமதிகளைக் கூறுவது அவசியமாகும். வெளிப்படச் சொல்லுங்கால் அவை உன் விவாகத்தைக் குறித்தே. இவ்வுலக அனுபவம் யாதென நீயறிந்தவளல்ல. பல பெற்றோர்கள் பிடிவாதமுடனிருக்குந் தம் தருணிகளுக்குச் சரியான புத்திமதிகளைப் புகட்டாது அவர்களது வாழ்நாட்களை அநியாயமாய்க் கெடுக்கின்றார்கள். இச்சமயம் உன் நன்மையைநாடி புத்திகூறுகிருப்பேனாயின் என்னை உன் தந்தையென யார்தான் பகருவார்?"

மேஹர்:—தந்தாய்! மறைக்காது வெளியிட்டுப் பகரவேண்டும். நான் இந்நாள் வரை உமது ஆக்ஞைக்கு விரோதமாக நடந்தவளல்ல.

அயாஸ்:—வெளியிட்டுப் பகர என்ன விருக்கின்றது. நீ இளவரசனை மணக்க அவாக்கொண்டிருப்பதை அடியோடு மறந்து ஷேர் ஆப்கனை மணவாளனாக அடையத் தயாராயிரு.

ஷேர் ஆப்கன் என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்தில் மேஹரது முகம் மறுபடியும் மழுங்கியது. தன் தந்தைக்கு யாது உத்தரமுரைப்

தென அறியாது தயங்கினன். அவளது ஸ்திதியைக் கவனித்து வந்த அவள் சிற்றன்னை மெதுவாகத் தன் கணவனிடம் "நீர் உமது மனதை மெஹரிடம் வெளியிட்டுப் பார்த்தாய் விட்டது. நமது மெஹரோ புத்தி கூர்மையுள்ளவள். இதைக் குறித்துக் கொஞ்சநேரம் யோசிக்கும் பட்சத்தில் நீர் சொல்லுவது சரியென அவளுக்குத் தெரியவரும். அதிக நேரமானதால் நாம் போய் வருவோம். காலை இதைப் பற்றி மறுபடியும் யோசிக்கலாம்" என்றனள்.

இருபத்தேழாவது அத்தியாயம்

மெஹருன்னிஸா அன்று இரவு முழுதும் கொஞ்சமேனும் நித்திரை கொண்டாளில்லை. விடியற்கால வேளையிற் கொஞ்சங் கண்ணயர்ந்தனளாயினும் பற்பல கனவுகள் கண்டதால் நித்திரை செய்தனளெனப் பகருவது பிசகே. பஞ்சன் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இளவரசன் சலீமினது கூடாரத்தில் தானிருப்பதாகவும் தன்னிஷ்டத்திற்கு விரோதமாகத் தன் தந்தை வேறொருவனுக்குத் தன்னை மணம் புரிவிக்கத் தயாராயிருப்பதால், தான் ஓடிவந்து தப்பி இளவரசனைச் சரணடைந்ததாகவும் கனவு கண்டனள். பல நாட்களுக்குப் பின் இளவரசன் தன்னைக் கண்டதால் மிக்க ஆனந்த முண்டு தன்னை வரவேற்று உபசரிப்பதாகவும் தன் தந்தையின் இஷ்டத்தை அவன் அறியவே உக்ர ஸ்வரூபத்தைக் கொண்டவனாய்த் தன் வாளை உறையினின்றுஞ் சுழற்றி, "கூடிய சீக்கிரத்தில் இந்துஸ்தானத்துப் பாதுஷா ஆக விருக்கும் ஜஹாங்கீருக்காகவே கடவுளால் நிர்மாணிக்கப்பட்ட இப்பாவையினது ஒரு ரோமத்திற்கேனும் ஹானியை வருவிப்பவன் எவனுளன் இப்புவியில்? அயாஸ்! நீ இவளது ஜன்மத்திற்குக் காரணமாயுள்ளவனெனப்படுவது வாஸ்தவமே. ஆயினும் இவள் உனக்குச் சொந்தமல்ல. உனது இஷ்டப்படி இவளை விநியோகஞ் செய்ய உனக்குக் கொஞ்சமேனும் மகிமையில்லை. ஜாக்கிரதை! இவளது ஓர் ரோமத்திற்கேனும் ஹானிவருங்கால் இளவரசனன்றோ இயலைக்கண்ணுறப் பாவித்து வருகின்றனன்" என்று சலீம் பகருவதாக இவள் கனவில் கூச்சலிட்டனள். மெஹரது வாயினின்றும் வெளிவந்த இவ்வார்த்தைகள் மிக்க ஆவேசத்துடன் இருந்தமையால், இவைகளைக் கேட்டுவந்த மெஹரது தந்தையும் சிற்றன்னையும் விழித்துக்கொண்டனர். மெஹரும் திடுக்கிட்டு விழித்தெழுந்துட்கார்ந்து, "யார் கூச்சலிட்டது?" எனத் தன் தாயை வினவ, அவள் "குழந்தாய்! நீ ஏதோ கனவு கண்டு உளறினாய். பீதி கொள்ளல் வேண்டாம்" என்றனள்.

கனவு என்ற வார்த்தை காதில் வீழ்ந்த மாத்திரத்தில் மெஹர் மிக்க விசாரத்திலாழ்ந்தனள். சலீமைப் பிரத்யட்சமாகப் பார்த்ததாகப் பாவித்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்த மெஹரது முகம் தான் கண்டதெல்லாம் கனவேயென அறிந்த மாத்திரத்தில் மழுங்கியது. உற்சாகங் குறைந்தது. புத்திகூர்மையுள்ள இவளது சிற்றன்னை இவள் முகத்துண்டான வேறுபாட்டைச் சீக்கிரமறிந்து, இவளையுந் தன்னுடன் தோட்டத்திற் கழைத்துச் சென்றனள்.

விடியற்கால சமயம். நானாவித வர்ணங்களோடு கூடிய பட்சி கணங்கள் மதுரமாகப் பாடிக்கொண்டு ஒரு மரத்தினின்றும் மற்றொரு மரத்திற்குப் பறந்துகொண்டிருந்தன. எண்ணிறந்த பலவித புஷ்பங்கள் தமது இதழ்களை விரித்துப் பரிமள வாசனையை நாற்பக்கங்களிலும் பரவச்செய்துகொண்டிருந்தன. பச்சை நிறச் சேலைகளைப் போர்த்திருந்த வனதேவதைகள் தமது கரங்களில் அமிர்த கலசங்களைத் தாங்கிச் சூரியனது வரவை நோக்கிக் காத்திருந்தார்கள். இவ்வழகைக் காணவேண்

டிக் கதிரவனும் தன்னிளங் கிரணங்களைப் பரப்பி உதயமாகுஞ் சமயமாயிருந்தான். இப்படிப்பட்ட சமயத்தில் தாயும் பெண்ணுமாகிய இவ்விருவரும் மரங்கள் கொடிகளது அழகைக் கண்ணுற்றவண்ணம், வாசனை மிக்க புஷ்பங்களைக் கொய்துகொண்டே அத்தோட்டத்தில் அங்குமிங்குஞ் சுற்றிவந்தார்கள். மெஹர் அச்சமயம் கொஞ்சம் உற்சாகமடைவாளென அவள் தாய் வீண் எண்ணங் கொண்டனள். அவ்வனத்தில் தன் காதலனுடன் உலாவ எப்பொழுது பிராப்தமுண்டாகுமோ அப்பொழுதே தன் ஜன்மம் சாபல்யமாகுமென நினைத்தனள் மெஹர். அவளது சிற்றன்னை அடிக்கடி அழகிய பட்சிகளையும் வாசனைமிக்க புஷ்பங்களையும் அவளுக்குக் காண்பித்துவந்தனள். ஆனால் மெஹருக்கு அவ்வனம் முழுதும் சலீமமயமாகத் தோற்றியதால் அழகிய பறவைகளையும் வாசனை மலர்களையும் அவள் கொஞ்சமேனும் கண்ணெடுத்துப் பார்த்தவளல்ல. இவ்வண்ணம் இருவரும் அவ்வனத்தில் மிக்க நேரத்தைக் கழித்தபின் வீட்டிற்குள் நுழைந்து நித்திய கருமங்களைச் செய்யலானார்கள். காலை போஜனம் முடிந்தபின் மெஹரும் அவளது தாயும் ஒழிந்த நேரங்களில் தூங்கும் வழக்கமில்லாது ஓவியம் வரைவதில் மனதைச் செலுத்தியிருப்பார்கள். அவ்வண்ணமே அன்று அவ்விருவரும் ஓவியம் வரைந்துகொண்டிருக்குஞ் சமயம் அவர்களுக்குள் மெஹரது விவாக விஷயமாய்ச் சம்வாதமுண்டாயிற்று. அயாஸ்பெக் இச்சைகொண்டவண்ணம் அவனது மனைவியும் சலீமை மருமகனாக அடைய மனமில்லாதிருந்தனள். அயாஸ்பெக் மொகலாய தர்பாரின் அந்தரங்கங்களை நன்கறிந்திருந்ததாலும் சலீமின சரித்திரம் ஒவ்வொரு நாளும் இவனது காதில் வீழ்ந்துகொண்டேயிருந்ததாலும் அரச குடும்பத்தில் தன புத்திரியைக் கொடுக்கக்கூடாதென நிச்சயித்தனன். ஆகவே தன் புத்திரியின் மனதைத் திருப்பத் தான் முயன்றதுமன்றி இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி தன் மனைவியிடத்தும் பகர்ந்திருந்தான். அவ்வண்ணமே அவளும் நல்ல சமயம் பார்த்து மெஹருக்குச் சில உபதேச வார்த்தைகளைப் பகர எண்ணங் கொண்டனள். கொஞ்ச நேரம் பேசியிருந்த பின் இவள் மெஹரை நோக்கி "சீக்கிரம் உன் விவாகம் நடைபெற வேண்டியிருக்கிறது. உன் கணவன் கண்டுகளிக்கும்படி சில சித்திரங்களை வரையவேண்டாமா?" என்றனள்.

மெஹர் :—அதற்கென்ன அவசரம். பிறகு பார்க்கலாம்.

தாய்:—அவசரமென்ன வென்றால்! நீ பகருவது எனக்குப் புலப்படவில்லை.

மெஹர் :—விவாகத்தைக் குறித்து நிச்சயமாய் விட்டதா?

தாய்:—ஆமாம், வரன் நிச்சயமாய்விட்டது. வரனுக்கும் வாக்களித்தாய் விட்டது.

'வாக்கு' என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் மெஹர் திடுக்கிட்டுத் தன் தாயை உற்று நோக்கி 'அம்மா! வாக்குக் கொடுப்பானேன்?' என்றனள்.

தாய்:—அதுவே நம் குல சம்பிரதாயம். விவாக விஷயங்களில் வாக்குத் தத்தஞ் செய்து கொடுப்பதே நமது குல வழக்கம்.

மெஹர்:—அஃதென்ன நியாயம் அம்மா! நான் என் மனதை வெளியிடுவதால் க்ஷமிக்க வேண்டும். என்னிஷ்டத்தைப் பகருவதால் நீ கோபங் கொள்வாயோ எனப் பீதியடைகின்றேன்.

தாய் :—குழந்தாய்! பீதி கொள்வானேன். விவாகமென்றால் ஜன்ம முடிப்பு. உன் மனத்திலுள்ளவற்றை மறைக்காது பகர்வாய்.

மெஹர்:—(லஜ்ஜையுடன்) நானும் வாக்களித்துள்ளேன்.

தாய்:—யாருக்கு! ஷேர் ஆப்கனுக்கா?

மெஹர் பதிலுரையாது வேறொரு திசையை நோக்கி மௌனமுடனிருக்க அவள் தாய் "என் கேள்விக்கு உத்தர முரையாதிருக்கின்றாயே" என்றனள்.

மெஹர்:—அம்மா! வாக்களிப்பது நமதுகுல சம்பிரதாயமெனப் பகர்ந்தாய், நல்ல சம்பிரதாயம்!

தாய்:—இதுவோ என் கேள்விக்குப் பதில்?

மெஹர்:—ஒவ்வொன்றையும் பகிரங்கமாய்ப் பகர்ந்தால்தான் நீ அறிந்து கொள்வாய் போலும்.

தாய்:—நூல் ஏணியைக் கொண்டு சுவர்க்கத்தையடையும் திறமையை நீயே பெற்றுள்ளாய். பறக்கும் பட்சிகளது இறக்கைகளை எண்ணுஞ் சக்தி இக்காலத்துப் பெண்களிடமே யிருக்கின்றது.

மெஹர்:—அம்மா! கோபங்கொள்ள வேண்டாம், வேடிக்கையாகப் பகர்ந்தேன்.

தாய்:—நானுன்னைக் கேட்பது யாதெனில், ஷேர் ஆப்கனை மணக்க உனக்கு இஷ்டமுண்டா இல்லையாவென ஒளிக்காது சொல்.

மெஹர்:—நான் இளவரசரை வரித்துள்ளேன். அவரது மனைவியாவதாக அவருக்கு வாக்கும் கொடுத்துள்ளேன்.

தாய்:—(ஆச்சரிய மிகுதியால்) மெஹர்! நீ பகருவது வாஸ்தவந்தானா! அல்லது பரிகாசஞ் செய்கின்றனையோ! இளவரசனேனுங் காமெங்கே! இளவரசனுக்கு உன்னை மணக்க இஷ்டந்தானா?

மெஹர்:—இல்லாவிடில் நானிவ்வளவு நிச்சயமாகச் சொல்லுவேனா.

தாய்:—இந்துஸ்தானத்துப் பாதுஷாவின் பட்டராணியாகப் போகின்றாய்!

மெஹர்:-விதியை வெல்ல யார் தான் வல்லர்.

தாய்—குழந்தாய் மெஹர்! இராஜ்ய வைபவத்தை யடைவதில நமக்கு ஆனந்தமே. ஆயினும் அச்சங்கதி ஒரு புறமிருக்கட்டும். உன் ஜனனத்திற்குக் காரணமாயிருக்கும் உன் தந்தை உன்னை இராஜ்ய வைபவத்தோடு காண இச்சையில்லாதிருப்பரோ? குழந்தாய்! என்ன இராஜ்ய வைபவம்! சம்சார வைபவத்தின் முன் இந்த இராஜ்ய வைபவம் எம்மாத்திரம்! இராஜ்ய வைபவ முழுதும் விஷத்தால் நிறைந்திருப்பதை நீ அறியாததால் உலக அனுபவம் உனக்குக் கொஞ்சமேனுமில்லை யெனச் சொல்லலாம். விவாக விஷயத்தில் நீ பிடிவாதமாயிருப்பது கூடாது. நீயோ புத்திசாலி, கற்றுணர்ந்துள்ளாய். பிறர் உனக்குப் புத்தி புகலவேண்டுமென்பதில்லை. ஆயினும் நாங்கள் உனக்கு இரண்டொரு உபதேச மொழிகளைப் பகரவேண்டியிருக்கிறது.

மெஹர்:—அம்மா! நான் கேட்பதைக் குறித்துக் கோபங்கொள்ளல் கூடாது. இளவரசர் என்னை மணக்க இச்சை கொள்ள, தந்தை அதற்கு உடன்படாத காரணந்தா னென்ன? இதனுண்மையை அறிய நான் சக்தியற்றிருக்கிறேன்.

தாய்:—மெஹர்! சலீம் உன்னை மனைவியாக அடையக் கொஞ்சமேனும் அருகனல்ல. அவன் இதுவரை எண்ணிறந்த ருபவதிகளைப் பிரஷ்டஞ்செய்து அவர்களை நரகத்தில் தள்ளித் தானும் நரகத்திலுள் வசித்து வருகின்றனன். அக்பர் சக்கரவர்த்தியாலேயே அவனுக்கும் சௌரதை யிருக்கிறது. அவருக்குப் பிற்காலம் தில்லி சிம்மாதனம் சலீமுக்குக் கிட்டுமென்பது சந்தேகமே. பாதுஷாவின் பட்ட ராணியாவோமென்ற இச்சைகொண்டு நீ உன் ஜன்மத்தை வீணாக்காதே" எனப் பகர்ந்து மெஹரைத் தன் மார்போடணைத்து முத்தமீந்து மறுபடியும் தன்னாசனத்தில் அமர்ந்தனள்.

தன் தாயின் வார்த்தைகளைக் கேட்டவந்த மெஹர் யாது செய்வதென அறியாது, தயங்கினள், மயங்கினள், மனங் கலங்கினள்.

(தொடரும்)

கட்டாய இலவசக் கல்வியும் ஸ்திரீகளும்.

இப்பொழுது நாட்டில் எங்கும் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு முனிஸிபாலிடியாரும், தாலுக்கா போர்டாரும் கட்டாய இலவசப்படிப்பைக் கற்றுக்கொடுக்க வேண்டிய முயற்சிகள் செய்து வருகின்றார்கள். இந்த ஆரம்பக் கல்வியின் மசோதாக் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே 1911-ம் வருஷம் இந்திய சட்டசபையிற்கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. அதை அமுலுக்குக் கொண்டுவர இப்பொழுதுதான் பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். ஆண் பையன்களுக்குக் கட்டாய ஆரம்ப இலவசப் படிப்பு அவசியமானால் பெண் குழந்தைகளுக்கும் அது அவசியம் என்று கூறுவது மிகையாகாது. கண்களில் வலது கண் இடது கண் என்று இரண்டு இருக்கின்றன. இவற்றில் வலது கண் முக்கியமா இடதுகண் முக்கியமா என்று கேட்டால் என்ன பதிற் சொல்வது? இரண்டும் முக்கியமேயன்றி வேறென்ன? ஆண்மக்களுக்குக் கட்டாய இலவசப் படிப்பை போதிக்கவேண்டும் என்று தீர்மானங்கள் செய்யும் முனிஸிபாலிடிகள், தாலுக்கா போர்டுகள் எல்லாம் பெண்களுக்கும் மேற்படி இலவசப் படிப்பை போதிக்கவேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தீர்மானங்கள் செய்தால் எவ்வளவோ பிரயோஜன முள்ளதாக விருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறு செய்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அநேக விதவைப் பெண்மக்கள், ஏழைப் பெண்மக்கள் முதலியவர்களின் நன்றியைப் பெறுவார்கள். இந்தச் சொற்பக் கல்வி இல்லாத ஓர் காரணத்தால் சிறு வயதிற் கணவனை இழந்த பெண்மக்கள் சோற்றுக்கு வழியில்லாமல் ஆயிரக்கணக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெண்களுக்கு சற்று கல்வி இருக்கும்பட்சத்தில் ஏதாவது ஓர் தொழில் செய்து ஜீவனம்செய்யச் சௌகரியமாயிருக்கும். நாட்டின் க்ஷேமத்திற்கும் பெண்மக்கள் முன்னேற்றத்திற்கும் எவ்வளவோ பெயர்கள் வேலைசெய்கிறார்கள். அவர்கள் இதைக்கவனித்தும் கல்வி வசதிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் நலமாக விருக்கும். சட்டசபைகளிலும் முனிஸிபாலிடி; தாலுகா போர்டு; ஜில்லாபோர்டு முதலிய ஸ்தாபனங்களிலும் வீற்றிருக்கும் மெம்பர்கள் பெண்களுக்கு எந்த விதத்தில் கல்வி அபிவிருத்திக்கு பரிகாரங்கள் தேடமுடியுமோ அந்த எல்லா முறைகளையும் கையாளவேண்டும். அப்பொழுதான் பெண்மக்கள் கல்வி தேசத்தில் சீக்கிரத்திற் பறவும்.

கல்வி முறை.

பெண்மக்களுக்குக் கல்வி அவசிய மென்று இவ்வளவு தூரம் வற்புறுத்தினோம். கல்வி அவசியமானால் எப்பேர்க் கொத்த கல்வியைக் கற்பிக்கவேண்டும் என்ற கேள்வி பிறக்கிறது. இப்பொழுதிருக்கும் கல்வி முறையானது சரியானதல்லவென்றும் இந்த முறையை மாற்றியா அல்லது திருத்தியோ அமைக்கவேண்டும் என்றும் போராடப்படுகிறது. ஆண் குழந்தைகளுக்கு இது நியாயமும் அவசியமுமானால் பெண் குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானது என்பதை வற்புறுத்த வேண்டியதில்லை. பெண்மக்களின் கல்வி முறையானது இப்பொழுது இருக்கும் மாதிரியே இருந்தால் எந்த விதத்திலும் பிரயோஜனத்தைத்தராது. அவர்களின் கல்வியின் நோக்கமானது ஒவ்வொரு பெண்ணும் உண்மையான மனைவி எவ்வாறு இருக்கவேண்டும் என்று போதிக்கவேண்டும். தன் கடமைகள் என்ன,

புருஷனிடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், மாமியார், மாமனார் மற்றுமுள்ள சுற்றத்தார் முதலியவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை போதிக்கவேண்டும்; கடவுள் பக்தி, தேசபக்தி முதலியவைகளைப் புகட்டவேண்டும். எல்லா மதத்தார்களுக்கும் ஒற்றுமையையும் விட்டுக்கொடுக்கும் தன்மையையும் உண்டுபண்ணவேண்டும். அடிமைப் புத்தியையும் ஆவேஷத்தையும் வெறுக்கும்படி செய்யவேண்டும். இந்தியப்பெண் மக்களின் கல்வியானது இந்தியதேசத்தை விரும்பும்படி செய்யவேண்டும். பாரதமாதா இப்பொழுது எவ்வாறு இருந்து வருகிறாள் என்பதையும் அவளுடைய மக்கள் எந்த நிலைமையில் இருந்து வருகிறார்கள் என்பதையும் தெரிவிக்கவேண்டும். ஏழைகளைக் கண்டால் மனம் இரங்கும்படியாகவும், கூன் குருடு முதலிய எளியமக்கள் நிலைமையைக் கண்டு பரிதபிக்கும்படியும் அவர்களுடைய கஷ்ட நிலைமையைத் தீர்க்க ஏதாவது வழி இருக்கிறதா என்பதைத் தேடவும் உதவியாய் இருக்கவேண்டும். ஒருவன் உயர்ந்தவன் மற்றொருவன் தாழ்ந்தவன் என்ற தாழ்ந்த புத்தியை ஒழித்துக் கடவுள் சிருஷ்டித்த ஜீவராசிகள் எல்லாம் ஒன்று என்ற சமரச ஞானத்தை ஊட்டவேண்டும். உலகத்தில் தர்மம் தான் முக்கியமானது, சத்தியம் தான் மேன்மையானது, சத்தியத்தைக் காப்பாற்றுவது தான் ஒவ்வொரு சகோதரனுடையவும் சகோதரியுடையவும் கடமை ஆகும்; அதைவிடச் சிறந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை; எவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும் அதைக் கைவிடக் கூடாது; அதைக் காப்பாற்ற உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் தியாகம் செய்யத் தயாராய் இருக்கவேண்டும்; எவன் அல்லது எவள் அவ்வாறு செய்ய முயல்கிறார்களோ அவர்கள் தான் உத்தமமானவர்கள்; அவர்கள் தான் உண்மையான கல்வி கற்றவர்கள் என்ற ஓர் உயர்ந்த தத்துவத்தை போதிக்கவேண்டும். சுயநலத்தைப் பாராட்டக்கூடாது, தேசசேவை செய்வதே ஒற்றுமையின் செய்யவேண்டிய ஓர் முக்கிய வேலை ஆகும் என்ற உண்மையான ஓர் அபிப்பிராயத்தைப் புகட்டவேண்டும். படித்தவுடனே உத்தியோகத்தில் அமர்ந்துவிடவேண்டும் என்ற எண்ணமானது நாளுக்கு நாள் கமது நாட்டில் குறையவேண்டும் (இதனால் உத்தியோகங்களை வெறுப்பதாக நினைத்தல் கூடாது; எல்லாருமே இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தால் அது பிசகு, முடியாத காரியம் என்பதைக் கூறவே இவ்வாறு கூறியது). கைத்தொழில் முதலியவைகளைக் கற்பிப்பதற்கு ஏற்ற கல்விமுறை. கபேச்சையாகக்கல்வியின் உதவியைக்கொண்டு ஏதாவது ஓர் தொழில் செய்து ஜீவனம்செய்யக் கல்வி முறையானது உதவியாய் இருக்கவேண்டும்.

ஆகையால் சுருக்கக்கூறுங்கால் மேற்கூறிய விஷயங்களை நிறைவேற்ற எந்தக் கல்வி முறையானது உதவியாய் இருக்கிறதோ அந்தக் கல்வி முறைதான் உண்மையான கல்வி முறையாகும். அப்போகத்த முறைதான் நம் நாட்டிற்கு இப்பொழுது தேவை.

ஒருவன் அல்லது ஒருத்திக்கு உண்மையான கல்வி இருக்கும் பட்சத்தில் தன்னுடைய சகோதர சகோதரிகள் நிலைமையைத் தெரிந்து கொள்ள முயலுவதற்கு அனுகூலமாயிருக்கும். ஏழைச் சகோதர சகோதரிகள் எவ்வாறு தங்கள் வாழ்நாட்களைக் கழித்து வருகிறார்கள் என்பதையும், ஆயிரக்கணக்கான எளிய மக்கள் ஒரு வேளை உண்ண உணவும், உடுக்க வேஷ்டியும் அற்றுக் கஷ்டப்பட்டு வருகிறார்கள் என்பதையும், ஆயிரக்கணக்கான மக்கள் பலவிதமான வியாதிகளால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், எவ்வளவோ பேர்கள் அங்க ஈனர்களாக இருப்பதால் எந்த விதமான வேலைகளும் செய்வதற்கு அசக்தர்களாகி மற்ற சகோதர சகோதரிகளின் உதவியை நாடி இருக்கிறார்கள் என்பதையும் உண்மையான கல்வியால் அறியலாகும். இந்திய சமூகம் எந்தவிதமான நிலைமையில் இருக்கிறது; ஜாதிமத ஒற்றுமை எவ்வாறு சீர் கெட்டுப்போய் எந்தெந்த விதங்களில் சீர்திருத்த வேண்டியிருக்கின்றன; அவ்வாறு சீர்திருத்த ஒவ்வொரு மதத்தார் கடமை என்ன, அந்த மதத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நண்பர்களுடைய கடமை என்ன என்னும்படியான விஷயங்களை ஆராய உதவியாய் இருக்கும்.

இந்திய நாகரிகமானது நாளுக்கு நாள் அழிந்து கொண்டுவருவது உண்மை என்று தெரிந்தால், ஹிந்து மதமானது நாளுக்கு நாள் க்ஷீணித்து வருவது வெளிப்படை என்று தெரிந்தால், சமூகஒழுக்கம், ஆசாரவொழுக்கம், நியாயம், உண்மையின் உயர்வு, சத்தியம் முதலியவைகள் வரவரச் சீர்கெட்ட நிலைமைக்கு வந்து கொண்டிருக்கின்றன வென்பவை வாஸ்தவம் என்று தெரிந்தால், தேசத்தின் க்ஷேமம், கல்வி யபிவிருத்தி, பொருள் அபிவிருத்தி ஆகிய இவைகள் முக்கியமானவை என்பது விளங்கினால், உலகத்தில் மற்ற தேசங்களோடு இந்தியாவையும் ஒப்பிட்டுப் பார்த்து எவ்வாறு இப்பரத கண்டம் மட்டும் ஒவ்வொரு துறையிலும் பின்னேற்ற மடைந்திருக்கிறது என்பது நிரூபிக்கப்படுமானால், தேச நன்மையை விரும்பும் எந்த சகோதரனும் ஸ்திரீகளின் முன்னேற்ற விஷயங்களில் ஒருவரும் தடையாய் இருக்கச் சற்றேனும் ஒப்ப மாட்டார்கள் என்பது எனது துணிபு. ஸ்திரீகளும் தேச சேவையில் ஈடுபடவேண்டுவது உண்மைதான் என்று உணருவார்கள்; ஆண்மக்களுடைய தேசபக்திக்கு ஸ்திரீகளுடையது குறைந்ததல்ல என்பதை நம்புவார்கள். இவ்வாறு நம்ப முற்பட்டால் ஸ்திரீகளுக்கும் சில விஷயங்களில் சம உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இனிமேலாவது மேற்கூறிய வகைகளில் ஆடவர் கல்வி முறையும் சீர்படுத்தப்பட்டு, பெண்கல்வியும் அதற்கு அனுசரிப்பாக நடக்கப்பெற ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்தில் சிரத்தை யெடுக்கப்படாவிடில் தேச வேலைகளில் அநேகம் நின்று விடும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ருக்குமணியம்மாளின் இல்லற சித்திரம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி).

எனது சிறிய தந்தை மகள் புஷ்பமும் நானும் சமவயதினர்களாயிருந்தோம். எங்கள் அடுத்த வீட்டு ருக்குமணி எங்களைவிட இரண்டு மூன்று வயது பெரியவளாயிருந்தனள். இருந்தபோதிலும் நாங்கள் மூவரும் மிக்க சிநேகமாயிருந்தோம். நாங்கள் அடுத்த வீட்டிலிருந்தமையால் எங்கள் இளம்பருவத்தைநாங்கள் ஒருமிகச் சேர்ந்து விளையாடிக் கழித்திருந்தோம். பாடசாலையிலும் நாங்கள் ஒரே வகுப்புதான். எங்கள் சிநேக பாவத்தைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியமுற்றுக்கொண்டிருந்தார்கள்.

தமிழ்ப் படிப்பு முடிந்ததும் நாங்கள் பாடசாலையை விட்டோம். எங்கள் பாட்டி எங்களிருவரையும் சமையல் வேலையிற் போட்டார்கள். ஏனென்றால், நாங்கள் பெரியவர்களாகி விட்டோமென்று அவருக்குத் தோன்றியது. ஆனால் ருக்குமணிக்கு அப்படியில்லை. அவ

ளுடைய பெற்றோர்கள் சீமான்களா யிருந்து லோகல் ரிபார்மர்களா யிருந்தார்கள். ஏசுவதற்கு வீட்டில் அத்தை, பாட்டி ஒருவரும் கிடையாது. ருக்குமணி ஏகபுத்திரியாயிருந்து செல்வப் பெண்ணா யிருந்தனள். ஆதலால் அவளுக்கு ஆங்கிலமும் நன்றாகக் கற்பித்திருந்தனர். பிறகு அவளை ஒரு வாலிபனுக்குக் கொடுத்து விவாகம் செய்யப்பட்டது. கணவனுடைய வித்தியாப்பியாசம் முடிகிறவரையில் அவள் தாய் வீட்டிலேயே இருந்து தையல், சங்கீதம் முதலியவற்றைக் கற்றுக்கொண்டிருந்தாள்.

எங்களுக்குச் சமையல் முதலிய வேலை செய்ததுபோக சொற்பநேரந்தான் ஒழிவு கிடைத்துக்கொண்டிருந்தது. மேலும் எங்கள் பெற்றோர்கள் அதிக சீமான்களுமல்லர். ஆகையால் உபாத்தியாயினியை வைத்து எங்களுக்குக் கற்பிக்கத் திறமையற்றவர்களா யிருந்தனர். ஆனபோதிலும் எமது பாலிய சிநேகிதியாகிய ருக்குமணி ஒழிவு நேரத்தில் எங்களுக்கு அன்புடன் கற்பித்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் ருக்குமணியைப்போல் நமக்கும் கல்வி கற்க இயலவில்லையேயென்று எமக்கு வருத்தமுண்டாயிற்று.

ருக்குமணியின் கணவன் படிப்பு முடிந்ததும் எஙகளுக்கும் அவளுக்கும் பிரிவு ஏற்பட்டது. அதனால் எங்களுக்கு மிக்க விசனமுண்டாயிற்று. ருக்குமணி கணவனுடன் சென்னைக்குச் சென்றாள். அவள் ஒவ்வொரு கடிதத்திலும் என்ன எழுதுவாளென்றால் "நான் மிக்க அதிருஷ்டசாலி. என்னை ஒருவரும் கேட்பாரில்லை. கடவுள் கிருபையால் எனக்குத் தொந்தரவு செய்ய மாமி, நாத்தி ஒருவரும் எனக்குக் கிடையாது. சமையற்காரனிருப்பதனால் படிக்க அதிக நேரம் கிடைக்கிறது. எனது இல்லற சௌக்கியத்தைப் பார்க்க எனது பாலிய சிநேகிதிகள் ஒருவரும் இங்கில்லையே என்று வருத்தப்படுகிறேன்," என்றிவ்வாறெல்லாம் எழுதியிருப்பாள். ருக்குமணியின் கடிதங்களைக் கண்டால் எனக்கு மிகவும் சந்தோஷமுண்டாகும்.

ஒரு வருஷம் பொறுத்து ருக்குமணி பிறந்தகம் வந்தனள். எங்களுக்கு மிகவும் சந்தோஷமா யிருந்தது. ருக்குமணி தனது தையல் வேலைகளையெல்லாம் எங்கள் முன்னிலையிற் கொண்டுவந்து வைத்தாள். அவளுடைய புத்தி வன்மையைக் கண்டு நாங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டோம். மறுதினம் அவளுடைய தையல் வேலைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு நாங்கள் அவள் வீட்டிற்குச் சென்றோம். அவ்விடத்திய அற்புதமான காட்சியைக் கண்டு வியப்புற்றோம்.

ருக்குமணியின் தாய் பகிஷ்டையா யிருந்தபடியால் ருக்குமணி அடுப்பங்கரையில் மணையின் மீதுட்கார்ந்து அடுப்பூதிக்கொண்டிருந்தாள் தலையிலெல்லாம் சாம்பற் பறந்திருந்தது; கண்களிரண்டும் சிவந்து கோவைப்பழம் போலிருந்தன. சாதத்திற்கு ஜலம் அதிகமாக விடப்பட்டுப் பாயசம்போலிருந்தது. எதிர் வாசற்படியின்மேல் உட்கார்ந்து அவள் தாய் அவளுக்குக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள். எங்களைக் கண்டதும் ருக்குமணிக்கு அழுகை மேலிட்டது (துக்கம் மேலிட்டது). நான் கேட்டேன்:—"அம்மாமி ருக்குமணிக்கு என்னவாயிற்று?" சுந்தரம்மாள் சொன்னாள்:—"காலையில் அவர் (ருக்குமணியின் தகப்பனார்) பட்டினியாக ஆபீசுக்குப் போனார். ருக்குமணிக்கு அடுப்பு மூட்டிக் காபிகூட செய்யத் தெரியவில்லை. பிறகு ஸ்டவ் மேல் செய்து கொடுத்தாள்". "டப்பாவிலிருந்து பக்ஷணமாவது எடுத்துச் சாப்பிடலாமே" என்று

சொன்னேன். பட்சணமென்றால் பிடிக்கிறதில்லையே என்று ரசஞ் சாதம் பண்ணச் சொன்னேன். அதுகூட அவளுக்குச் செய்யத் தெரியவில்லை. இப்போ அவளென்ன சிறு குழந்தையா? நீங்களாவது அவளுக்குச் சொல்லிக் கொடுங்கள்" என்று சொல்லி சுந்தரம்மாள் நடையிற் போய் உட்கார்ந்தாள்.

நான் ருக்குமணியண்டை போனேன். அவள் பெரிதாக அழத் தொடங்கினாள். நான் அவளைச் சமாதானப்படுத்தி "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டதற்கு "தாயார் எனக்குச்சமைக்கச் சொல்லிக் கொடுக்கவில்லை. அடுப்பங்கரையிற் போனால் 'ருக்கு, அப்புறம் போ, புகையினால் கண் எரியும். நீ குழந்தை, இப்பொழுது முதற்கொண்டு உனக்கேதற்கு இக்கஷ்டமெல்லாம்? செய்யவேண்டிய நாள் முன்னுக்கு வரும்' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். புக்ககத்தில் சமையற்காரனிருக்கிறான். எனக்கோ படிப்பதைத் தவிற வேறொன்றும் வருவதில்லை. அப்பா பட்டினியாய்ப் போனார். சமையலோ ஆகவில்லை, இப்போ என்ன செய்கிறது? எனக்கோ பசியினால் நிற்கவுங்கூட முடியவில்லை."

நான் அவளை பட்சணம் தின்னச் சொல்லி, சமையல் செய்யலானேன். சமையல் ஆனதும் புஷ்பம் தாயாருக்கும் பெண்ணுக்கும் பறிமாறினாள். சாயங்காலம் ருக்குமணியின் தகப்பனார் வந்தார். போஜனம் தயாராயிருந்ததைக் கண்டு அவருக்கும் சமாதானமா யிருந்தது. ஆனால் அது ருக்குவின் முயற்சியினாலானதன்று எனத் தெரிய அவருக்கு வருத்தமுண்டாயிற்று. எங்கள் தாய் எங்களுக்குச் சமையல் கற்பித்ததற்காக அவளை எல்லோரும் மிகவும் மெச்சிப் புகழ்ந்துகொண்டனர். பிறகு சிறிது நாட்களிலெல்லாம் ருக்குமணி புக்ககம் போனாள்.

நான்கைந்து வருஷங்கள் கடந்தபிறகு நாங்கள் இருவரும் மாமா வீட்டுக் கலியாணத்திற்காகச் சென்னைக்குப் போனோம். அங்கு போய் சில தினங்களுக்குப் பிறகு மாமா மகளாகிய கமலத்தையும் அழைத்துக்கொண்டு ருக்குமணியின் பங்களாவுக்குச் சென்றோம். சேவகன் வந்த சங்கதியை அவளுக்குத் தெரிவிக்க அவள் வந்து எங்களை மாடிமேல் டிராயிங் ரூமுக்கு அழைத்துச் சென்றாள். அவள் கணவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயர் சோபாவிற் படுத்து ஏதோ படித்துக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் அவர் எழுந்து அப்புறம் போகவே, ருக்குமணி கொஞ்சிக்கொண்டே "போகவேண்டாம் டாக்டர்! இவர்கள் என் பாலிய சிநேகிதிகள். டீ குடிக்கும்போது குழந்தைகளை இங்கே விடக்கூடாதென்று தாயிடம் சொல்லுங்கள். பிறகு 'அம்மா அவர்களுடைய தோழிமார்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பலகாரமும் டீயும் சீக்கிரம் கொண்டுபோ' என்று சமையற்காரனிடம் சொல்லுகிறீர்களா? ஆனால் போங்கோ சீக்கிரம். இல்லாவிட்டால் குழந்தைகள் வந்துவிடுவார்கள்" என்றாள்.

அதைக் கேட்டு நாங்கள் ஆச்சரியமுற்றோம். புஷ்பம் மிக வாயாடி. அவளுடைய சுபாவம் அவளைச் சும்மா யிருக்கவிடுமா! டாக்டர் புறப்பட்டுப் போனதும் அவள் சொன்னாள்: "டாக்டர் அவர்களுக்கு டாக்டர் அம்மாளைப் பார்த்தால் ரொம்ப பயம்போலிருக்கு"

ருக்குமணி சிரித்துக்கொண்டே சொன்னாள்:—"ஆம் அவர் எனக்கு ரொம்ப அநுகூலமா யிருக்கிறார்."

சற்று நேரத்திற்கெல்லாம் பரிசாரகன் சிற்றுண்டியும் தேத்தண்ணீரும் கொண்டுவந்தான். நாங்கள் மேஜைக்குச் சுற்றிலு முட்கார்ந்து சிற்றுண்டி புசித்து தேத்தண்ணீர் அருந்தலா

றேம். எனக்கு ருக்குமணியின் குழந்தைகளைப் பார்க்க மிகவும் விருப்பமாயிருந்தது. ஆனால் பயனென்ன? அம்மாள் அவர்களுக்குக் குழந்தைகளின் சச்சரவு பிடிக்காது. அப்பிரகாரம் உத்திரவுமாயிருந்ததால் பேசாமலிருந்தேன்; என்னவிந்தை! வாசற்படியில் நான்குவயதுள்ள ஒரு அழகிய சிறுவனும் அவனுக்குப்பின் இரண்டரை வயதுள்ள ஒரு சிறுமியும் நின்றுகொண்டிருந்தனர். குழந்தைகளை அருகில் அழைக்காமலிருப்பதோ எனக்கு மனமில்லை, அல்லது கூப்பிடுவோமென்றாலோ தாய் தந்தையர்களுடைய கட்டளைக்கு விரோதமாக நடந்தாற் போலாகும். எனக்கு யோசனையுண்டாயிற்று. நான் ருக்குமணியை சகஜமாய்ப் பார்த்தேன். அப்பொழுது அவள் குழந்தைகளை விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். எங்கும் நிச்சப்தமாயிருந்தது. ஆனால் அதிக நேரம் அவ்வாறிருக்கவில்லை. பையன் தைரியமாய்ப் பேசலானான். 'எங்களை விட்டுவிட்டுத் தனியாய் டீ குடிக்கிறீர்களல்லவா? கண்ணைப்பார்! எப்படி விழிக்கிறாள்!"

அதைக் கேட்டு ருக்குமணி சிரித்தாள். குழந்தைகள் அருகில் வந்தனர். "இங்கே வரக் கூடாது! வந்தால் தெரியுமா! தாயி! குழந்தைகள் எப்படி மேலே வந்தார்கள்? அதுகளை அழைத்துக்கொண்டுபோ கீழே' என்று உத்தரவளித்து அவள் என்னை நோக்கி "உம்ம டாக்டருக்கும் ஒன்றும் தெரிவதேயில்லை. தங்கம் போன்ற என் குழந்தைகளுக்குப் பிடிவாதம் சொல்லிக் கொடுத்து வைத்திருக்கிறார்! குழந்தைகளை எப்படி நடத்தவேண்டுமென்பதே தெரியவில்லை" என்றாள். அதற்குள் தாயி வந்து குழந்தைகளைக் கூப்பிட அவைகள் நிலத்தில் விழுந்து "காப்பிவேணும்" என்று புரண்டுபுரண்டழ ஆரம்பிக்கவே கொஞ்ச நேரம் வரை இதே அமர்க்களமாயிருந்தது. எங்கள் டீ எல்லாம் மேஜையின் மேல் ஆறிக்கொண்டேயிருந்தது.

நானே நினைத்துப்போய்விட்டேன். அதற்குள் ருக்குமணிக்கு தயவு வந்தது. கையிலிருந்த ஜாரைத்தட்டை மேஜையின் மேல் வைத்து விட்டு எழுந்து குழந்தைகளை நாற்காலியில் உட்கார வைத்து அதுகளுக்காகத் தம்ளரில் தேத்தண்ணீரை ஊற்றலானாள். ஊற்றியான பிறகு "அடுத்தவீட்டுக் கனகம்மாள் குழந்தைகளை எப்படி பயத்துடன் நடத்துகிறாளோ தெரியவில்லை. எனக்கென்னவோ தயவுதான் ஜாஸ்தியாயிருக்கிறது! குழந்தைகளுடைய அழுகை முகம் பார்க்க என்னால் முடிவதேயில்லை" என்று சொல்லிக்கொண்டே ருக்கம்மாள் குழந்தைகளுக்குத் தேத் தண்ணீரும் பிஸ்கெட்டும் கொடுத்தாள்; இவள் இவ்வளவு அமர்க்களம் செய்ததனையன்றிக் குழந்தைகளுக்கென்னவோ இவளிடத்தில் பயமென்பது லேசமும் கிடையாது. அதற்குக் காரணம் இவள் மனதில் திடமின்மைதான். இவள் பேசுவதொன்று செய்வதொன்று. குழந்தைகள் அழுவதை அவளால் பார்க்கமுடியாது. தற்சமயத்தில் அவள் தயவுடன் குழந்தைகளுடைய இச்சைப்படி நடப்பாள். தான் மனதில் செய்வதாக நிச்சயித்துக்கொண்டதை மறந்துவிடுவாள். அவளுடைய கோபமும் எத்தகையதென்பது குழந்தைகள் நன்றாயறிந்திருந்தனர்.

"அம்மா, காமுவோட கப்பு பெரிசாயிருக்கு, அதுலே பாலு ரொம்பபோட்டிருக்கே! எனக்கு வேண்டாம்போ இந்த டீ! எனக்கு காமுவோட கப்பு வேணும்!"

"உம், நான் தரமாட்டேன், என் கப்பு" என்று காமு தனது கப்பை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். மறுபடியும் ருக்குமணி எங்களுடன் வந்துட்கார, மணி தனது கப்பை விட்டெறிந்தான். தேத் தண்ணீரெல்லாம் சிந்திப்போயிற்று. நாங்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

அதற்குள் ருக்குமணி, காமுவுக்கு இரண்டு அரையும், மணிக்குச்சில விளாறுகளுடன் கூடிய வசவுகளையும் வெகுமதி கொடுத்தாள்! குழந்தைகள் பெரிதாக அழத்தொடங்கின. தாயி குழந்தைகளை சமாதானப் படுத்தலானாள். அதைப் பார்த்து ருக்குமணி "நீ எப்போதும் இப்படித்தான்! அதனால்தான் குழந்தைகளுக்குப் பிடிவாதம் அதிகமாகிறது. உன்னை யார் அதுகளை அழைத்து சமாதானப்படுத்தச் சொன்னது?" தாயி சொன்னாள்:—"நன்றாயிருக்கு! நீங்கள் டீ குடிப்பது, குழந்தைகள் பார்த்துக் கொண்டிருப்பதோ! எந்த ஊர் நியாயம் இது?"

தாயி குழந்தைகளின் வக்காலத்து எடுத்துக் கொள்ளவே, அவைகள் அதிகமாக அழலாரம்பித்தன. குழந்தைகள் அழுவதைக்கண்டு ருக்குமணியின் மனம் தாளாமல் அதுகளுடைய கண்களைத் துடைத்து மறுபடியும் பெரிய கப்பு நிறையத் தேத்தண்ணீர், நிறைய பால், மறுபடியும் அழக்கூடாதென்று இரண்டு பத்தாஸ் எல்லாம் கொடுத்தாள். இருந்தபோதிலும் மணிக்கு ஆசை அதிகரித்தது. "அம்மா! இன்னொரு பத்தாஸ் எனக்குத்தா" என்றான். உடனே பத்தாஸ் கிடைத்தது.

பிறகு காமுவின் முறைவந்தது. "அம்மா! அவனுக்கு மாத்திரம் ரெண்டு பத்தாஸ், எனக்கில்லையோ?" "என்னதொந்தரவு இது! இனிமேல் என்னை டீ குடிக்கவிடப்போறேளா இல்லையோ! இப்படிச்செய்வதிலேயே பொழுதைப்போக்கப் போகிறேனா" என்று சொல்லி ஒரு பத்தாஸ் காமுவின் கையிற் கொடுத்தாள். பிறகு பேசலானாள்:— "வெறும் கல்வியை மாத்திரம் கற்பித்திருக்கிறாள் எனக்கு. உங்களைப்போல விவகார ஞானம் கொடுத்திருந்தால் தங்கம் போன்ற என் குழந்தைகள் இப்படியிருக்குமா? என்தாயார் ஒரு தடவைகூட உங்களைப் போல் உபதேசம் செய்ததே கிடையாது."

புஷ்பம் சொன்னாள்:—"சுந்தரம்மாள் பேரில் ஏன் குற்றத்தைச் சாற்றுகிறாய்? அவள் தவறினது உண்மைதான். அந்தக் குற்றம் இன்னதென்று உனக்குத் தெரிந்திருந்தும் நீ குழந்தைகள் விஷயத்தில் இவ்வளவு அலட்சியமாயிருக்கிறாயே அதென்ன? ருக்கு, நீ முதல் தடவை பிறந்தகம் வந்திருந்தபோது நடந்த சங்கதி உனக்கு ஞாபகமிருக்கிறதா? அப்பொழுது நீ என்ன சொன்னாய்? 'தாயார் சமையல் சொல்லிக் கொடுக்கவில்லை, அதனால் நான் இந்த தசையை அடைந்தேன். எனக்கு ஒன்றும் வருகிறதில்லை' என்று சொன்னாயே. உன் குழந்தைகள் பெரியவர்களானால் இப்படித்தான் சொல்லி உன் பேரில் குற்றத்தைச்சாற்றுவார்கள். என் பேச்சைச் சற்று கவனி, இன்னும் அவகாசமிருக்கிறது. நீ ஜயமாய் முயற்சியெடுத்துக் கொண்டால் நல்ல பலனை அடையலாம். ஏனென்றால் இளஞ்செடி எப்படி வளைந்த போதிலும் வளையும். முக்கியமா, கேவலம் தாயியை நம்பியிருந்தால் பின்னுக்குப் பச்சாத்தாபமடைய வேண்டிவரும்."

நானும் கமலமும் ஒரு புஸ்தகத்தின் பக்கங்களைத் திருப்பிக்கொண்டே பேசாமல் உட்கார்ந்திருந்தோம். கவனமெல்லாம் புஷ்பத்தின் வார்த்தையின் கண்ணிருந்தது. புஷ்பமோ மூச்சு விடாமற் பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது எனக்கு பயமுண்டாயிற்று. பேச்சின் முடிவில் எங்கே சண்டை ஏற்பட்டு விடுமோ வென்று தோன்றியது. அதற்குள் கமலம் புஷ்பத்தின் வாயை மூடச்சொல்லி கடிகாரத்தைப் பார்த்துவிட்டு சொன்னாள்:— "மணி ஐந்தரையாயிற்று. இனி உலாத்தப் போவதேப்போ, திரும்பி வருவதேப்போ? இந்த புஷ்பத்துக்குப் பிரசங்கமே கிடையாது. ஏன்? புஷ்பம், அப்படித்தானே?"

புஷ்பம்:—"என்னைப் பரிகாசஞ்செய்கிறாயே. நீ என்னை தடுத்திராவிட்டால் நான் பேச்சை நிறுத்தியிருக்கவே மாட்டேன். அவளிடத்தில் எனக்கு இன்னும் எவ்வளவோ பேசவேண்டியதிருக்கிறது."

"அப்படியா! ஆனால் இனி வண்டியில் உட்கார்ந்து வேண்டிய மட்டும் பேசு!"

அதற்குள் ருக்குமணியும் குழந்தைகளும் வந்தார்கள். பிறகு நாங்கள் வண்டியிலுட்கார்ந்து புறப்பட்டோம். ருக்குமணியின் முகம் வாடியிருந்தது. இருந்தபோதிலும் அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்:— "வாஸ்தவந்தான், புஷ்பம் பேசின பேச்சினால் நான் எப்படி யோசித்துப் பார்த்தபோதிலும் என்பேரில் தான் குற்றம் காணப்படுகிறது. ஆனால் நான் பிரயத்தனம் செய்து பார்ப்பேன். வாஸ்தவத்தில் எனக்கு திடமனதில்லை. நாம் ஸ்திரீகள் அல்லவா. கோமளமான மனதுடையவர்களாகத் தானிருப்போம்."

பிறகு எங்களுக்குச் சிரிப்பு வந்தது. புஷ்பம் ஏதாவது பேசுவாளோ என்கிற பயத்துடன் நான் அவளைப் பேசாமலிருக்கும்படிக் கண்ணைக் காட்டினேன். மறுபடியும் ருக்குமணி பேசலானாள்:—"அடுத்தவீட்டுக் கனகம்மாள் குழந்தைகளை ரொம்ப ஹத்துடன் நடத்துகிறாள். நான் மறந்துவிட்டேனே. இல்லாவிட்டால் அவளையும் கூப்பிட்டிருப்பேன். அவளுக்கும் உங்களுக்கும் பரிசயப்படுத்தி வைத்திருக்கலாம். நீங்கள் எத்தனை நாள் இங்கு வசித்திருப்பீர்கள்? அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று வாருங்கள். உங்களுக்கு இன்றைக்கே இன்விடேஷன் கொடுக்கிறேன். பிறகு நாம் கனகம்மாளைக் கூப்பிடலாம். அவளுக்கும் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவளுடைய புருஷன் வக்கீல். ஆனால் கனகம் ரொம்ப திடமனதுடையவள். புஷ்பம், நான் அடிக்கடி கனகத்தை திடமனதுடையவள் கல் மனதுடையவள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்குத் தெரிந்தது எனக்கு [illegible] திடமனதுவேண்டுமென்பதன் காரணம். பிறகு, என்னை மன்னியுங்கள். குழந்தைகளுடைய தொந்தரவினால இன்றைக்கு உங்களைச் சரிவர உபசரிக்க முடியவில்லை. அதனால வருத்தமாயிருக்கிறது."

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை மறுபடியும் நாம் சந்திப்போமாக! நல்லது, நான் வருகிறேன்" என்று சொல்லி ருக்குமணி தன் வீட்டை நாடிச் சென்றாள். நாங்கள் மூவரும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று வருவதாகச் சொல்லி வீட்டிற்குச் சென்றோம்.

ஜோன் ஆப் ஆர்க்.

(ஜனாப் A. M அல்லாபிச்சை).

(மூன்றாம் மலர் 690-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அம்மடமான் ஜோப் என்னும் பிரபுவை நோக்கி, "தன்னுடைய சிறந்த நாடுநகரங்கள் சத்துருக்களின் கரங்களிலகப்பட்டிருக்கின்ற துக்கத்தாலும், தன்னுடைய சிறப்புற்ற சேனைகளும் பெருமைவாய்ந்த யுத்தவீரர்களும் போர்களத்தில் வழிந்தாலுண்டாகும் பெருவியாகூலத்தாலும், கணக்கற்ற தோல்விகள் அவருடைய மனோதைரியத்தை முற்றுமழித்திருக்கிற வகையாலும், ஆடல பாடல முதலியவற்றிலதன காலத்தையுங் கவனத்தையுஞ் செலுத்திவருமரசிளங்குமாரனிடம் மேலிப்பிராஞ்சு தேசத்தை இரட்சிக்கும் வண்ணம் கடவுளால அனுப்பப்பட்ட என் வருகையைத் தாமனை தெரிவிப்பீர்" என்று கூறினள்.

அதனைக் கேட்ட அப்பிரபு அவ்வாறே அரசிளங்குமாரனது அரண்மனைக்கு அதிவேகமாய்ச் சென்றனன். அங்கு அரசிளங்குமாரன் ஆக்னெல் என்னும் வைப்பாட்டியுடனும், மேரி என்னும் மனைவியுடனுமிருந்ததைக் கண்ணுற்றனன் ஜோப் என்னும் பிரபு. அப்பொழுது ஆக்னெல் ஜோனை நோக்கி, "ஆர்லியன்ஸ் பிரபுவின் திருமகளே! உனது அரசன் தைரியலக்ஷ்மியைத் தன் அகத்திலிருந்து நீக்கி யொழித்துவிட்டு ஏக்கமென்னுங் கடலிலழுந்தித் தனிக்கும் அவமானத்தைக் காண இங்கு வந்தாயோ? தன் நாடு நகரங்களைச் சத்துருக்கள் வயப்படுத்திவிட்டு மிக்க தூரத்திலுள்ள டாபினி என்னுமிடத்திற்குச் செல்லக் கருதும் வீரமற்ற செய்கையினை யறியும்வண்ணம் வந்தனையோ? வீரத்துடன் யுத்தம் புரிந்து சத்துருக்களிடமிருந்து தன் நாடுநகரங்களைப்பற்றாது ஓடத் துணிந்திருக்கும் பயங்காளியைக் காண இச்சிக்கின்றனையோ?" எனக் கூறினள். இவற்றைச் செவியுற்ற சார்லெஸ் என்னும் அரசிளங்குமாரன் ஆக்னெஸ்ஸை நோக்கி, "புண்பட்டிருக்கு மனததை ஏன் நீ கடும் வார்த்தைகளால் மிகப் புண்படுத்துகின்றாய்? என் தேய முழுமையும் கொடிய சத்துருக்களால் சூறையாடப்படுகின்றது; என்னுடைய பெருங்கோட்டைகள் சோலர் வயமாகின்றன; தைரியமே அவதாரமாக உதித்த பெரும் வீரர்கள் யுத்தத்தில் மாளுகின்றனர்; என்னுடைய குடிகள் எனக்கு விரோதமாக ஆயுதமணிகின்றனர். நாம் கவலையுடனிருந்தபோதிலும் ஜோப்! உனக்கு விருந்தளித்துச் சந்தோஷமாக இன்புறுத்தல் நமமுடைய கடமை" என்று கூறினன்.

அதைக் கேட்ட ஜோப் அரசிளங்குமாரனை நோக்கி, "என் தலைவ! தங்களுடைய துயை முற்றும ஒழிய மிக்க சந்தோஷம் அடையப்பெற்றீர். யான் தங்களுக்கு மிகக்களிப்பையுண்டாக்கத்தக்க ஒரு சமாசாரத்தைக் கொண்டு வந்திருக்கின்றேன். அஃதாவது இப்பிராஞ்சு தேயத்தை இத்துன்பங்களிலிருந்து பாதுகாக்கும்வண்ணம் ஒரு மங்கைக்குத் தேவனுத்தரவு அளித்திருக்கின்றார். அவள் தங்களுடைய சமூகத்திற்கு வர விரும்புகின்றனள். அம்மங்கை அற்புதமான செயல்களை விளைவிப்பதாக உறுதிமொழி கூறுகின்றபடியால், அம்மடமாதை உரைகேட்டு நடபுதல் நமமுடைய கடமையாகும்" என்று மொழிந்தனன். அவ்வார்த்தைகளைக் கேட்ட அரசிளங்குமாரன் மிக்க ஆச்சரியமடைந்து ஜோனை நோக்கி, "இத்தகைய வார்த்தை உன்னைத்தவிர வேறு எவரேனுங் கூறியிருப்பின், யாதொரு சந்தேகமுமின்றி அவ்வுரையைப்பற்றி யான் நகைத்திருப்பேன். கணக்கற்ற வீர சிங்கங்களால் இரட்சிக்கப்படாத இந்நாட்டை ஒரு மங்கையா இரட்சிக்கப் போகின்றனள்! ஆயினும் இந்நாட்டை இப்பொழுது இரட்சித்தல் ஓர் அற்புதமேயாகும். அவள் அற்புதங்களை நிகழ்த்தும் வன்மையைப் பெற்றிருப்பின், என்னை எப்பொழுதுமறியாத அவள் என்னை இச்சபையிலறிந்து யானே அரசன் என்று உறுதியாகக் கூறின அவளுடைய வார்த்தைகளை நாம் நம்பலாம்" எனக் கூறி ஒரு தூதனை அனுப்பி, அவளைக்கொணருமபடிஉத்தரவு அளித்தனன்.

அவளைக் கொணரும்படி அத்தூதன் சென்ற பின்னர் அரசிளங்குமாரன் மாறுவேடம் பூண்டு தன் சிங்காசனத்தின்மீது ஒரு நண்பனை வீற்றிருக்கும்படி செய்து அவனுக்குக் கிரீட முதலிய அரச சின்னங்களை அணிவித்தனன். சென்ற தூதன் அம்மங்கையுடன் இராஜ சபைக்கு வந்தனன். அப்பொழுது அம்மடமயில் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்த போலி யரசனைச் சற்றுநேர முற்றுநோக்கிய பின்னர்

அங்குள்ள ஓரிடத்தில் மாறுவேடம் பூண்டிருந்த மாசற்ற பெண், "தாங்களே அந்நாட்டை யாளுமரசர்! என் கரங்களில் வாட்படை யேந்தி உங்களுடைய பகைவர்களாகிய ஆங்கிலேயர்களை ஆர்லியன்ஸ் நகரத்திலிருந்து துரத்துவதுமன்றித் தங்களை ராம் எனும் பட்டணத்தில் முடிசூடும் வண்ணம் கடவுள் என்னை இங்கனுப்பியிருக்கின்றனர்" என்றாள். இச்சிறுமி கூறிய தெய்வபக்தி வாய்ந்த வார்த்தைகளைச் செவியுற்ற அச்சபையார் யாவரும் மிக்க ஆச்சரியமுற்றதுமன்றி அவள் பிரான்சு தேசத்தை இரட்சிப்பது திண்ணமெனக் கருதினர். அச்சமயத்தில் அரசிளங்குமரன் சந்தோஷக்கடலி லாழ்ந்தவனாய் அப்பெண்மணியைப் பார்த்து "கடவுளால் பிரான்சு தேசத்தை இரட்சிக்க வந்த மங்காய்! நீ கூறும் வார்த்தைகள் யாவற்றையும் நம்புவதன்றிக் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு பெருங் காரமென யான் நின்னை உண்மையாகக் கருதுகின்றேன். நின்னைத் தங்களுடைய பெருந் தலைவியாகக்கொண்டு பகைவர்களுடன் பொருது வெற்றியடையுமாறு என்னுடைய பிரசித்தி பெற்ற வீரர்களுக்குத்தரவு அளிக்கின்றேன். ஆயினும் நீ கூறுமுரை நம்பத்தக்கதென நமது வேதத்தின் சாஸ்திரங்களை முற்றும் நன்குணர்ந்த பெருமறிஞர்கள் கூறின் யாம் ஜனங்கள் அவர்களுடைய வார்த்தைகளை நம்பி நின்னைத் தங்கள் தலைவியாகக்கொண்டு வையகத்தில் இதுவரையிலும் நிகழாத வீரச் செயல்களை நிகழ்த்துவர்கள் என்பதற்குச் சற்றும் ஐயப்பாடில்லை" என்று கூறிப்பின்னர் தன் ஆதரர்களை நோக்கி, "தமதரிய பெருங் குருக்கள் யாவரும் அர்ச் கேதரின் கோயிலிற் சேரும் வண்ணம் யான் கூறியதாகக் கூறுவீர்" என உத்தரவு அளித்தனன்.

மன்னனது கட்டளையைச் செவியுற்ற பிரான்சு குருக்களும், கல்வியிற் சிறந்த அறிஞர்களும், வேத நூல்களில் தேர்ச்சியடைந்த பெரும நிபுணர்களும் மேற்குறித்த ஆலயத்தில் வந்து கூடினர். பின்னர் அவர்களுத்தரவைத் தலைமேற்கொண்டு ஜோன் என்னுமரிய பெருமங்கை ஆர்லியன்ஸ் பிரபுவின் திருமகனுடன் வந்தவர்களெதிரில் நின்றனள். அப்பொழுது அவ்வாலயத்திலுள்ள பலரும் இம்மங்கை பேய்வயப்பட்டிருப்பினு மிருப்பளென்றையங்கொண்ட காரணம்பற்றி அவர்களுக்குத் தலைவனாக இருந்த ஒரு பெரியார் அவளை நோக்கி "கொடிய பேய் நின்னைத் தன்வயப்படுத்தியிருக்கும்பட்சத்தில் அஃது இப்பொழுது கடவுளின் திருநாமத்தால் பரிசுத்தமாக்கிய பானியினது சக்தியால் நின்னை விட்டோடுவதாக!" என்றுச்சரித்துத் தன் கரத்தில் கொஞ்சம் ஜலமேந்தி அம்மடமானது திருவதனத்தில் தெளித்தனன். அப்பெரியா ருச்சரித்த மந்திரத்தையுஞ் செய்கையையுங் கண்ட அம்மடந்தை மிகுந்த வெகுளி பெய்தியவளாய் ஆங்குள்ள பலரையும் நோக்கி, "தெய்வபக்தி வாய்ந்த ஐயன்மீர்! கிறிஸ்துவ மதத்தைச்சார்ந்த பெருமைவாய்ந்த குருக்காள்! பரமன் பிரான்சு தேசத்தை இரட்சிக்குமவண்ணம் எனக்கு உத்தரவு அளித்திருக்கின்றனர். யான் நம்பத்தக்க பற்பல அசரீரிகளின் மூலமாயும், பற்பல பிரசாசனங்களின் மூலமாயும் கடவுள் என்னைப் பிரான்சு தேசத்தைக் காக்கத் தேர்ந்தெடுத்திருக்கின்றாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகத் தெரிகின்றது" என்று கூறினள். இதைச் செவியுற்ற அக்குருமார் அவளை நோக்கிப் பற்பல கேள்விகளை கேட்டனர். ஜோன் அவற்றிற்குத் தகுந்த விடையளித்தபடியால் முடிவில் அவர்கள் எல்லோருமொரே மனத்தவராய் அம்மங்கை கடவுளால் பிரான்சு தேசத்தை இரட்சிக்கும் வண்ணம் அனுப்பப்பட்டவளென்று நன்குணர்ந்து தங்கள் கருத்தினை வெளியிட்டனர்.

பின்னர் ஜோனும் மற்றவர்களு மரண்மனைக்கேகினர். அவ்விடத்து மிகச் சிறந்த விருந்தளிக்கப்பட்டது. சிலர் வீணை வாசிக்கலானார்கள். வேறு சிலர் அரிய பாடல்கள் பாடலாயினர். இவ்வாறு பலரும் மிக்க சந்தோஷத்துடன் காலத்தைக் கழித்துவருமித் தருணத்தில், ஆர்லியன்ஸ் நகரத்திலிருந்துவந்த ஒரு தூதன் அரண்மனையின் வெளிப்புறத்தில் நிற்பதை யுணர்ந்த அரசிளங்குமரன் அங்குள்ள பலரையும் நோக்கி, "வெளியே நிற்கும் தூதனுக்கு விருந்தளிப்பீர்கள்" என்றனன். இதை யறிந்த மெய்க்காவலர் அங்குள்ள தூதனை அரண்மனைக்குள்ளேகும்படி உத்தரவு அளித்தனர். உடனே அவனுள்ளே சென்று அங்கு வீற்றிருக்கு மரசிளங் குமாரனை நோக்கி, "பிரான்சு தேசத்து மன்ன! ஆர்லியன்ஸ் நகரத்திலுள்ள ராணுவ மிப்பொழுது மிக்க கஷ்டமனுபவிக்கின்றது. ஆகார மின்மையாலும், வீரர்களின்மையாலு முண்டாகும் துன்பத்திற்குச் சற்றுமஞ்சாமல் தங்கள்பொருட்டுத் தங்களரிய வுயிரினையு மளிக்கத்தக்க திடமனத்துடன் சத்துருக்களைக் கொறல் செய்யத் துணிந்திருக்கின்றனர் அவ்வீரர்கள். ஆகையால், மிக்க இன்னலை யனுபவிக்கு மவ்வீரர்களுக் கிப்பொழுது தகுந்த உதவி புரிதல் தங்கள் கடமையாகும்" என வுரைத்தனன். இவ்வுரை கேட்ட சார்லெஸ் "இத்தகைய வீரசிங்கங்களுக் குடனே உதவிபுரிதல் அவசியமன்று" எனச் சிறிதும் யோசியாமற் கூறினன். அப்பொழுது ஜோன், "மன்ன! போர்க்களத்தில் தங்கள்பொருட்டு மிக்க பராக்கிரமத்துடன் போர்புரிந்த சிறந்த வீரனானவன் இத்தூதன்! ஆர்லியன்ஸ் நகரத்தில் சொல்லொண்ணாத் துன்பமிருக்கின்றமையின், அங்குள்ளாரித்தகை வீரனைத் தங்களிட மனுப்பியிருக்கின்றனர்" என்றனள். இவற்றைச் செவியுற்றிருந்த அத்தெய்வப்பெண் "ஐய! சற்றுமஞ்சாதீர்! ஆங்கிலேயர்கள் ஒருபோதும் வெற்றியடையார்கள். கடவுளே அந்நகரத்தைக் காக்கும் வீரனாக இருப்பதால் ஆங்கிலேயர்களுடைய முயற்சிகள் யாவும் வீணாவதற்குச் சற்றும் ஐயப்பாடில்லை. நாளைய தினம் ஆர்லியன்ஸ் நகரத்தின் உதவியாகச் செல்வோம்" என்றாள்.

மறுநாட்காலை எவ்விடத்தும் வேலைகள் நிறுத்தப்பட்டன. உழவர்கள் தங்கள் வயல்களின் வேலையைச் செய்தாரில்லை. ஜனங்கள் திரள் திரளாய் வீதிகளில் நின்றனர். கடவுளால் அனுப்பப்பட்ட மங்கையைக் காணும் பொருட்டுப் பலரும் தங்கள் விழிகளைத் திறந்துகொண்டிருந்தனர். இச்சமயம் அரசிளங்குமரன் ஜோனுடனும் அவனுடைய தோழர்களுடனும் சபையார்களுடனும் மற்றும் பிரஜைகளுடனு மங்குள்ள அர்ச் கேதரினது கோயிலுக்குச் சென்றனன். வீதிகளில் நின்றுகொண்டிருந்த ஜனங்களில் சிலர் இம்மங்கையைப் பார்த்து, "நமக்கு இன்பத்தை விளைவிக்க உதித்த இச்செல்வியைப் பாருங்கள்" என்றார்; சிலர், "தெய்வபக்தி வாய்ந்த சாந்தமான இவளது வதனத்தைப் பாருங்கள்" என்று விளித்தார்; சிலர், "ஒரு வீரனுக்குரிய ஆயுதங்களை யணிந்து செல்லு மிவளது தோற்றத்தினைக் கவனியுங்கள்" என மெச்சினர்; சிலர் "சிறுமியாகிய இவள் பற்பல வீரர்களா லிரட்சிக்கப்படாத நமது தேசத்தை யிரட்சித்தல் நம்பத்தக்கதோ?" என்று சந்தேகித்தார்; சில மகளிர், "நம்மைப்போன்ற பெண் போர்க்களத்திற்குத் தன் தேசத்தையு மரசனையு மிரட்சிக்கச் செல்லும்பொழுது, யாம்மாத்திரம் வீட்டினுட்கார்ந்திருத்தல் தகுதி யுடைத்தன்று" என்று நாணமெய்தினர்; சிலர், "இம்மங்கை யெடுத்துக்கொண்ட காரிய மினிது முடியுமாறு பரமனுதவி புரிவாராக!" என்று கடவுளை வேண்டினர். இவ்வாறு மாந்தர் பலரும் ஒப்பற்ற சந்தோஷமெய்தினர். பின்னர் ஜோனும்

அவளுடன் சென்ற மற்றவர்களும் அர்ச்சேதரினது ஆலயத்திற்குட் புகுந் தங்குள்ள பலி பீடத்தை யணுகிக் கடவுள் தங்களுக்கு வெற்றியும் சந்தோஷமு மளிக்குமாறு வேண்டினர். இக்காரிய முடிந்தவுடனே ஜோனும் மற்றவர்களும் அரண்மனைக் கேகும்பொழுது அவள், "உலகத்தைப் படைத்துக் காக்கும் தங்களின் கட்டளையின் காரணமாக என் காத்திலுள்ள இவ்வாட்படையைக் கொண்டு யான் சத்துருக்களைக் கோறல் புரிவேன். பரம! நீர் எங்களுடைய இரட்சகர்! தங்கள் தேயத்தின் நன்மையை நாடிப் போர்க்களத்திற் கேகும் வீரர்களை நீர் காப்பீராக!" எனக் கூவினள். முடிவில் அரண்மனைக்கேகி நல் லுணவு உண்டபின்னர் அரசி வசிக்குமிடத்தை யணுகினள். அந்நங்கையின் முக வாட்டத்தைக் கண்ட ஜோன் மனமிரங்கினள். பின்னர் மேரி இந்நங்கையை நோக்கி ஆர்லியன்ஸ் நகரம் படுந் துன்பத்தையும், அவ்விடத்திலிருந்து வந்த தூதன் மன்னனைப் பார்த்துப் பற்பல வார்த்தைகள் கூறிய தன்மையைப்பற்றியுமெடுத்துரைத்தனள். இந்நங்கையுடன் பலவாருகப் பற்பல விஷயங்களைப் பேசிக்கொண்டு அந்நாளைக் கழித்தனள்.

(தொடரும்)

ஸ்ரீ கிருஷ்ணன் காலடி.

(AN ADAPTATION).

(சிறு கதை).

(ஸ்ரீமதி எஸ். அம்புஜவல்லி).

கண்ணன் வழிபாடு.

மாதவன் பெயர் சொல்லி யாரேவனழைப்பினும்
பாதகஞ் செய்த பெரும பாபியாயிருப்பினும்
சாதகஞ் செய்யச் சீக்கிரமே வந்திடுவான்
பாண்டவர் தோழனே பக்தர்கள் சகாயனும்.
காட்டிலும் மேட்டிலும்
காரிருள் போதிலும்
உற்று—உனக்குகந்த பொருளாய்,
எங்கு இருந்திடுவான் எசோதை
இளஞ் செல்வன்.
இராட்டிலும் எட்டிலும்
இராகமிசைப் பாட்டிலும்
மற்று—ருலகில் மறைந்த அருளாய்
எங்கும இருந்திடுவான் எசோதை
இளஞ் செல்வன்.

ஒருகாலத்தில் ஓர் ஏழை முசண்டைக்கார அம்மையார் இருந்தாள். அவள் தினம் முறுக்கு முசண்டைகள் சுட்டு விற்று ஜீவித்து வந்தாள். அவளுக்கு பந்துக்கள் யாருமில்லை. நல்லமன முடையவள். குழந்தைகளுக்கென்றால் கூட இரண்டு சுற்று போட்டுப் பெரிய முறுக்காய்ச் சுற்றிக் கொடுப்பாள். "பசி" யென்று வந்தவர்க்குக் காசு வாங்காமலே கையளவு அள்ளிக் கொடுப்பாள். அவள் வெகு தெய்வ பக்தியுடையவள். அவள் நிதம் ஒரு தட்டில் முறுக்கு முசண்டைகளுடன் கோவிலுக்குச் சென்று சுவாமிக்குக் காட்டி நிவேதனஞ் செய்து வருவாள். மேலும் அக்கோவில் அர்ச்சகர் வீட்டு நாட்கிழமைகட்குச் சென்று கூலி இல்லாமலே மாவரைப்பது முதலிய வீட்டு வேலைகளைச் செய்து கொடுத்து வருவாள். அந்த அர்ச்சகர் வீட்டில் கிருஷ்ண ஜயந்தி தினமன்று அதிகப் பிரபலமாய்க் காரியங்கள் நடக்கும். வீட்டுப் பெண்டுகள் எல்லாம் மாவு முதலியன இடிப்பதிலும், முறுக்கு சீத்தண்டை முதலிய பக்ஷணங்கள் செய்வதிலும் கவனமா யிருப்பார்கள். சிறு பசங்கள் எல்லாம் மாக்கோலமிட்டு வீட்டை அலங்

கரித்துப் புஷ்பமாலைகள் கட்டிக் "கிருஷ்ணன் வருகிறார், கிருஷ்ணன்வருகிறார்" என்று கூவிக் குதூகலிப்பார்கள். மறுநாட்காலை "இதுதான் கிருஷ்ணன் காலடி" என்று தங்களால் முதல் நாள் போடப்பட்ட மாக்கோல அடியைக்காண்பிப்பார்கள். அவையைப் பார்க்கும் அந்த அம்மையாரும் தன் குடிசைக்குக் கிருஷ்ணன் வரமாட்டாரா, அவரது காலடி தன் வீட்டுவாயிலிலும் பதிந்திராதா என விரும்பலானாள். பேதையான அவள் அந்த அர்ச்சகரை கிருஷ்ணனைத் தன் வீட்டிற்கும் வரும்படி செய்ய சதா கேட்டுக்கொண்டிருப்பாள். அவரும் இவள் மூடம் என்று "ஆகட்டும், இவ்வருடம் வரும்படி செய்கிறேன்" என்று சாக்குச் சொல்லிவந்தார். பிறகு ஒருமுறை அவர் இவள் உபத்திரவம் பொறுக்க முடியாமல் இவளைக் கேலி செய்ய எண்ணி "நாளை தினம் கிருஷ்ண ஜயந்தியன்று அவர் கட்டாயம் உன் வீட்டிற்கு வருவதாயுரைத்துள்ளார். நீ மட்டும் எல்லாம் வெகு பக்தியுடன் சேகரித்து வை" என்றார்.

அப்படியே இவள் மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்து சமீபமுள்ள காட்டிற்குச்சென்று, தோழ உதிர்ந்து கிடந்த கனி புஷ்பங்களைப் பொறுக்கி வந்து வைத்து விட்டு இடைச்சேரிக்குச்சென்று கிருஷ்ணனுக்குக் கென்று சிறு சங்கில் பால் வாங்கி வந்து வைத்தாள்.

பிறகு வீட்டைமெழுகிச் சுத்திசெய்து, வழக்கம்போல் முறுக்கு முசண்டைகளைச் சுட்டெடுத்து ஓர் சிறு கூடை நிறம்ப வைத்து, நடுவீட்டில் பாய் விரித்து விளக் கேற்றி வைத்தாள். இவ்வளவும் செய்துவிட்டு தானொன்றும் உண்ணாமல் உபவாசமிருப்பவளாய் வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டு கிருஷ்ணன் எப்போது வருவார் என்று எதிர்பார்த்திருந்தாள்.

அன்று நல்ல கனத்த மழைபெய்தது. காலத்திரியும் சிலிர் சிலிர்த்துக்கொண்டு சந்து குளிர்ச்சியாயிருந்தது. ஆகையால் பாதையில் அதிக ஜனநடமாட்டம் இல்லை. அப்போது ஒரு பிச்சைக்காரன் தொப்பமாய் மழையில் நனைந்தவனாய், குளிரால் உடம்பு நடுங்கி உதறலெடுக்க அவ்வழியே நடந்து சென்றான். அதைக் கண்டு அவ்வம்மையார் மனங்கசிந்து அவனை உள்ளழைத்துத் தன் பழைய வஸ்திரத்தை ஈந்து ஒரு துண்டம் முறுக்கும் சில பண்டமும் கொடுத்தனுப்பினாள். பிறகு சிறிது நேரம் பொறுத்து ஓர் தள்ளாத கிழவி காட்டிற்குச் சென்று சுள்ளிகளைப் பொறுக்கிச் சுமை கட்டி முதுகிற் சுமந்து கொண்டு அதிகப் பசி தாகத்தால் களைத்தவளாய் மெல்ல அவ்வழியே நடந்து சென்றாள். அம்மையாரும் அவளைப்பார்த்துப் பரிதபித்து உள்ளே வரச்சொல்லி, கிழவியின் சுமையை இறக்கி, அவளுக்குப் பல்லாவிலிருந்த பழையதை இட்டு, குடிக்கத் தண்ணீர் கொடுத்து இளைப்பாறச் செய்து அனுப்பினாள். பிறகு நாழிகை செல்ல மாலைப்போதில் தன் தாயை விட்டுப் பிரிந்து வீட்டிற்குச் செல்ல வழிதெரியாமல் தவிக்கும் ஓர் சிறு குழந்தை அழுதுகொண்டே அவ்வழியே வர, அதைக்கண்டு ஓடி வாரியெடுத்தாசையுடன் அணைத்து, வீட்டிற்குப் போய் பாலைக்கொண்டு பரிந்தூட்டிச் சீராட்டித் தாலாட்டித் தூங்க வைக்கவும், குழந்தையின் தாயார் குழவியைக் காணாமல் தேடி வழியே வந்திட, அவள் கையில் குழந்தையை ஆதரவுடன் ஒப்புவித்து அன்புடன் பேசி அனுப்பினாள். இதற்குள் இரவும் வந்துவிட்டது. இன்னும் கிருஷ்ணன் வரவில்லையே என்று ஏங்கினாள். "கிருஷ்ணா! இன்னும் மேன் உன் திருவடி என் எளிய குடிசையில் வைக்கப் படவில்லை? இந்த நாள் உன் பிறந்த நாள் என்பது மறந்து விட்டதோ?" என்று வருந்தி அழைத்தாள்.

உடனே சந்தடியில்லாத அவ்வேளையில் ஒரு குழவியின் இனிமையான சிறுகுரல் கேட்டது. "அம்மே! நீ சந்தோஷமடை. நான் வார்த்தை பிழையில்லை. என்னைப் பிரியமாய் அழைக்க உன் வீட்டிற்கு மும்முறை வந்துள்ளேன். குளிரினால் வருந்தியபோது அன்புடன் அழைத்து உன்னால் கந்தை அளிக்கப்பெற்ற பிச்சைக்காரன் நானே. பசியால் வருந்த நீயழைத்துப் பழையது இட்ட கிழவியும் நான்தான். நான்தான் தாயை விட்டுப் பிரிந்து பரிதபிக் கையில் நீ பாலூட்டிச் சீராட்டித் தேற்றிய அக்குழந்தை" என்றது. மறுநாள் அவ்வூர் ஜனங் கண்டு அதிசயிக்க அந்தம்மையார் வீட்டுவாயிலில் ஒரு சிறு குழந்தையின் அழகிய காலடி பதிந்திருந்தது. அது காற்று மழைகளினும் கலைக்கப்படாததால் என்றும் அழியாமல் இருந்தது. அதைக் கண்ட அவ்வூரார் அக்காலடி எம்மானிடக் குழந்தையினதுமல்லவென்பதை நன்குணர்ந்தனர்.

பெண்கள் கடமை.

(ஸ்ரீமான் மு. சிற்றம்பலவன்)

ஆடவர் கடமை கூறிப் பெண்கள் கடமை கூறாவிடில் பாரபட்சமென யாருஞ் சொல்வதற்கிடமுண்டு. ஆகலாற் கூடியமட்டும் அதையும் கூறுமாற்றல் நம்மைச் சார்ந்ததே. மதி சிறந்த மாதாக்களே! நம் தமிழ்நாட்டில் ஏராளமான இல்லங்களிற் குடும்ப சங்கட மூண்டென்பதை நீங்கள் நன்கறிந்த விஷயம். அச்சங்கடத்தால் பெருங்கேடு நேரிடுவதோடு மரியாதைக்கேடு, இனத்துரோகம், சனசங்க வெறுப்பு, சன்னியாசம், சீல மோசம் முதலியவைகளு மேற்படுகின்றன. இதை ஊன்றி யோசிக்கில் தாய்மார்களாகிய பெண்கள் சிகாமணிகள் தாங்களிருக்கவேண்டிய கற்பு நிலையிற் சிறுபான்மைப் பிசகேற்பட்டதென்றே சொல்லக்கிடக்கின்றது. பெண்கள் இருக்கவேண்டிய நிலை யாதெனில்:—தம் பர்த்தாவைத் தெய்வமென்று கொள்ளவேண்டும். அவருக்குச் செய்யுந் தொண்டுகள் யாவற்றும் தெய்வத்தொண்டென்றே கொள்ளவேண்டும், புருஷனிட்ட கட்டளைகள் தெய்வக் கட்டளைகள் என்று கொள்ளவேண்டும். அவர் விருப்பம் தன்னுடைய விருப்பமென்றே கொள்ளவேண்டும். சுருக்கிச் சொல்வதானால் 'பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையா யிருப்பதே சற்பெணச் சொல்லலாம். இதற்குச் சாட்சியாய் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அனேக சூத்திரங்கள் கூறியிருக்கின்றதன்றி ஏனைய அறிவுடைய மகான்களு மிகை யிட்டுப் பாடியுமிருக்கிறார்கள். இவ்வித சற்குணத்தோடு நடத்தவேண்டியதாகிய இல்லற தருமத்தைத் துற்குணங்களோடு நடத்தத் துணிந்தால் எங்ஙனம் நடைபெறும். புருஷன் ஒன்று சொன்னால் சில பெண்கள் முப்பத்திரண்டு சொல்லுகிறார்கள். புருஷன் போகவேண்டாமென்ற இடமே தாய் வீடுபோல் போகிறார்கள். செய்யாதே என்ற அலுவலையே சதா செய்கிறார்கள். புருஷன் தலை வலிக்குதென்றால் தனக்கு இருக்க இயலாமல் இடுப்பு வலிக்குதென்று சொல்லுகிறார்கள். புருஷன் செலவுக்குப் பொருளில்லையென யோசிக்கும்போதுதான், 'மாலைசெய்து தாரும்' என்பார்கள். புருஷன் படுங் கஷ்டத்தில் பங்கடையாது சந்தோஷங் கொண்டாடுகிறார்கள். அல்லவெனப் புத்தி சொன்னால் தனிமையாய்ப் புறப்பட்டுத் தங்களுக் கிஷ்டமான இடங்களுக்குப் போய்விடுகிறார்கள். இவ்விதமானால் இல்லாச்சிரமமல்லாச் சிரமமென்றுதான்

சொல்லவேண்டியிருக்கிறது. இல்லறமென்னும் இரதத்தை நடத்தப் புருஷனும் பெண்சாதியும் சோடி மாடுகளைப்போல் ஒத்து இருக்கவேண்டும். அப்படியில்லாது ஒன்று முன் வேண்டியிழுக்க மற்றது பின் வேண்டியிழுத்தால் இரதம் செல்லாது நின்றுவிடுவதுமன்றிப் பழுதுமேற்படும். சந்தோஷமான இல்லாச்சிரமத்தைச் சுகிப்பாக்கலாமா? தாய்மார் இதைக் கொஞ்சம் கவனித்தாலாகாதா? நம் சொந்த நாடாகிய இந்தியாவில் நீண்டா மணிகளைக்குப்போல் பிரகாசிக்கும் ஸ்திரீ ரத்தினங்களையாவது பிணை பற்றுகிறதில்லையா? அன்னவர்களும் பெண்பாலார்தானே. அவர்களுடைய மதி இவர்களுக்கு நுழைய மகாவிஷ்ணு அருள்பாலிக்காரா? பரிதாபம்! உற்றார் பெற்றோரை, இனஜனத்தாரை, சிநேகிதரை, சொந்த ஊரை, வசதியான சாப்பாட்டை, நல்ல நித்திரையை, நல்லுடையை இழந்து, காடோ, செடியோ, வனமோ, வனாந்திரமோ சென்று மலையேறி மழை, பனி, வெய்யில் முதலியவற்றைச் சட்டை பண்ணாது உழைத்து, அதைத்தான் தனக்காகச் செலவு செய்யாது தன் பெண்சாதி பிள்ளைகள் உண்டுடுக்கவேண்டுமென்னும் ஆசை மேலீட்டால் மாதம் முடிவதற்குள் முட்டுப்பாடென்னும் கொடியோனை வீட்டை அணுடு முன் தந்தி மணியார்டரிலோ கெதியா யனுப்பு முறை வேறெதிலோ அனுப்பிவரும் பர்த்தாவைக் கடவுளுக்கு இரண்டாவதாக நினைத்து அவனைச் சந்தோஷ சாகரத்தி லாழ்த்தாத தாலி இருந்தென்ன இறந்தென்ன. அவனுக்குத் துரோகம் நினைந்தார் நடந்த பாதையானு பெண்போர் நடவார். அவர்களையும் தெய்வம் விரும்புமா? அறிவுடையோர் போற்றுவார்களா? தாய்மார்களே! நற்பெண்டிருக்கு ஒரு சொல் போதுமானது. சில இடங்களில் நடக்கும் செயல்களைக் கேட்க உடல் நடுங்குகின்றது. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும். உங்களுடைய பெருமதிப்பையும் கற்பையும் இனஜனத்தாரையும் கவனித்து உங்கள் பர்த்தாக்களுக்கு ஏற்க நடந்து உங்கள் வெற்றிக் கொடியை நாட்டுங்கள். ஆதலால் தாய்க்குச் சமனாகவும் வீட்டு வேலையில் அடியாள் போலவும், பொறுமையிற் பூமாதேவி போலவும், புத்தியில் மந்திரி போலவும், கற்பில் அருந்ததி போலவும், சயனக்கிரகத்தில் அதற்குத் தகுந்தபடியும் உண்மையோடும் கூடித் தன் பர்த்தாவைக் கடவுளுக்கு இரண்டாவதாகிய தேவர்களிலொருவர்போல மதித்து அவர் விருப்பத்துக்கிசைய நடக்கவேண்டும். அல்லவென்று அவர்களை அலட்சியம் பண்ணி நடப்பவர்களுக்கு அழல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மகாபூதி என்னுமிடங்களில் இடமுண்டு என்பது வேதமுறை. பூலோகத்திலே இவர்கள் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளுக்கும் சந்ததி வழியிழவுண்டு. பிள்ளைகளைப் பெற்று வளர்த்த இழிவையும் வளர்த்துவிடுவது தருமமாகாது. தாய்மார் இவ்விஷயத்தைக் கவனிப்பதே கடமை.

சுபம்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

கற்பகத்தின் காதற் கடிதம்.

(சகோதரி வி. பாலம்பாள்).

மிஸ்டர் ஆர். கே. சபை லண்டன் மாநகரில் உயர்தரப் பரீட்சை யொன்றில் தேறியவர். தன் மகன் படித்துத் தேறி வந்தால் உயர்தர உத்தியோகம் வகிப்பானென்ற பேராவலினால் இவர் தந்தை தன் வீடு, தோட்டம், நிலம் எல்லாவற்றையும் விற்று மகனுக்கு மாதாமாதம் ஏராளமாகப் பணமனுப்பிக் கொண்டிருந்தார். லண்டனில் படித்துக்கொண்டிருந்த சமயம் சிற்றின்ப மயமாயுள்ள வேடிக்கை விநோதங்களையும் கண் காட்சிகளையும் காற்றுலாவுதலையும் மிஸ்டர் ஆர். கே. சபை ஒருநாள்கூடத் தவறவிட்டவரன்று. ஜன்ம தேசம் திரும்பியதும் தன் மனதிற்கேற்ற காதலி யொருத்தியை மணந்து தானிதுவரை கண்டும் கேட்டுமிருந்த சுகானுபவத்திலேயே தன் காலத்தைக் கழிக்க வெண்ணினார். அந்தி காலையில் இவர் படிக்குமறையைக் கூட்டுவதற்காக எதிரில் வந்து நிற்கும் எமிலியின் சிரிப்பு இவரைப் பலமுறை மயக்கியதுண்டு. தந்தையிடம் சிறிதேனும் ஆஸ்தி யிருந்திருக்குமாயின் எமிலியைக் கட்டாயம் மணந்திருப்பார். தென்னாட்டில் மத்திய ஸ்தானமாகிய திருச்சிராப்பள்ளியில் இவர் வக்கீலத் தொழில் நடத்தவேண்டியவரா யிருந்ததினால் இவ்வாறு நவீன முறையில் மணந்துகொள்ளல் முடியாத காரியமென்று தீர்மானித்தார். கூட்டும் விளக்குமாறு கையுமாக எமிலி தன்னெதிரில் வந்து நிற்கும் காட்சி இவர் இந்தியா திரும்பியபின்னும் இவர் கண் முன்னிலையில் அடிக்கடி தோன்றும். என்ன செய்வது! சட்டி எட்டியமட்டில், பணம் பாதாளமட்டும் பாயுமல்லவா? இந்தியா புறப்படுங்காலையில் தான் இந்தியா சென்றதும் கடிதமெழுதி வரவழைத்துக்கொள்வதாகக் கூறி எமிலிக்கு ஐநூறு பவுன் கையிலளித்துக் கப்பலேறுவதற்குள் மிஸ்டர் ஆர். கே. சபை பட்ட பாடு அவரைப் பிறப்பித்த கடவுளுக்கே தெரியும்.

இந்தியா வந்த சில நாளில் பாரிஸ்டர் சபைக்குப் பெண் கொடுப்பதாகப் பலர் 'நான் முன்னே, நான் முன்னே' என்று போட்டியிடலானார்கள்.

மனைவியை எதற்காக மணப்பது? அவளை எவ்விதம் விசுவாசிப்பது, அவளை எவ்விதம் கவுரவிப்பது என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அயல் நாட்டு கிரந்தங்கள் பலவற்றை ஓயாது படித்து வந்தார். பாரிஸ்டர் என்று தெருவில போர்டு போட்டதும் அதற்கேற்றபடி வீட்டில் மேஜை, பீரோ, மோட்டார் கார் எல்லாம் அவசியமாயிற்று. தனக்குள்ள பணமுடையையும் தகப்பனாரின் பிடிவாதத்தையும் முன்னிட்டுச் சிலைப்பாளையத்திலான மிராசுதார் துரைசாமியின் நான்காவது மகளாகிய கற்பகத்தைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்தார். கற்பகத்தின் தந்தை தனது நான்காவது மகளையாவது ஆங்கிலம் படித்த மேதாவிக்குக் கொடுக்கவேண்டுமென்று விரும்பியபடியால் மிஸ்டர் ஆர். கே. சபைக்குப் பதினையாயிரம் ரூபாய் வரதட்சிணையுடன் மேஜை, பீரோ, நாற்காலி, மோட்டார்கார் முதலியவைகளையும் அளித்துக் கற்பகத்தைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

தன் மனைவி தனக்குக் கடிதமெழுதக் கூடியவாறு படித்திருக்க வேண்டுமென மருமகன் இட்ட கட்டளைக்கிணங்க துரைசாமி தன் மகளுக்குத் தமிழில் நன்றாய்ப் படிக்கவும் எழுதவும் கற்பித்தார். கற்பகத்திற்கு வயது பதினான்கு ஆயிருந்ததாலும் சுபாவத்தில் அப்பெண் புத்திசாலியானபடியாலும் ஆறு மாத காலத்தில் எடுத்த புத்தகம் படிக்கவும் பிழையின்றி எழுதவும் கற்றுக்கொண்டுவிட்டாள்.

தன்னுடன் கூடி வாழ்வதற்கான திறமை தன் மனைவியிடத்திலுளதோ வென்றறிந்து கொள்ளும் நிமித்தம் மிஸ்டர் சபை கற்பகத்திற்குக் காதற் கடிதமெழுத வாரம்பித்தார். புத்தகங்களைக் கட்டுக்கட்டாகப் பிரித்துப் படித்து மூன்று நாள் கண்விழித்து முதற் கடிதமெழுதி முடித்து போஸ்ட் செய்தார்.

நான்கு தினங்கழித்து அழுக்குப் பிடித்த கவர் ஒன்று கிடைத்தது. 'என்ன இருந்தாலும் பட்டிக் காட்டு புருட்டானே! நைஸான கவர்கூடக் கிடைக்கவில்லை போலும்' என்று சொல்லிக்கொண்டே மிஸ்டர் சபை அக்கடிதத்தைப் பிரித்தார். அதில் தலை கால் ஒன்றுமின்றி மொட்டையாக நான்கு வரி எழுதியிருந்தது.

"இந்த ஊரில் இப்போது தான் மழை ஆரம்பம். தெருவில் கூடைகூடையாகச் சுண்டைக்காயும் பச்சைமிளகாயும் விற்கிறார்கள். வயற்காட்டிலிருந்து அப்பா ஒவ்வொரு நாளும் சாயந்திரம் தான் சாப்பாட்டிற்கு வீடு வருகிறார்."

இதைப் படித்ததும் மிஸ்டர் சபைக்குண்டான சிரிப்பு கொஞ்சமல்ல.

"கடித மெழுதுவதென்றால் வீட்டிலுள்ள விசேஷங்கள், உனது தேக சௌக்கியம் இவைகளைப்பற்றி எழுத வேண்டாமா" என்று கேட்டு மறுகடித மெழுதினார்.

"வீட்டிலிருந்த சிகப்புப் பசு காளைக் கன்று போட்டிருக்கு. எருமை மாடுகள் குடங்குடமாகக் கறக்கின்றன. தினம் அதிகாலையில் அம்மாள் எனக்குத் தயிரும் பழையதும் போடுகிறாள். வேலைக்காரச் சுப்பன் அடுத்த மாதம் கலியாணம் செய்து கொள்ளப் போகிறானாம்."

இவ்வாறு கற்பகம் இம்முறை பதில் எழுதினாள். மிஸ்டர் சபை இது கண்டு மெத்த மனம் வருந்தினார். 'பிராண நாயகருக்கு—அன்புள்ள காதலி' இவை போன்ற சொற்கள் ஒன்றுமே இல்லை. நெடுநேரம் யோசித்து முடிவில் 'எனதருமைக் கற்பகத்திற்கு' என்று தலைப் பெயரிட்டு—'நீ எல்லாமறிந்த கெட்டிக்காரி யென்றல்லவோ நினைத்திருந்தேன். கணவனுக்குக் கடித மெழுதவும் தெரியவில்லையே' என்று எழுதி 'உன் அன்புள்ள காதலன் ஆர். கே. சபை' என்று கையொப்பமிட்டு பதில் எழுதினார்.

"எனதருமைக் கற்பகமென்கிறீர்களே. நான் உங்கள் வீடு வந்து குடித்தனம் செய்த பிறகல்லவோ என் அருமையை நீங்கள் கண்டு கொள்ளமுடியும். எனக்கு ஒன்றும் தெரியாதென்று நினைக்கவேண்டாம். வீட்டு வேலைகள் முழுதும் சுத்தமாய்ச் செய்யத் தெரியும். ருசியாகச் சமைப்பேன். நான் துணி துவைத்தால அழுக்கு இராதென்று அம்மாள் அடிக்கடி சொல்லுகிறாள். பதர்ப்பேணி, சோமாசி எல்லாம் செய்வேன். ஆயிரங்குடம் தண்ணீரானாலும் லட்சியமில்லாமல் கிணற்றிலிருந்து இழுத்து நிறப்புவேன். வீட்டு வேலையில் என்னுடன் அக்காள் கமலத்தாலும் போட்டி போட முடியாது. பிறந்த வீட்டில் தாயிடம் கற்றுக்கொள்ளக் கூடியவைகளை யெல்லாம் கற்றுக் கொண்டிருக்கிறேன். உங்கள் வீடு வந்ததும் நீங்கள் கற்றுக்கொடுப்பதையும் கற்றுக் கொள்ளத் தயாராகவிருக்கிறேன். நீங்கள் என்னிடம் அன்புள்ளவர்களென்பதை நானிப்பொழுதே தெரிந்து கொள்ளுவதெப்படி?

நீங்கள் வாங்கியனுப்பிய நாவல் புத்தகத்தை அப்பா படிக்கக் கூடாதென்று சொல்லிவிட்டார். நேற்று இடியும் மழையுமதிகம். இரண்டு நாளாக அம்மாள் ஊரிலில்லை. நான் தான் இரண்டு வேலையும் சமைக்கிறேன். நான் சமைப்பதை ஒரு நாள் நீங்கள் சாப்பிட்டு விட்டால் பிறகு வேறு சாப்பாடு உங்களுக்குப் பிடிக்காதென்பது நிச்சயம்! வீட்டு வேலைத் தொந்திரவால் கடித மெழுத ஒழிவதில்லை. புருஷன் வீடுபோகுமுன் சிறியவளாகிய என்னைக் 'காதற் கடிதம்' எழுதச் சொன்னால் அது என்ன வென்றே எனக்குப் புரியவில்லை.

இப்படிக்கு, கற்பகம்.

இக்கடிதத்தை மிஸ்டர் சபை திருப்பித் திருப்பிப் பன்முறை படித்தார். நெடுநேரம் யோசித்தார். ஹிந்துக் குடும்ப வாழ்க்கையில் காதற்சுவை யணுவளவுமில்லை யெனத் துக்கித்தார். முடிவில கணவனை யன்புடன் உண்டியிட்டு உபசரிப்பவளே காதற் கிழத்தி யென்றும் அவன் குடும்ப நிர்வாகமே காதற் சுவையென்றும் இல்லறமே காதற் களமெனவும், மனமொத்த மனைவியிடம் பிறக்கும் குழந்தைகளே காதற் களஞ்சிய மெனவு மறிந்தார். மேல் நாட்டினரை யனுசரித்து, காதலின் முடிவு கலியாண மென்றேற்படுவதை விட, கலியாணமே காதலுக்கு ஆரம்பமெனக் கொண்டு இருவருள் எவ்வித ஏற்றத்தாழ் விருப்பினும் மனமொற்று பரஸ்பர உள்ளன்புடன் நடத்தப்படும் நம் இந்திய நாட்டு இல்லறமே நல்லறமென அறிந்து தெளிந்தார். இனி அயல் நாட்டு அபாசகரமான புத்தகங்களைப் படிப்பதில்லை யென்றும் அன்று முதல் தீர்மானித்துக் கொண்டார்.

பெரிய புராணப் பெண்ணரசிகள்.

(ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாள்.)

தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் பெரும் பேறாக விளங்கும் திருத்தொண்டத் தொகையினுள் காணப்படும் மாதரசிகளைப் பற்றித் தனித்தனி ஆராய்ந்து உணர்தல் சகோதரிகளுக்கு மிகவும் நன்மை தருவதாகும். சமயப்பற்று கருதி இக்கட்டுரை வரையவில்லை. குணங்களையும் கடமைகளையும் தேர்ந்து பின்பற்றுவதே முற்றிய நோக்கமாகும். இத்தொண்டர் புராணத்தினுள் பெண்ணீர்மை குன்றாப் பெருந்தன்மை வாய்ந்த பலருள்ளும் சிறப்பாகச் சிலரை எடுத்துக்கொள்வோம்.

"விறல் மந்திரி மதியுடையாள் பெண்" என ஔவைப்பிராட்டியார் அருளிய தெய்வத் திருவாக்கியத்திற் கிலக்கியமாக விளங்கிய மங்கையர்க்கரசியாரையும் "பேதமையென்பது மாதர்க் கணிகலம்" என்னும் ஔவையார் அருண் மொழியின் நுண் பொருளை யுணர்த்தும் விருத்தியுரை போன்றும், நீறு பூத்த நெருப்புப் போன்றும்,

"நாம்பெரிய ரென்னுமதை நாடா திருக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றி விடும்"

என்ற ஆன்றோர் வாக்கியத்திற் கிலக்காகவும் விளங்கிய காரைக்கா லம்மையாரெனும் புனிதவதியாரையும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் கூட்டி வரையப்பட்டிருப்பது ஒன்றே அவ்வனிதா ரத்தினங்களின் மாண்புகளுக்குப் பேருதாரணமாகும்.

இவர்களையன்றிப் பிறவித் துறவு பூண்ட திலகவதியாரையும், உறுதி குன்றா வொழுக்கமுடையாராய் இளமை துறந்த திருநீலகண்ட நாயனாரின் மனைவியாரையும், "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் அருந்தொடரின் கருத்தைச் செயலில் மேற்கொள்ளத் துணிந்த இயற்பகை நாயனாரின் மனைவியாரையும், "இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் பழமொழியை விழுமியதாக்கிய இளையான்குடிமாற நாயனாரின் இல்லுறை தெய்வத்தினையும் முறையே ஈண்டு ஆராய்வோம்.

இவர்கட்கெனத் தனிமையான முதன்மை பெரியபுராணத்தினுள் வழங்கப்படாவிடினும் இவர்கள் ஒருமைப்பாட்டினாலேயே இவர்கள் கணவர்கள் கடமையாகக் கைப்பற்றிய தொண்டுகளில் முட்டின்றி வெற்றி பெற்றார்களென்பது வெளிப்படை. இந்நுட்பம் கருதியும் இல்லறமே எவற்றினும் மேம்பட்டதென்பதை வலியுறுத்தவுமே திருத்தொண்டத் தொகை வகுக்கப்பட்ட வரிசையில் தில்லைவாழ் அந்தணர்களுக்குப் பிறகு இம்மூவர் சரிதங்களையே முதன்மையாக அமைத்தனரோ வென்றும் ஐயுறவேண்டியிருக்கின்றது. இனி முதலடியாராக வகுக்கப்பெற்ற திருநீலகண்ட நாயனாரின் மனைவியாரைப்பற்றி ஆராய்வோம்.

இவர் மண்ணினாற் பாண்டங்களை வனையும் கைத்தொழிலினராகிய குயவர் குலத்திற் பிறந்தவர். அத்தொழிலினைத் திறம்பட ஆற்றி யீட்டும் வருவாய் கொண்டே இல்லறம் நடாத்தியவர். தன் கணவர் ஓர்நாளிரவில் முறையல்லாத வழியில் சிற்றின்பத்தி லீடுபட்டதாக உணர்ந்தார்.

உணர்ந்தவுடன் மனைவியின் நிலைமையில் இயல்பாயெழும் பிணக்கிற்குள்ளானார். தன்னை யணுகவந்த நாயகரைத் தடுத்து "என்னைத் தொடாதீர்" எனக் கூறவேண்டியதற்கு மாறாக் கோபத்தினாலோ சொற்றவறியோ "எம்மைத் தொடாதீர்" எனவும் கூறி அதற்குச் சான்றாகத் திருநீலகண்டத்தினை ஆணையாகவும் நிறுவினார். என்னை இத்திருநீலகண்டத்தினை ஒழிவறாது தனது நாயகர் உளத்திலும் நாவிலும் பதித்து வழிபடும் நியமம் உணர்ந்தமை பற்றியே யென்க. இச்சொல் கேட்டதும் நாயனாரும் அஞ்சி விலகினார்.

இத்தருணந் தொட்டு நாயனார் உலகில் மனைவியா ரின்பத்தினைத் துறந்தமையன்றி உலகில் 'எம்மை' என்றமையால் மாதரின்பத்தினையே மறந்தார்.

இளமைப் பருவம் கடந்தனர். இறைவன் மொழிமீது நிறுவிய ஆணையைக் கடந்திலர். இவ்வம்மையார்க்கும் அவ்வாணையிடத் துமதிப்பும் சத்தியத்தில் உறுதியும் நாயகருக்குள்ளது போலவே உரம்பெற்றிருந்தமையாலன்றோ நாயனாரின் உறுதி நழுவாததாயிற்று. முற்றத் துறந்த பட்டினத்தடிகளாலும் "மாது சொன்ன சூளாலிளமை துறக்கவல்லேனல்லேன்" என வியந்து பொன் எழுத்துக்களிற் பொறிக்கப் பெற்றனர்.

நாயனார் உறுதியை மனைவியார் கெடுக்க நினைத்திருப்பாரோ? கெடுக்க எண்ணமாவது இல்லாள் அகத்தெழுந்திருந்தாயின் பின்னர் ஒரு கணம் ஒரு மனப்பட்டு அயலறியாமல் இல்லறம் நடாத்திருயிருப்பாரோ.

இல்லறமென்பது அறம் வளர்க்கும் நிலையமே யல்லது இயல்பா யெழும் இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டாக மட்டில் ஏற்பட்ட தன்றென்பதை இவ்வம்மையார் இனிது தெளிந்திருந்தார். இழிவான காமப் பேயின் ஆரவாரம் இப்போதினிளர்களிடம் ஆணையை மீறித்தலைக்காட்ட ஆற்றலிலதாய் மறைந்தது. இவ்வொரு மெய்ம்பாட்டொருமை யொழிய ஏனைய எல்லாக் கடமைகளிலும் வேறு படாத உள்ளத்தினராகவே காலம்

கழித்தனர் எனில் அவரே வியவாதார். கடவுளே வியந்தன்றோ உலகினருக்குணர்த்த வேண்டிச் சிவனடியாராய்ப் போந்து திருவோட்டைத் தனித்துப் பாதுகாத்தளிக்கப் பணித்ததும், பின்னர் அவ்வோட்டினைச் செமித்த விடம் நின்றகற்றியதும், அதனிமித்தம் வலிந்து வழக்கிட்டதும், தான் களவாடியதில்லை என்பதற்குறுதியாக மனைவி கரம்பற்றி நீரில் மூழ்கி உறுதி கூறவேண்டியதும், அவ்வாறிசைந்த நாயனார் மனைவியைப் பரிசித்தற்கின்மையால் மூங்கிற்றண்டமொன்றின் ஒரு தலையை மனைவியைப் பற்றச் செய்து மறு தலையைத்தான் பற்றி மூழ்க முயன்றதும், மனைவியின் கரத்தைப் பரிசிப்பதற்கிடமின்றி தமக்குள் இளமையில் நேர்ந்த நிகழ்ச்சியைப் பலருமறிய (வற்புறுத்தினமையால்) வெளியிட நேர்ந்ததும், உடனே அடியாராக வந்த பசுபதி இடபவாகனராய் வெளிவந்தருளி என்றும் மாறாத இளமை பெற்று அணங்கினோடும் தன் பெரும் பதவியெய்தி இன்புறுமாறு பணித்து ஆட்கொண்டது மென்றறிகிறோம். “நூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்” என ஔவையார் கூறியபடி குடும்ப மர்மங்களை மனவமைதியின்றி விளம்பரம்செய்யும் இவ்வம்மையார்க்கு இராததனாலேயே இவர் மனநிலை மாறியிருந்தது. புறங்கூடலும் குணமிருந்திருக்குமேல் இவர் உள்ளநிலையைக் கலக்கப் பலர் முந்துவர். இவர் மனந்திரியுமேல் நாயனார் நிலைதிரிவதும் இயல்பாகும். இப்பெரும் புகழ்க்குரியவர் முதற்கண் மனைவியாரே யென்பது வெளிப்படை.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் பரவையாருக்கும் நேர்ந்த பிணக்கு எத்துணை விரைவில் நீங்கியது. கலகங்களுக்குள் பிரணய கலகமொன்றே எளிதில் மறைவதென்ப துண்மை. இவர்கள் பிணக்கும் உடனே தவிர்ந்தமை பற்றியே முதுமை யெய்தியும் பிரியாவாழ்வு நடாத்தினர். சத்தியத்தினால் தடுக்கப்பட்ட சிற்றின்ப வேட்கையை இருவரும் பெரிதாக மதிக்கவில்லை யென்பதே தேற்றம். ஒவ்வொரு மாதரும் இம்மதி நல்லாரின் தூய்மையையும் வாய்மையையும் கூர்ந்து எண்ணிய போற்றுவாராக.

ஸதி.

(ஒரு சிறு கதை.)

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்.)

ஆம்! அன்று ஒரு விசேஷமான நாள்தான்! இராஜவீதி! அதன் நீளம் சுமார் ஐந்து மைலிருக்கும். சாலையின் இருபுறமுமாகாயத்தை அளாவிய கட்டிடங்களிருந்தன. அச்சாலையின் மேற்குப்புற இறுதியிற்றான் தக்ஷனது அரண்மனையிருந்தது.

அன்று தக்ஷன் விருந்தொன்று வைக்கப் போகிறானாம்! அதனாற்றான் அவ்வளவு கூட்டம் இருந்தது. அவனுடைய அரண்மனை மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதைப்பற்றி எல்லாம் என்னால் எப்படி எழுத முடியும்? ஏன் என்று கேட்கிறாய்? அவைகளைப்பற்றி எழுதுவதெனில் எத்தனை ஏடுகள் வேண்டும்? எவ்வளவு நாட்கள் எழுதிக்கொண்டு இருக்கவேண்டும்? இவைகளை எல்லாம் யோசித்துப் பார்த்தாயா?

தேவோத்தமன் தானே எனத் தக்ஷன் எண்ணினான். தேவர்களனைவருமவனுக்குக் கீழ்ப்படிய இசைந்தார்கள். ஆனால் ஒருவர்மட்டும்—அவர் எங்கிருந்து முளைத்தவரோ எவரும் அறியார்—அவனுக்குக் கீழ்ப்படிய இசையவில்லை. அவர்தான் நமது கதாநாயகர். அவர் வசிப்பது கைலையிலாம். அவர் உடல் மீது சாம்பலைத் தவிர வேறு ஒன்றையும் நீ காணமுடியாது. அவர் அதிசயமானவர். அவருக்கு மூன்று கண்களிருந்தன. ஆனால் அவர் தம் நெற்றிக்கண் எப்பொழுதும் மூடப்பட்டே இருந்தது. அவருடைய ஜடை மிகப்பெரிதாக இருந்தது. அவர் உடுத்தியது யானைத்தோல். அவரணிவதெல்லாம் நாகப் பாம்புகளே. அவர் கழுத்து கருத்து இருந்தது. ஆ! அவர் விசித்திரமானவரல்லவா?

விருந்து அநேக ஆடம்பரக் கேளிக்கைகளுடன் நடந்தேறியது. தேவர்கள், மனிதர்கள் முதலானவர்கள் தக்ஷனைப் புகழ்ந்ததற்கு அளவே கிடையாது. ஜடாமுடியணிந்த கண்டப் பெருகறையரான சிவனார் தமது நாகாபரணங்களுடனும் யானைத் தோலுடனும் உடலெங்கும் மயானப்பொடி பூசிக் கரமிரண்டினும் கபால தண்டமேந்தி ஆண்டுற்றார். அச்சிறந்த விருந்தைப்பற்றியாவது தக்ஷனது சாமர்த்தியத்தைப் பற்றியாவது சிறப்பித்துச் சொல்லொன்றும் சொன்னாரல்லர். அவர் எப்பொழுதும் தமது தாடியை நீட்டிக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்து இருந்தாரே ஒழிய வாயைத் திறந்து ஒன்றும்கூற வில்லை.

தக்ஷனுக்கு இதுபிடிக்கவில்லை! “எவ்வளவோ விமரிசையாய் அநேக ஆடம்பரத்துடன் சிறந்து விளங்கும்படிக்கு நான் அருமையாக நடாத்தும் இவ்வரிய விருந்தைத் தேவேந்திரன், சூரியன், சந்திரன், குபேரன் முதலானவர்கள் வாய் ஓயாமற் புகழ்ந்து கொண்டிருக்க, இந்தப் பிச்சைக்காரப் பயல் — சுடுகாட்டுவாசி — ஆ! இந்தப் பித்தன்மாத்திரம் வாயை இறுகமூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறானே! இவன் திமிறு எம்மாத்திரம்?—உம்!” என்று கோபத்துடன் தக்ஷன் பலவிதமாக எண்ணிப் பார்த்தான். அப்பொழுது வாய்திறக்கக் கூடாமல் கோபத்தால் அவன் பற்களை நறநற வெனக் கடித்துக்கொண்டு வாளாவிருந்தான். ஆனால் அவன் முகம் பொல்லாதது. அவனதுள்ளக் கடுஞ்சினத்தை அது நன்றாகப் பறை சாற்றி யாவர்க்கும் தெரிவித்துவிட்டது. சிவனைக் காணும்போதெல்லாம் அவன் கண்கள் நெருப்புத்தணலைக் கக்கின, மீசை துடித்தது.

இடம் மாறுகிறது. அது ஒரு அறை. அவ்வறையினுடே பட்டுப்பாய் ஒன்றின்மீது கண்கூசும்படியான திவ்யதேஜஸுடன் உட்கார்ந்திருப்பவள் ஒரு பெண். அவளுக்கு வயது பதினாறு இருக்கலாகும். அவள் கூந்தல் கார்மேகத்தைப் பழித்தது. அன்னன்னுதலாள் பைந்தொடிகளணிந்த தன் வலக்கரத்தாற் சிரம் தாங்கிய வண்ணம் ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். ஆ! அவள்தான் தக்ஷனது கடைப் புதல்வி; சதி என்னும் பெயரினள். இரகசியத்தில் அவள் தனது முழுமனது எண்ணத்தையும சிவன் மீது நாட்டிவிட்டாள். அவள் தினந்தோறும் சிவலிங்க பூஜை செய்து வந்தாள். தனது முழுவாழ்க்கையும் சிவனையே காதலிப்பதிற் கழியவேண்டுமென்பதே அவளது முழுக்கோரிக்கை. அதுவே அவளது உருக்கமான பிரார்த்தனை. பின்பு, சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் உதடுகள் அசைய ஆரம்பித்தன; அவள் தனது இனிய குரலை உயர்த்திப் பாடினாள் :—

“ मनस्ते पादाब्जे निवसतु वचस्तोत्रफणितौ
करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान्कैर्वा परमशिव जाने परमतः ॥

"सा रसना ते नयने
तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं
वदतीक्षेते सदार्चतः स्मरति ॥ "

அதற்கு மேல் அவளால் பாட முடியவில்லை. நெஞ்சு அடைத்துக் கொண்டது. கண்ணீர் கண்ணிலேயே நின்று தத்தளித்தது. மெய்ம் மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்திப் பரவச மடைந்தாள். நெடுநேரம் ஆனபிறகு பகிர் முகப்பட்டாள். அவள் வாய் நமசிவாய ஜபத்தை விட்டபாடில்லை.

பின்பு அவள் எதிர்ப்புற அறைக்குச் சென்றாள். அவ்வறையெங்கும் இரத்தனக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஆண்டுள்ள ஆசனங்களில் இருபத்தி எட்டு யுவதிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தக்ஷனுக்கு இருபத்தோன்பது புதல்வியரிருந்தனர். அவர்கள் அழகிலும் கல்வியிலும் ஒருவர்க்கொருவர் குறைந்தவர்கள் அல்லர். அவர்களுடைய அழகைப் பற்றியாவது கல்வியைப்பற்றியாவது குணத்தைப்பற்றியாவது நான் எழுதவரவில்லை. அது என் வேலையன்று. அது ஒரு கவியினுடைய வேலை. பிறர் வேலையைச் செய்ய நான் ஏன் முற்படவேண்டும்? அதிகம் வளர்த்தாமல் ஒரே வாக்கியம் எழுதுவேன். அக்காலத்தில் அவர்களுக்கு அழகில் இணையானவர்கள் கிடையாது. ஆண்டு இருந்தவர்கள் எல்லாரும் தக்ஷனுடைய குமாரத்திகளே.

ஸதி வருவதைக் கண்டும் காணாதவர்களைப் போல் சிலர் நடித்தனர், சிலர் அவள் வருவதை யறிந்து அலக்ஷியமாகக் கருதினர். பரணி என்பவள் சிறிது வாயாடி; " ஆ! ஸதி!! வா! ஏன் இவ்வளவு பெரிய மனது வைத்தாய்—?" என்றாள். ரேவதி பெண்பாள் ஆனைபோல் தலையை உயர்த்திக்கொண்டு, "அவர்கள் எல்லாம் நம்முடைய கோஷ்டியிற் சேர்வார்களா?" என்று மூக்கில் முணுமுணுத்தாள். ரோகிணி மினுக்குகிறவள்; கழுத்தைப் பாம்புபோல் நெளித்துக்கொண்டும் புருவங்களை அலக்ஷியமாக நெறித்துக் கொண்டும் அகன் நீட்டிநீட்டிப் பேசினாள் :—"ஆமாம்மா! அவர்கள் எல்லாம் மெத்தப் படித்தவர்கள். பிரமபச் சமர்த்துக்கள். நாமெல்லாமென்ன?—படியாத முட்டாள்கள்; அசடுகள்; வாயாடிகள். ஏனம்மா ஸதி, அப்படித்தானே?" "என்ன அக்காள்! நீங்கள் கூட இப்படிச்சொல்லுகிறீர்களே! இது தர்மமா?" என்று சொல்லிக்கொண்டே அவர்களுடன் சம்பாஷணையிற் கலந்து கொண்டாள் நமது ஸதி.

"ஏதாவது ஹாஸ்யக்கவி ஒன்று பாடு—கேட்போம்!" என்றாள் ஸதி. ரோகிணி 'ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுப் பாடுகிறாள்:—

"ஆவீண; மழை பொழிய ; இல்லம் வீழ ;
அகத்தடியாண் மெய்நோவ; அடிமைசாவ;
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட ;
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவர் எதிரேசெல்லத்
தள்ளொண்ணு விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தருழுதுண்ட கடமைகேட்கக்
குருக்களோ தக்ஷிணைகள் கொடுவென்றாரே !"

எல்லோரும் குலுங்கச் சிரித்தார்கள். ரோகிணி "ஸதி! நீயும் ஏதாவது பாட்டு ஒன்று பாடு. உன் குரல் எங்களைவிட இனிதாக இருக்கிறது" என ஸதி அதற்கிசைந்து பாடினாள்:-

திரு அங்கமாலை.

பண்—சாதரி.

1. தலையே நீ வணங்காய், தலைமாலை தலைக்கணிந்து
 தலையாலே பலி தேருந்தலைவனைத் தலையே
 நீ வணங்காய்.
2. கண்காள் காண்மின்களோ, கடல் நஞ்சுண்ட
 கண்டன்றனை
 எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றனைக்
 கண்காள் காண்மின்களோ.

3. செவிகாள் கேண்மின்களோ சிவனெம்மிறைச்
 செம்பவள
 எரிபோன் மேனிப் பிரான்றிற மெப்போதும்
 செவிகாட் கேண்மின்களோ.
4. வாயே வாழ்த்துகண்டாய் மதயானையுரிப்
 போர்த்துப்
 பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றனை
 வாயே வாழ்த்துகண்டாய்.
5. நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன் சடைநின்மலனை
 * * நெஞ்சே நீ நினையாய்.
6. கைகாள் கூப்பித்தொழீர் கடிமாமலர் தூவிநின்று
 பைவாய் பாம்பரையார்த்த பரமனைக்
 கைகாள் கூப்பித்தொழீர்.

"சரி! இந்த இழவுபாட்டுப்போதும்" என்று கோபத்துடன் சீறினாள் சித்திரை, "பாடுவது எல்லாம் அந்தக் கட்டையிற் போவான் மேல்தானா" என்று கூறினாள் கார்த்திகை. ஸதி அத்துடன் தனது பாட்டை நிறுத்திவிட்டுக் கலங்கிய மனத்துடன் வாளாவிருந்தாள்.

தோழிப் பெண் அப்பொழுது அங்கு வந்து "அம்மணிகளே! உங்கள் தந்தையாரான மகாராஜா உங்களைக்காணும் பொருட்டு இதோ வருகிறார்கள்" என்று சொன்னதும் அங்கு தக்ஷன் வந்தான். எல்லோரும் அவன் பாதங்களில் சிரசுபட வணங்கினார்கள்.

"என் கண்மணிகளே" என்று மிக்க அன்புடன் ஒவ்வொருவருடைய கன்னங்களையும் தனது கரங்களால் தடவிக்கொண்டு, தக்ஷன் "உங்களுக்கு சர்வமங்களமும் உண்டாவதாக. எனது பாக்கியக் குழந்தைகளே! உங்களிடம் ஒரு சேதியைத் தெரிவிப்பதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்" என்றான். எல்லாரும் ஆவலுடன், "என்ன? தந்தையே!" என உசாவினார்கள்.

தக்ஷன் புன் சிரிப்புடன், "என் செல்வப் புதல்விகாள்! உங்களுடைய விவாக காலம் நெருங்குகிறதல்லவா?" என்று சிறிது மௌனமுற, யாவரும் நாணத்தால் வாளாவிருந்தனர். தக்ஷன் மீண்டும் பேச ஆரம்பித்து, "குமாரத்திகளே! உங்களுக்குத் தகுந்த கணவனைச் சம்பாதித்து இருக்கிறேன். அவன் யார் என்றால் நமது சந்திரனே. அவனை மணக்க நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையா? உங்கள் எண்ணமென்ன?" என அது கேட்டு அனைவரும் ஆனந்த சாகரத்திலமுழ்ந்தி நீந்த வகையறியாது தத்தளிக்கும் வகையில், "தந்தையே! தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்!" என ஏகோபித்து ஒரே குரலிற் கூறினார்கள். ஆ! சந்திரன் சாமான்னிய தேவனா? தேவோத்தமனல்லவா!

"உங்களுக்கு எல்லா ஆசீர்வாதங்களும் உண்டாவதாக" என்று சொல்லிவிட்டு ஸதி பக்கம் திரும்பி, "என் செல்வமே! நீ ஏன் பேசாமல் இருக்கிறாய்? உன திஷ்டம் யாது?" என வினவினான். ஸதி என்ன செய்வாள்? பாபம்! தன் காதலை எல்லாம் சிவனுக்கு அர்ப்பணம் செய்தாய் விட்டது. தான் சிவனைக் காதலிப்பதாகச் சொன்னால் தக்ஷன் கடுஞ்சினம் கொள்வான் என்பதை அவளறிவாள். ஆதலின் அவன்முன் அவள் சென்று வணக்கத்துடன், "அப்பா! எனக்குச் சந்திரனை மணக்க இஷ்டமில்லை. நான் அவனை விவாகம் செய்துகொள்ள மாட்டேன். சுயம்வரம் ஒன்று வையுங்கள். எனக்குப் பிடித்தவரை நான் வரிக்கிறேன்" என்று தள்ளாடி நின்ற சொற்களாற் கூறினாள். தக்ஷன் மகிழ்ந்து, "அம்மா! அப்படியே ஆகட்டும்!" என்று கூறிவிட்டுச் சென்றான். ஆனால் அவ்விருபத்து எட்டுப் பேர்களுக்கும் அவள் மீது உண்டான வெறுப்பு கடலினும் ஆழமுள்ளதாக இருந்தது.

பிறகு ஓர் நல்ல தினத்தில் சந்திரனுக்கும் அவ்விருபத்து எட்டுப் பெண்களுக்கும் அதிவிமரிசையுடன் விவாகம் நடந்தேறியது. எங்கும் சந்தோஷமும் சமாதானமுமே ஓங்கி

202616
செ...

நின்றன. தக்ஷனுடைய சந்தோஷம் அளவற்று ஓடிற்று. வந்தவர்களுக்கெல்லாம் வாரிவாரிப் பணத்தையும் பொன்னையும் இரத்தினத்தையும், மாணிக்கத்தையும், வஸ்திரங்களையும் கொடுத்தான். தன் வாழ்க்கையில் அடைய வேண்டிய பெருத்த சுகத்தை அப்பொழுதே அடைந்ததாக அவன் கருதினான். பெண்கள் ஒன்று இரண்டா! இருபத்தெட்டுப் பெயர்களுக்கும் சேர்ந்தாற்போல் ஒரு நல்ல வரன் கிடைப்பதும் அரிதுதானே!

ஸதியின் சுயம்வரத்திற்கு ஏற்பாடுகள் மிக மும்முரமாக நடந்தன. அந்தோ! பாபம்!! திக்கற்ற ஸதி, தன் முழு இதயத்தையும் அப்பெரு மிறைவனுக் கீந்திட்ட பிறகு அவளால் அன்னியனொருவனை எங்ஙனம் காதலிக்க முடியும்? ஆனால் இதை எல்லாம் இரக்கமற்ற சுயம்வரதினம் நினைத்துப் பார்த்ததா? அஃதும் "வந்தே" னென நெருங்கிற்று.

சுயம்வர மண்டபத்தில் மாணிக்க மகுடங்களணிந்த மன்னர் பலர் குழுமி இருந்தார்கள். தேவர்களுமக் கூட்டத்தில் இல்லாமல் இல்லை. கையிற் சுயம்வர மாலையுடன் ஸதியும் வந்தாளங்கு—வந்ததும் சுற்றிச்சுற்றி மண்டபம் முழுவதையும் கண்ணோட்டமிட்டாள். சாரும் நாருமாவலதிகரிக்கப் பெற்றனர். "அவள் கோரும் பாக்கியசாலி யாவனோ?" என்ற மெதுவான சப்தம் உண்டாயிற்று. அவர்களில் ஒருவனை அவள் விரும்பி இருந்தால் தக்ஷனவனை சிறப்பவும் மெச்சி இருப்பான். எங்கு பார்த்தாலும் நக்ஷத்திரம்போன் மன்னர்தம் மகுடமாணிக்கங்கள் மின்னின. பல தடவை அவள் நாற்புறங்களிலும் சுற்றிச்சுற்றிப் பார்த்தாள். ஆனால் அந்தோ! அவளால் காதலிக்கப்பட்ட மாகனுபாவனுண்டுற்றிருந்தானல்லன். கரை கடந்து புரண்டோடும் மனக்குழப்பத்துடன் அவள் மண்டபத்தினூடே நின்று தத்தளித்தாள்.

திடீரென்று மனோதைரியம் பிறந்ததே, அவள் தன் காத்தாரத்தைத் தலைக்குமேல் உயர வீசி எறிந்து, "நான்மாத்திர மும்மை மனப்பூர்வமாகக் காதலிக்கும் ஸதியாக இருப்பேனாயின், ஹே! பரமசிவ! இதை நீர் கழுத்திலணிவீராக" என்றுத்திரத்துடன் பதைபதைத்துக் கூறினாள். ஆண்டுற்ற ராஜபதிகளும் தேவாதிபதிகளும் தத்தம் சிரங்களை உயர்த்தினர். ஆனால் அதோ! அதோ! சிவன் கழுத்தில் சுயம்வர மாலை தாங்கி நிற்கிறான். ஸதி அடக்கமுடியாத நாணத்துடன் தலை குனிந்து நிற்கிறாள்.

தக்ஷன் சின மளவுமீறிப் பாய்ந்தது எனினுமவனால் என்ன செய்யமுடியும்? அவள் தன் காதலனைத்தான் மணப்பாள். விவாகம் ஒருவாறு நடந்தேறிவிட்டது. அஃதாயதே தக்ஷன் ஸதியை யழைத்து, "வெட்கங்கெட்டச் சிறுக்கியே! ஆ! அந்தப் பிச்சைக்காரனையோ விரும்பினாய்! நன்று! நன்று! தரித்திரன் மனைவியே! போ! போ! அவனுடன் போ! அவனுடனேயே இனியிரு, இனி என் முகத்தில் விழிக்காதே!" என்று அளவற்ற கோபத்துடன் கூறினான்.

உடனே தனது ஊர்தியான கொழுட்டு எருத்தின் மீது ஸதியை உட்கார வைத்துக்கொண்டு சிவனார் கைலாயகிரிக்குச் சென்றார். அநேக கற்ப காலங்கள் மும்முரமாகத் தவமியற்றியும் வேதங்களும் தேடிக் காணாத அத்தகைய பதவியை அருந் துறவற முனிவர்களு மடையத் திறனற்றிருக்க, ஸதிக்குத் திறனளித்தவனை யாட்கொண்டருளிய எம்பெருமான் செய்கையை என்னென்றுரைப்பதோ அறியேன்.

ஓர்நாள் நமது நண்பர் கலகப்பிரியராம் நாரதர் தமது சாது உடையுடன் பாடிக்கொண்டு

சிவனிருப்பிடம் வந்தார். சிவன் புலித்தோன் மீதுட்கார்ந்து சமாதியில் ஆழ்ந்திருந்தார். நாரதர் அவரருகே உட்கார்ந்து பேச ஆரம்பித்து, சிவனை தியானத்தினின்று கலைத்து, "மகாதேவ! நின் மாமனார் தக்ஷன் யாகமொன் றியற்றப்போகிறானாமே!" என முகவுரையைச் சொன்னார்.

"சுகமே யாகம் முடியட்டும்!" எனச் சிவனார் புன்சிரிப்புடன் கூறினார். நாரதர் தன்மையை யவர் நன்கறிவார். அவரை உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே, "உம்மையவனழைக்கவில்லை யல்லவா?" என வினவினார் முனிபாக. "இல்லை, அவன் என்னை யழைத்தானல்லன்; ஆனால் அதனால் என்ன? அது எனக்கு நிரம்பவும் நல்லதாயிற்று" என்றார் சிவனார்.

அந்தணர் பெருமான் உடனே கோபத்தைத் தோற்றுவித்துக்கொண்டும், தொண்டையைக் கனைத்துக்கொண்டும், ஆச்சரியமடைந்தவர்போல் பெருத்ததோர் பிரசங்கம் செய்ய ஆரம்பிக்கலானார்:—"என்ன! அரும்பெரு மிறைவனான உம்மையா அழைக்கவில்லை? பின்பு யாரை அழைத்திருக்கிறான்? உம்மை யழைக்காமலா அவன் யாகமியற்றப் போகின்றான்? ஆ! இதென்ன விந்தை! என்னே அவன்றன் பேதமை! அதிருக்கட்டும்; அந்த மூடன் எப்படிப்போனால் என்ன? சங்கரா! இது உம்மை அவமதித்ததுபோல் ஆகவில்லையா? "ஓ! எல்லோரும் தக்ஷனைப்போன் றிருந்துவிடின், நான் செயலற்று எப்பொழுதும் சமாதியி லாழ்ந்து சுகமடைவேன்" என்றார் இறைவன். பிராமணுத்தமர் தமது ஜபம் பலிக்காதது கண்டு வருந்தினார் மிகவும். என் செய்வதினி?

உடனே அவர் ஸதியிடம் சென்று செதி சொன்னார். அவளாவல் மட்டற்றெழுந்தது; ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டாள். யாகத்தின் ஏற்பாடுகளைப் பற்றியும் விருந்தாளிகளைப்பற்றியும் பலவிதத் திலுமறிய அவள் விரும்பினாள். ஈற்றில், "நான் கண்டிப்பாகப் போகவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே அவள் தன் மணாளனிடம் செல்ல, தன் காரியம் நிறைவேறுவதற்கு வேண்டிய விதையை விதைத்தாய்விட்டதை அறிந்த நாரதமகா முனிவர் விடைபெற்றுக்கொள்ளாமலேயே வெளிச் சென்றிட்டார்.

(கைலாயத்திற் சிவன்முன் ஸதி நின்றாள்).

ஸதி:—நான் என் தந்தையின் யாகத்திற்குப் போக விரும்புகின்றேன்.

சிவன்:—ஆனால், ஒருவரும் உன்னை அழைக்கவில்லையே?

ஸதி:—யார் அழைக்கவேண்டும்? தன் குழந்தையை எவனும் அழைக்கமாட்டான். இது சகஜந்தானே!

சிவன்:—இது சகஜந்தான்! ஆனால் நீ போகக் கூடாது.

கடைசியில் ஸதி போவதாகத் தீர்மானித்தாள். சிவனால் மறுக்க முடியவில்லை. ஏழையின் உடுப்புடுத்திக்கொண்டு நந்தி முன் செல்லத் தான் பின் சென்று, தன் தந்தையின் அரண்மனையை அடைந்தாள் ஸதி.

யாகமண்டபத்தின்கண் வீற்றிருந்த அரசிகளனைவரும் ஸதியைப் புன்சிரிப்புடன் வரவேற்றினார்கள். ஆனால் ஸதி சகோதரிகளோ தங்கள் புருஷனுடன் கர்வமும் மதமும் பிடித்தவர்களாய் உட்கார்ந்திருந்தனர். ஸதி மெல்லெனத் தன் தந்தையான தக்ஷன்முன் சென்று தனது முடிபட அவனடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து வணங்கினாள். தக்ஷன் சினம் மட்டற்றோங்கிற்று. அவன் கூவினான்:—

"ஓ! ஓ! பிச்சைக்காரியே! எங்கே வந்தாய்? நான் அன்றே உன்னைக் கடூரமாகச் சபித்திட்டு, இனி என் முகத்தில் விழிக்காதே என்று சொல்லவில்லையா? வெட்கங்கெட்டவளே! அப்பால் போ அந்தப் பிச்சைக்காரனிடம், அப்பித்தனிடத்திற்கு ஓடு! உனக்கு இங்கு என்ன வேலை?"

ஸதி அடக்கத்துடன், சமாதானமாக மெதுவாய்த் தலைகுனிந்தவண்ணம் சொன்னாள் :—

"பெற்றோர் சாபம் நல்ல குழந்தைகளுக்கு நல்லதையே தரும்."

"நல்ல குழந்தைகள் பிச்சைக்காரனை விவாகம் செய்துகொள்ள மாட்டார்களே! ஆ! உன் புருஷனெங்கே? எங்கே அந்த— அந்தத் திருடன? போக்கிரி? கொடியவன்? பேராசைக்காரன? மோசக்காரப்பயல்? பெண் திருடி? அப்பாவி எங்கு இருக்கிறான்? எங்கே அச்சண்டாளன்?" எனக் கோபத்துடன் தக்ஷன் கதறினான்.

அவனின்னும் பழித்துக்கொண்டே போவான். ஆனால் தலை குனிந்துகொண்டிருந்த ஸதி தன் சிரசை உயர்த்தி அவனைக் கூர்மையாக உற்று நோக்கிவிட்டு, பின்பு தனது வலக்காத்தையும் உயரத் தூக்கி "சே! அப்படிச் சொல்லவேண்டாம். என் தந்தையே! உண்மையான—பரிசுத்தமான கற்பரசி தன் மணாளனைப் பிறர் பழிக்கவும் கேளாள். என் காது எத்தகைய பாபம் செய்ததோ? ஆ! இவ்வுடலை நீர்தானே எனக்களித்தீர்? மீண்டும் இவ்வுடலை நீரே எடுத்துக்கொள்ளுங்கள்! இனி உமது பழிச்சொற்களை ஒரு கணமேனும் கேளேன்" எனத் தீர்மானக் குரலிற் கூறிவிட்டுத் தக்ஷன் பாதங்களில் வீழ்ந்தாள். ஆ! அவளுயிர் அப்பொழுதே சென்று சிவனுடன் ஐக்கியமாய்விட்டது. அவள் சவம் மட்டும் ஆண்டிருந்தது.

ஓ! இந்தியாவே! உனது மகிமையை அளவிட யாரால்தான் முடியும்!

ஏட்டிக்குப் போட்டி.

ஓர் சிறிய கதை.

(காபி ரைட்)

(ஸ்ரீமான் வி. சிவராஜன்.)

சனிக்கிழமை மாலை சுமார் ஆறு மணிக்கு ராமு தன் தாயாரை நோக்கி "அம்மா! எனக்கு சீக்கிரம் சாதம் போடுகிறாயா" என்றான். அவ்வம்மணியும் "ஆகாப்பா, பாவம்! காலை எட்டரை மணிக்கு 'அவுரி, அவுரி' என்று இரண்டு பிடி சாப்பிட்டுவிட்டுப் போனதுதான். பசிக்கிறதாக்கும் பாவம்! இதோ வந்துவிட்டேன்" என்று மிகவும்பரிந்து பேசிக்கொண்டே கைக் காரியங்களைப் பரபரவென்று செய்யலானாள். உண்மை யுரைக்கப்புகின் அச்சமயம் ராமுவிற்கும் பசிக்கும் காததூரம். ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் உட்செலுத்திய நான்கு தயிர் வடைகளும், இரண்டு பிளேட் பாதாம் ஹல்வாவும் இவைகளுடன் தற்செயலாய் உட்சென்ற ஒரு ஈயும ஒற்றுமையுடன் குடலிலிருக்க மறுத்து ஒன்றையொன்று பிடித்துத் தள்ளி 'நான் முன்னே' 'நான் முன்னே' என்று புளித்த ஏப்பத்துடன் வெளிவர முயன்று கொண்டிருந்தன. நம் சென்னையில் ஒவ்வொரு சிற்றுண்டிச் சாலையிலும் வாயிற்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் வெற்றிலை பாக்குக் கடைகளே உள்ளே நடக்கும் ஏராளமான விற்பனைக்கு முதற்காரணமென்பதை அன்றுதான் நம் ராமு அறிந்தான். இது

எப்படி நிகழ்ந்ததெனில், மாலை ஐந்துமணிக்கு ஆபீஸ் மூடியதும் கூட்டிலடையும் பறவைபென வீடு செல்லும் நிமித்தம் அதிவேகமாய் பிராட்வேக்கு (Broadway) வந்தவன் 'ஹிந்து,' 'பாம்பே கிரானிகிள்' முதலிய இரண்டொருபத்திரிகைகள் வாங்குநிமித்தம் சற்றுவழியில்தாமதிக்க நேர்ந்தது. அச்சமயம் சமீபத்தில் என்றுமில்லாத பாண்டு வாத்திய கோஷம் காதிற் கெட்டவே, யாது விசேஷமென ராமு அங்கு சென்று விசாரித்ததில் பாண்டு வாசிக்குமிடம் அன்றுதான் புதிதாகத் திறக்கப்பட்ட காப்பி ஹோட்டலெனத் தெரியவந்தது. அயன் நோயாளியாயிருந்தாலொழிய யாவர்க்கும் தின்பண்டங்களைக் கண்டால் ஆசை தானே. எட்டிப்பார்க்க, உள்ளே வரிசை வரிசையாகப் பல கைகளின் பேரில் வைக்கப் பட்டிருக்கும் பல தினுசு பக்ஷணவகைகளைக் கண்டதும் ராமுவுக்குத் தனக்குப் பசிக்கிறதாயில்லையா என்ற ஒரு சந்தேகம் தலைகாட்டிற்று. 'பசியாயிருக்காது போலிருக்கிறதே! இன்னம் அரை மணி நேரம் போகட்டுமே' என்று சற்று தயங்கினான். 'ஒரு வேளை இதுவே பசியாயிருந்து விட்டால் வீணே நாக்கியை வெட்டிப் போட்டு வயிற்றிற்கு வஞ்சனை செய்வானேன். ஏதாவது தனி சாப்பிட்டுப் பார்த்தால், தலை காட்டுவது வாஸ்தவப் பசியாயிருந்தால் தைரியமாக வெளியே வரட்டும்; தகுந்தபடி சமாராதனை செய்வோம்; அப்படியல்லாது போலிவகையறவாயிருப்பின் தகுந்தபடி சிட்சை செய்ய! இன்று பார்த்தால் உண்மை வெளிவருகிறது' என்று சட்டென முடிவிற்கு வந்து மனதை திடப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைந்தான். அங்கே லட்சம் ஈக்களுக்கு மத்தியிலும் ஆயிரம் பாத்திரங்களைச் சுற்றியுமாக ஏற்கனவே உட்கார்ந்திருக்கும் தொண்ணூற்றொன்பது பெயர்களுடன நூறும் பெயராகத்தானும் உட்காருவதன் நிமித்தம் சுற்றுமுற்றும் நோக்கினான். காற்கண்டு விரலால் ஸ்டூலை உதைத்ததாலும் முழங்காலால் மேஜையைத் தாக்கியதாலும் நிகழ்ந்த சகிக்கொணாத வலியைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு ஒரு மூலையிற் போயுட்கார்ந்தான். 'என்ன ஸார் வேணும்' என்று ஒரு பையன் வந்தான். 'என்ன யிருக்கு, சொல்லு' என்று ராமு சொன்னதுதான் தாமதம்! "பாதம் ஹல்வா, காசி ஹல்வா, பம்பாய் ஹல்வா, தூத்பூரி, பாதம்பூரி, ஜாங்கிரி, ஜிலேபி, குலேப்ஜான், சூத்காரி, டில்பர் டோஷ் (ராஷ் பிஹாரி கோஷ்!) சந்திரகலா, பாஸந்தி, பூந்திலட்டு, பூரிலட்டு, கேஸரி (பேஸரி!) சோமாசி, ஐஸ்கிரீம், ப்ரூட்சலாட், காரம் சூடாக போண்டா, பஜ்ஜி, ஸ்பெஷல் தோசை, வெங்காயவடை, உப்புமா, பொங்கல், மசால்வடை, பொடடோவடை, சேமியா இட்டலி, இச்சடி, பூரியுருளைக் கிழங்கு, தயிர் வடை, ஓமப்பொடி, சிறுகாறுபூந்தி, காருசேவு, பகோடா, டீ, காப்பி, கோக்கோ, விரப், ஐஸ், மில்க்" என்று சாமாரியாக மூன்று தலைமுறைக்கு வைது, 'என்ன கொண்டு வரட்டும்' என்று அதட்டி முடித்தான். நம் ராமுவிற்கோ இந்த சங்கடியால் மண்டை ஒரே கிக்கம்; எண்ணெய்ப் புகையால் தொண்டை ஒரே கமரல். யாது ஆர்டர் செய்வதென்று தோன்றாது பலி கட்டத்திற்கேகும் ஆடுபோன்று பசபசவென்று விழித்தான். இதை கவனித்த அப்பையன் 'இது கொண்டு வருகிறேன்' 'இதைச் சாப்பிடுங்கள்' என்று சொல்வதற் கெல்லாம் இன்னது வேண்டும், இன்னது வேண்டாமென்று ஒன்றுமே சொல்லாமல் எதற்கும் 'சரி, சரி' என பொம்மைபோல் தலையை ஆட்டிக்கொண்டு கொண்டு வருவதை எல்லாம உள்ளே தள்ளி, குடிக்க வேண்டிய தண்ணீரைக் கையலம்பியும் கையலம்பிய தண்ணீரைப் பருகியுமாய் ஒருவாறு தீர்மானம் வைத்து, ரசீதில் கண்டிருக்

கும் பதிகான்களுவைப் பசுபோல் பறிகொடுத்து வெளிக்கிளம்பினன். முதலில் தன்னை உள்ளே பிழுத்தது வால்தப்பசியா அல்லது போலிவகையறுவா என்று சாப்பிட ஆரம்பிக்கும்போதே பரிசோதித்தறிந்து கொள்ள மறந்துவிட்டமையால் இப்போது மேலே குவிந்திருக்கும் பதிகான்களை கூளத்தையும் கெல்லி அடியில் ஒளிந்து கொண்டிருக்கும் பசியாகிய ஆசாமியைப் பரீக்ஷிப்பதென்பது தற்போது ராமுவிற்கு துர்லபமாகி விட்டது. பிறகு தான் சோதிக்க இயலும்! நிற்க. நகராபரிபாலன சபைகளிலும், சட்ட சபைகளிலும், பாங்குகள், பண்டுகள் இவைகளின் நிர்வாக விஷயங்களிலும் பல தேர்தல்களிலும் இந்நாளில் வெகு சகஜமாக ஏற்படும் பல சண்டை சச்சரவுகளை நாம் அனுவசியமென்றும் சமூக முன்னேற்றத்தைக் கெடுக்கும் தடைகள் என்றும் அவதூறு சொல்வது யோசனையின்மையேயாகும். முன்னேற்ற மாவதென்ன? முன்னேற்றம் என்ற பதமே நாம் பின்னே யிருக்கிறோம் என்பதை நன்கு விளக்குகிறதல்லவா. சினிமாவிற்கு டிக்கட்டு வாங்கவோ, திருவிழாவில் சுவாமி தரிசனத்திற்கோ, மைலே சாசுவத நிதிக்கு மாதப்பணம் கட்டவோ இது மாதிரி விஷயங்களுக்கு நாம் முன் ஜாக்கிரதையாக எவ்வளவு முன்னால் ஆஜரானாலும் நம்மினும் அதி முன் ஜாக்கிரதையாக நமக்கு முன்னாலேயே ஏராளமாகப் பலர் வந்திருப்பதால், நாம் அக்கூட்டத்தை ஊடுருவிச் சென்று அத்தனை பேர்களுக்கும் முந்திப்போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு ஜயசாலியாய்த் திரும்புவது எப்படி? ராமபாணம் போல் முழங்கைகளாகிற ஆயுதங்களின் உதவியினால் கூட்டத்தைப் பிளந்து, காலை நசுக்கியும் தோளை நெறுக்கியும் உட்புகுந்து முன்செல்ல முயன்றால் குழப்பந்தானே ஏற்படுகிறது. குழப்பத்திற்கு பயந்து முன்னேற்றத்தைக் கைவிடுவதா? மெதுவாகச் சமயம் பார்த்து இடுக்கிற் புகுந்து வழுக்கிக் கொண்டு நயத்திலும் நல்வார்த்தையிலுமாக முன்னுக்கு வருபவர்கள் சிலரிருப்பினும் அவர்கள் அவ்வளவு சோபிப்பதில்லை. அப்படி சாத்விகத்தில் ஜயம்பெறின் "யார் முன்னுக்கு வந்தது? இவரா! இவர் எப்படி வந்தார்? எப்போது வந்தார்? ஏன் வந்தார்? எங்கே வந்தார்? எதற்கு வந்தார்"? என்ற பல அசந்தர்ப்பக் கேலி வசனங்களுக்கு ஆளாக வேண்டி வருமென்று அஞ்சியே சில சூரர்கள் குழப்ப மேற்படுத்தியே பிரசித்தியுடன் முன்னேறுவது என்ற உறுதியைக் கைப்பிடிக்கின்றனர். அப்போது 'இவர் எப்படி வந்தார்? எப்போது வந்தார்?' என்ற கேள்விகளுக்கு இடமில்லை யன்றோ. "இவர் எப்படி முன்னுக்கு வந்தாரென எனக்கு நன்றாய்த் தெரியும்; வெகு தைரியசாலி; குழப்பத்திற்கு சற்றேனுமஞ்சாது பலரை யொதுக்கித் தள்ளி முன் வந்தார்; பலரும் இவரைத் தள்ளினார்கள்; ஒரு தரம்கூடக் கால் வழுக்கிக் கீழே விழுந்தார்! விழுந்ததில் நேர்ந்த காயத்தின் வடுவை அவர் நெற்றியில் இன்றும் காணலாம்" என்று பலரும் மெச்ச நடந்துகொள்வது என்ன சிரேயஸ்கரம் பாருங்கள்! இவ்வளவு அபார சிரமமெடுத்தும் சிலர் துரதிர்ஷ்ட வசத்தால் முன்னுக்கு வர முடியாமற் போயின் அவர்களின் தைரியத்தை மெச்சாது அவர்களை ரௌடிகளென்றும், வீண் கோஷ்டம் செய்பவரென்றும், குழப்ப மேற்படுத்துபவரென்றும், எதையும் மறுத்துப் பேசுபவரென்றும் வீண் அபவாதம் சொல்வதா? அவரே அந்நிமிஷமே நாமினேஷனிலோ அல்லது மறு எலெக்ஷனிலோ எவ்விதத்திலாவது வெற்றி பெற்றுவிட்டால் வாயறியாது பேசிவிட்டோமே யென்று இஞ்சி தின்ற குரங்குபோல விழிப்பது என்ன கேலிக்கிடம்! ஆதலால் மனதிலுள்ளதைக் கனவிலும் வெளியிடாது, வாயை மூடிக்

கொண்டவண்ணம் எதிலும் முற்பட எத்தனிப்பதே நன்மை. முன்னே போகவேண்டும், அல்லது விடாது பின்னுக்காவது போய்க் கொண்டிருக்கவேண்டும். அதிலாவது ஏதாவது நேரிடுகிறதாவென்று பரிசோதிக்கலாமல்லவா? கஷ்டமொன்றுமில்லை; போட்டியும் குறைச்சல்தான்! நன்மை நேரிடவும் இடமிருக்கிறது! பூகோள சாஸ்திரம் என்ன சொல்லுகிறது!'பூமி கிச்சிலிப்பழம்போல உருண்டை வடிவமாக விருப்பதால் நமக்கு முன்னேயிருக்கும் ஒரு இடத்தையடைய இருவழிகளுண்டு; நேரே முன்னேயும் போகலாம்; அல்லது பின்னுக்கே போய்க்கொண்டிருந்தாலும் அதே யிடத்திற்கு வந்துவிடலாம்' என்று கூறுகிறதல்லவா? பட்சபாதமென்பதில்லாது சமதிருஷ்டியுடனும் சகலரையும் பராமரித்து வரும் மாட்சிமைதங்கிய கவர்மெண்டிற்குக் கூட பிரபுக்கள் ராஜகுடும்பத்தினர் முதலிய பெரிய கையாளிகளுக்கும் தாழ்ந்த (தாழ்த்தப்பட்ட) வகுப்பினருக்கும் படிப்பு முதலிய விஷயங்களில் எடுத்துக்கொள்ளும் பொறுப்பை இவ்விரு திறத்தினருக்கும் நடுவிலிருக்கும் இடைத்திறத்தினர் (Middle Classes) பாலும் எடுக்க முடிகிறதா? இல்லை பாருங்கள்! ஏனெனில் முன் சொன்னவர்கள் முன்னேறியிருப்பவர்கள்; பின் சொன்னவர் பின்னடைந்திருப்பவர். இவ்விருவருக்கும் வசதிகளை வழங்குவது சகஜந்தானே. நாம் ஏதாவது ஒன்றைத் தூக்கவேண்டுமென்றால் இரு கோடியையுந்தானே முதலிற் கைப்பற்றுகிறோம். பிறகுதானே 'நடுபாகம் தொய்கிறதா என்ன, ஏதாவது ஆதாரம் வேண்டுமா' என்று யோசிக்கிறோம். அதுபோலவேதான் கவர்மெண்டும். இவ்விரு திறத்தாரது சௌகரியத்தை முதன் முதல் கவனிப்பது முதற் கடமையாயிருக்கிறது. அந்த ஏற்பாடுகள் முடிவடைந்து நடுத்திறத்தவர்களது தேவைகளை கவனிக்க ஆரம்பிக்க யோசிப்பதற்குள் பொதுவாக ஒதுக்கி வைக்கப்பட்ட மூலதனம் கரைந்துவிடுகிறது. இதில் குற்றம்கூற என்ன விருக்கிறது! செய்ய வேண்டாமென்பதில்லை; முடியவில்லை, அவ்வளவுதான்! அதற்கென்ன செய்கிறது! ஆனால், செய்ய முடிந்தும் செய்யாமலிருந்தாலென்ன; செய்ய முடியாததினால் செய்யப்படாமலிருந்தாலென்ன? முடிவு ஒன்றுதான். நடுத்திறத்தான் பாடு திண்டாட்டந்தான். ஆதலால் பிச்சையிடும் பிரபுவாகவோ அல்லது பிச்சை யெடுக்கும் பரதேசியாகவோ யிருப்பதே தற்காலத்தில் நன்மை பயக்குகிறது. ஆகையாலேதான் இந்நாளில் தகுந்த குழப்பமேற் படுத்தியாவது 'நான் பெரியவன்' அல்லது 'நான் தாழ்ந்தவன் தான்' என்று வெட்டொன்று துண்டிரண்டாக ஏற்படும் வரை சிலர் முயன்று போராடுகிறார்கள். அதுவே தற்போது சரியான யுக்தியும் யோசனையுமாகும்.

இது போலவே வயற்றிற் சென்றிருக்கும் பலவகைப் பண்டங்களும் ஒன்றுடனொன்று வார்த்தையாடி, வழக்காடிப் போராடிய வண்ணம் குடலாகிய கௌன்சில் ஹாலிலிருந்து ஏகோபித்து வெளிக்கிளம்பும்போன்ற சங்கட முண்டாகவே பார்த்தான் ராமு. குழப்பத்தையடக்க வாயிற் புறத்திலிருக்கும் வெற்றிலைக் கடைக்கு வந்து, ஒரு சோடாவையும் உடைத்து நெஞ்சிலூற்றிக் கொண்டு, இரண்டு பீடாவையும் ஒருமிக்க மென்று நாக்கை இரண்டு பந்து தடிக்கச்செய்து தொண்டையை பந்தோபஸ்து செய்தான். மேற்சொல்லிய சிகிச்சையாஸ்பத்திரியாகிய சோடாக்கடை அருகில்லாதிருப்பின் உள்ளே யடக்கிய தீனிவகைகளை வெளியே கக்கநேரிட்டிருக்குமல்லவா? அப்படி நேர்ந்திருந்தால் எவனாவது மறு தடவை அவ்விடமேகுவானோ? பக்ஷணக்கடைக்

காரரே வெகு சமர்த்தர்கள்; முன் யோசனை வெகு ஜாஸ்தி; போதும் போதாததற்கு சொல்லிக்கொடுக்க சினிமா காட்சிகள் இருக்கவே யிருக்கின்றன. உடைக்க முடியாத கதவுகளை யெப்படியுடைப்பது என்றும் திறக்க முடியாத பெட்டியை யெப்படித் திறப்பது என்றும் இலகுவிற் சொல்லிக் கொடுப்பதுடனில்லாது எது செய்தாலும் பாதகமில்லை என்ற ஒரு போலி நாகரிகத்தைப் பரப்பி வருகிறதே இப்பாழும் சினிமா! கதா நாயகனைக் கட்டிப் பிடித்து நொடிக்கு நூறு முத்தமீயும் கதா நாயகியைக் கண்ட நம் காதற் கிழத்தி பலருமறியப் பக்கத்திலுட்கார்ந்து கொண்டு புருஷனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பதில் பிசகென்ன விருக்கிறதென்று எண்ணுகிறாள். I love thee (நான் உன்னை நேசிக்கிறேன்) 'I adore thee') நான் உன்னைத் துதிக்கின்றேன்) 'I worship thy very steps' (நான் உன் திருவடிகளைப் போற்றுகிறேன்) என இவ்வாறு சமயம் நேர்ந்த போதெல்லாம் முத்தங்களுக்கு நடுவிற் பகர்ந்த வண்ணம் இருக்கும் கதாநாயகனைப் பார்த்த நாம் நம் பெண்டாட்டி மடித்துக் கொடுக்கும் வெற்றிலையை நாம் சகலரும் காண வாங்கிப் போட்டுக்கொண்டால் இதில் பாதகமென்ன என்று இலஜ்ஜை விடுகிறோம். ஐம்பது வயதாகியும் ஆத்துக்காரர் பெயரைச் சொல்வதற்கு சங்கோசப்படும் பெண்டிரும், வயது எவ்வளவாகியும் பிறருக்கு முன் மனைவியுடன் சகஜமாகப் பேசத் தயங்கும் புருடருமாயிருந்த காலமெல்லாம் போக தற்போது இவ்வளவு கேவலஸ்திதிக்கு வந்து விட்டதே நம் சமூகம்! இத்தகைய சினிமாவிலிருந்துதான் கற்றுக்கொண்டார்களாக்கும் நம் பட்டணக் கடைக்காரரும். மேல் நாடுகளில் பிரபல சூதாட்ட கிருகங்களின் முதலாளிகள் அங்கே வந்து சூதாடுபவர்களைப் பலவிதத்திலும் வஞ்சித்துப் பணத்தைப் பறித்து விடுவார்களாம். இவ்வித முன்னேற் பாடுகளையும் மீறி இரண்டொருவர் அகஸ்மாத்தாய் ஜயித்து விட்டால் பணம் நஷ்டமடையாதிருக்கும் பொருட்டு முன் ஜாக்கிரதையாக வாயிற் புறத்தில் ஒரு இலவச பிராந்திக்கடையையும் குடிவழங்கிக் கொஞ்சி யேமாற்றிப் பணத்தைப் பிடுங்க இரண்டொரு ஸ்திரீகளையும் நியமித்து விடுவார்களாம். இவர்களிடமிருந்துதான் ஹோட்டற்காரர்கள் சோடாக்கடை யுக்தியை யறிந்தனர்போலும்! இத்தகைய ஸ்திதியில் வீடு வந்த ராமுவுக்கு ஆறு மணிக்கே எப்படிப் பசிக்கும்! கேலிதான்! எதற்காக அப்படிப்பொய் சொன்னானென்றால் அதுவும் ஒரு காரணத்திற்காகத்தான். வாஸ்தவத்தில் என்ன தேவாமிர்தம் வழங்கிய போதிலும் இன்னம் பன்னிரண்டு மணி நேரத்திற்கு பசியென்பது கிட்டே வரப்போவதில்லை; ஆகையால் கொஞ்சம் முன்னாடியே போஜனத்தை முடித்துக் கொண்டால் தூக்கம் வரும்வரை வாங்கி வந்த பேப்பர்களையும் இரண்டொரு ருசிகர நாவல்களையும் சாவகாசமாய் வாசிக்கலாமல்லவா; அதற்குத் தான் இச்சிறு பொய் சொன்னது. இலையிலுட்கார்ந்தான். குழம்பூற்றிப் பிசைந்த சாதத்தில் ரசத்தை ஊற்றச் சொல்லி அடிக்கடி சேர்த்து பிசைந்து கொண்டு உன்மத்தம் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தானே யொழிய ஒரு கவளமாவது உட்செல்லவில்லை. இதை கவனித்த அவன்தாயார் 'ஏனப்பா சரியாய்ச் சாப்பிடவில்லை? ஐயோ பாவம்! பசிமுற்றி விட்டாற் போலிருக்கிறது; குடலில் காற்று முட்டிப் போய்விட்டது. பேதிக்கு எடுத்துக்கொண்டும் நாளாயிற்று! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே, மருந்தெண்ணை கொஞ்சம் குடி, சரியாய் பசியெடுக்கும்' என்றாள். மருந்தெண்ணை என்ற வார்த்தையைக் கேட்டதும் "எனக்கு வேண்டாம் அந்த சனி, எனக்குப் பசி ஒன்றும் குறைவில்லை! ஏதோ யோசனை. இதோ

பார்!" என்று இரண்டு பிடியாக அன்னத்தை விழுங்கிவிட்டு மீந்திருந்ததில் பாதியை வாய்க்குறட்டிலும், மற்ற பாதியைக் கையிலுமாக வெகு லாகவமாய் அடக்கிக் கொண்டு கலம்விட்டு எழுந்திருந்து குழாய்ப்புறம் சென்று வாயிலிருந்ததை உமிழ்ந்து கையிலிருந்ததைக் களைத்தலம்பிவிட்டு ஒருவாறு போஜனத்தை முடித்துக்கொண்டு, பிறகு தெருத்திண்ணையில் படுக்கையை விரித்துக்கொண்டு, விளக்கேற்றி வைத்துக்கொண்டு முதல்முதல் ஹிந்துப்பத்திரிகையைக்கையிலெடுத்துப்பிரித்தான். முதற்பக்கத்தில் கல்கத்தாமேயரான சென்குப்தா அவர்களின் உருவப்படமொன்று கண்ணிற்பட்டது. வெண்மையான வால் கோட்டுடனும் மாசற்ற காலருடனும் மேன்மையான கழுத்தணியுடனும் (Tie) பார்ப்பவருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டும் வசீகர முகத்துடனும் விளங்கும் அப்படத்தைச் சற்றுநேரம் உற்றுநோக்கிக்கொண்டே நம் ராமு கீழ்க்கண்டவாறு யோசிக்கலானான் :—" ஆகா! என்ன முகம்! என்ன தேஜசு! இல்லாமலா பாலிய முதற்கொண்டு பிரபல பரீட்சைகளில் தேறியதும் பிரசித்த பாரிஸ்டரெனப் பெயரெடுத்ததுடனில்லாமல் நம்மிந்தியத் தலைமைநகராகிய கல்கத்தாவிற்கும் மேயராயிருக்கிறார்! நம்ம பக்கத்து சேர்மன்களும் ஜில்லா அதிகாரிகளுமிருக்கிறார்களே! வந்தவர்க்கு மாலையிடுவதும், தங்குமளவும் விருந்தளிப்பதும், போகும்போது பல்லைக் காட்டுவதுமாக! இதுகள்தான் இவர்கள் பொது ஜனங்களுக்குச் செய்யும் பரோபகாரம்! இது போன்ற போலிப்பிழைப்பா இவர் மேயர் ஸ்தானம்! விநாடிக்கு நூற்றெட்டு ராஜீயக் கட்சிகளும், மதப்போராட்டங்களும் எப்பொழுதும் உலைத் தண்ணீரெனக் கொந்தளித்த வண்ணமிருக்கும்அப்பெரும் நகரின் நிர்வாகப் பொறுப்பை வகிப்பது இலேசான காரியமா என்ன! அப்படியிருக்க இவர் முகத்தில் அஷ்ட லக்ஷ்மியும் வாசம் செய்யக் கேட்பானேன். சற்று உற்றுப் பார்த்தால் என் ஜாடை கூட இவர்க்கிருக்கிறது போலிருக்கிறதே. ஆமான்னு! கண், முகவாய்க்கட்டை இவ்விடங்களில் என் ஜாடைதான். அப்படியிருக்க என்னைப் பார்த்தால் சர்வ சாதாரணமாகவிருப்பானேன். இவரை நோக்கின் இவ்வளவு வசீகரமமைந்திருப்பானேன். சட்! இது என்ன பைத்தியம்! அவர் எங்கே, நாம் எங்கே! இருப்பினும் இவரணிந்திருக்கும் டையினால் தான் இம்முகம் இவ்வளவு சோபிக்கிறது! நாமும் இருக்கிறோமே! வைதீகக் குடுமியும் முழநீள நீட்சையும், முட்டுக்கால வேஷ்டியும், லஸ்கர் மாதிரி கழுத்துவரை மூடிய கோட்டுமாக! நானும் இவர் மாதிரியே முன் தலைக்கிறுப்பு வைத்துக்கொண்டு இம்மாதிரி உடையணிந்தால் என்னைப் பார்த்தாலும் நன்றாகத்தானிருக்கும்போலிருக்கிறது. என் தகப்பனார் ஏதேஷ்டமாகக் கைரொக்கமும் நிலபலங்களும் வைத்துப்போயிருப்பினும், நானும் வெட்டியாளாகத் திரியாமல் நன்றாகப் படித்து ஒரு இங்கிலீஷ் கம்பெனியில் 150 ரூபாய்ச் சம்பளத்திலிருப்பினும், எனது கர்நாடக வேஷத்தைப் பார்த்துதான் அடுத்த வீட்டு அம்மணியம்மாள் எனக்குத் தன் பெண்ணைக் கொடுக்க மாட்டேனென்கிறாள். பெண்ணோ வெகு நல்ல குலம்; பார்வைக்கும் அப்சரஸ் மாதிரியிருக்கிறது; பெண்ணின் தகப்பனாருக்கும் எனக்குக் கொடுக்க சம்மதந்தான்; என் தாயாருக்கும் கொள்ள இஷ்டந்தான். ஆனால் பல் தேய்க்கப் பிரஷும் பேஸ்டும், தலைவாரப் பலதினுசுத் தைலங்களும், ரிப்பன்களும், கோணல் வகுடும், காதில் கைக்குட்டையும், இடுப்பில் கொத்துச் சாவியும், முகத்தில் பௌடரும் சென்டுமாக அருமையாய் வளர்த்துவரும்

அம்மணியம்மாள் ஒரு வைதீகனைப்போலிருக்கும் எனக்குப் பெண்ணைக் கொடுக்க இஷ்டப்படுவாளா! "பணமிருந்து என்ன செய்கிறது! சொகுசும் நாகரீகமும் வேண்டாமா!" என்கிறாள். நானுந்தான் ஏன் இவ்வேஷத்துடனிருக்கவேண்டும்? ஒரே பிள்ளையானதால் தகப்பனார் சிரார்த்தம் செய்யத் தலையில் முடிபோடுவதற்கு நீண்ட மயிரிருக்கவேண்டுமென்கிறாள் என் தாயார். அதுவும் சரிதானே! பிறப்பிற்கே காரண பூதராயும், இறப்பினும் தன்னைச் சந்ததியின் நிறுத்தாத நல்ல ஸ்திதியில் வைத்துப்போகும் தகப்பனுக்கு முறைப்படி சிரார்த்தம் முதலியவை செய்யாத பிள்ளை பிள்ளையாவானா? இந்த தர்ம சங்கடத்திற்கென்ன செய்வது! ஆனால் வருஷமொருதரம் தானே சிரார்த்தம். அதற்கு ஒருமாதத்திற்கு முன்பு முன்குடுமியைக் கால்விரற்கடைப் பின்தள்ளி யொதுக்கிவிட்டால் குடுமிக்குக் குடுமியுமாயிற்று, பார்வைக்குப் பார்வையுமாயிற்று. இதுதான் சரியான யோசனை. வீண் டம்பம் கூடாதே யொழிய, ஒவ்வொருவனும் தன் முகத்திற்கும் பாவனைக்கும் தக்கவாறு நல்ல உடைகளணிந்து பார்வைக்கு ரமியமாயிருக்கப் பிரயத்தனிப்பதில் யாதொரு கெடுதலுமில்லையே? ஓகோ வாஸ்தவந்தான்! அதனால்தான் ஏதாவது ஒன்று தங்கள் பாவனைக்குப் பொருந்தியதாக விருக்கட்டுமென்ற முன் ஜாக்கிரதையுடன் சிலர் கழுத்துமுதல் கால்வரை ஐரோப்பிய சம்பிரதாயப்படிக்கும், உச்சியிற் குடுமியும், நெற்றியில் முப்பட்டைச் சந்தனமும் அதற்குமேல் காலணாவளவு அட்சதைப் பொட்டும், வாய்நிறையத் தம்பலமும், திருமார்பில் ஒட்டையளவு ஜரிகைபோட்ட யோக வேஷ்டியும், ஊன்றிக்கொள்ள உலக்கைத் தடியுமாக உடைதரித்து வெளிக் கிளம்புகிறார்கள்! இத்துடன் நின்றதா இந்த தர்பார்! ஐரோப்பியர் பொருந்திய உடை தரித்தபின்னர் முகம் துடைத்துக்கொள்ள வெகு ஜோரான கைக்குட்டைகளை இடது மார்புறத்து இருக்கும் சட்டைப்பையில் சொகுசாக வெளியே தெரியும்படி சொருகி வைத்துக்கொள்வார்கள். இங்கோ, மூக்குச் சிந்த ஒரு காஷாயத் துண்டு; டிபன் சாப்பிட்டால் கை துடைக்க ஒரு அழுக்குத் துண்டு; முகத்தை நாகரீகமாய் ஒற்றிக்கொள்ள ஒரு பட்டுத்துண்டு; அது போதுமான வெளுமையாயிருக்குமோ யிராதோ வென்ற சந்தேகத்தின்பேரில் எடுத்துக்கொண்ட அதைவிட வெளுமையான இன்னொரு துண்டு; இவைக்கப்போட மறந்துவிட்டதால் பையிலேயே தங்கிவிட்ட மற்றொரு துண்டு. இவ்வளவுதான் சட்டைப்பையில் திணறத் திணிக்கப் பெற்றிருக்கும் துக்கடாக்கள். இதைத்தவிர கண்ணாடிக்கூடு, பொடிக்குடுக்கை, புகையிலை டப்பி, மணிபர்சு, கொத்துச்சாவி, பௌண்டன் பேனா இவைகள் இருக்கவே யிருக்கின்றன! இவ்வித அருமை உடை லிஸ்டில் விட்டுப்போனது தலைக்குச் சட்டைக்காரத் தொப்பி ஒன்றும், காலுக்குக் கீச்சென சப்திக்கும் சடாவும்தான்! இவ்வளவு மிச்ர வேஷத்தில் இரண்டொன்றாவது தமக்குப் பொருத்தமுள்ளதாகப் போகாதா என்ற தைரியம் இவர்களுக்கு! பாவம்! இதைப்பற்றி நமக்கென்ன? எது தமக்குப் பொருந்தும் எது பொருந்தாது என்று தெரியாது தவிப்பவர்க்கல்லவோ இவ்வவஸ்தை. எனக்கு எது பார்வையாயிருக்குமென்பது எனக்குத் தெரிந்துவிட்டது. நாளைக்கே உள்ளே வைத்திருக்கும் சட்டைத்துணியை இரண்டு கழுத்து திறந்த (Open Coat) கோட்டுகளாகத் தைத்துவிடுகிறேன். நல்ல காலரில் அரை டஜன், பார்வையான டையில் கால் டஜன் இவைகள் வாங்க அமைப் பணமும் தேவையில்லை. இப்போதுபோல் அஷ்டமி,

ஏகாதசி, பிச்ச அமாவாசை, வெள்ளி, சனி, செவ்வாயென்று சாக்குச் சொல்லி இரண்டு வாரத்திற்கொருதரம் முன்தலையைப் பளபளவென்று மின்னும்படி மொட்டை யடிக்கும் வரை காத்திராமல் வாரமிருமுறை முகக்ஷவரம் செய்துகொள்ளவேண்டியது. இவ்வளவு இப்போதைக்குப் போதும். பிறகு பார்த்துக் கொள்வோம்" என்று ஒருவித முடிவிற்கு வந்தான். மணியும் ஒன்பதாயிற்று. இப்படி மனக்கோட்டை கட்டியவண்ணமே கையிலிருந்த பேப்பருடன் தூங்கிவிட்டான். அவன் தாயார் தன் வேலைகளை முடித்துக்கொண்டு அங்கு வந்து பார்க்க அவன் அயர்ந்து நித்திரையி லிருப்பதுகண்டு, பேப்பர்களைப் பொறுக்கி உள்ளே வைத்து விளக்கையும் நிறுத்திவிட்டு துயிலச் சென்றனள்.

மறுநாள் முழுதும் கோட்டு தைப்பதிலும் டை பொறுக்குவதிலும், காலர் வாங்குவதிலும், க்ஷவர சாமக்கிரியைகள் சேகரிப்பதிலும் கழிந்தது. திங்களன்று எட்டு மணிக்கே சாப்பிட்டுவிட்டு, பிறகு டை யை அழகாக முடிபோடுவதில் அரைமணி செலவிட்டு, கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு அரை மணி ஆனந்தித்த பின்னர் யதாப்பிரகாரம் ஒன்பது மணிக்கு ஆபீசுக்குப் புறப்பட்டான். தான் இப்புதிய கோலத்துடன் வீதியோடு நடந்து செல்வதைச் சாளரத்தின் வழியாய்ப் பார்த்த அடுத்த வீட்டு ராஜம் தன தாய்க்குத் தன்னைச் சுட்டிக் காட்டுவதையும் கவனித்தான். மிக திருப்தியான மந்தஹாஸத்துடன் அடிக்கடி கனைத்தவண்ணம் ஒரு பஸ்வண்டியிலேறி மணி ஒன்பதேகாலுக்கு பிராட்வே முனையிலிறங்கினான். நேற்றுவாங்கமறந்துவிட்ட செறுகூசி (Tie pin) ஒன்றை வாங்கி அணிந்து கொண்டு தம்பு செட்டித் தெரு வடகோடியிலிருக்கும் ஆபீசுக்கு தினம்போல் நடந்துபோக யத்தனிக்கையில் ஒரு ரிக்ஷாக்காரன் "குட்மார்னிங், சாமி! போணி பண்ணுங்கோ!" என்று, ராமு கால்விரலுக்கும் சக்கிரத்திற்கும் ஒரு மயிரிழை இடைவெளி காண்பித்தவண்ணம் வெகு லாகவமாக வண்டியை முன் கொண்டு வந்து நிறுத்தினான். இதற்கு முன்னால் தாண்டிச்செல்லும் போதெல்லாம் தன்னைச் சற்றும்மதியாது காலை நீட்டி உட்கார்ந்த வண்ணமிருந்த இதே வண்டிக்காரனை இன்று இவ்வளவு வணக்கத்துடன் மரியாதை செய்யச் சொன்னது தனது சிங்காரடை யின் மகத்துவமென ராமு அறிந்தான்; மன மகிழ்ந்தான்; வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டு "ஜல்தி பௌ" என்று ஒய்யாரமாக விடையளித்தான். வண்டிக்காரனும் 'தாஸன் சுவாமி!' என்று ஒரே ஓட்டமாகப்பறந்து கொடிப்பொழுதில் ஆபீசுக்கு அரைமணி முன்பாகவே கொண்டுபோய் விட்டான்.

ராமு கீழே இறங்கி வெகு அலட்சியமாக ஒரு நாலணாவை எறிந்துவிட்டு உள்ளே நுழைந்தான். மும்முற வியாபார காலமாதலால் அரை மணிக்கு முன்பே ஆபீசுக்கு வந்து ஒண்டியாய் கணக்கு வழக்குகளைப் பரிசோதித்துக்கொண்டிருக்கும் மானேஜர் யாரோ வரும் சத்தத்தைக்கேட்டு எட்டிப்பார்க்க நம் ராமுவைக்கண்டு, "ஹலோ! குட் மார்னிங் ராமு! It is very kind of you to have thought of coming a bit early to the office in times of pressure like this : that is the real spirit! carry on! Hey! How is that you look so transformed to-day! What is the idea! Though I have been all the time observing the genuine interest you take in your work, I was all along afraid that you will never take it into your head to heed how much a smart and pleasing exterior helps a business like ours. I am really

glad that you have after all ventured to sacrifice your deep-laid religious scruples at the altar of our business interests. I will never forget that." (இம்முறை சமயத்தில் சற்று முன்பாக ஆபீசுக்கு வந்தது பற்றி வெகு சந்தோஷம். அதுதான் வாஸ்தவ வழக்கமாகும். நல்லது! என்ன? உன்னைப் பார்த்தால் அடையாளமே தெரியவில்லையே! சில நாட்களாய் நீ உன் வேலையில் எடுத்துக் கொள்ளும் ஊக்கத்தை நான் கவனித்துதான் வருகிறேன். இருப்பினும் நம்மதைப்போன்ற வியாபாரத்திற்கு நல்ல உடைகளும் பகட்டுப் பார்வையும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நீ அறிய மாட்டேனென்கிறாயே என்று எனக்குச் சற்று வருத்தந்தான். போகிறது! இப்பொழுதாவது அதன் உண்மை உனக்குப்புலப்பட்டு அதன்படி நடக்கிறது எனக்கு மிக சந்தோஷத்தை அளிக்கிறது) என்று கை குலுக்கிய பிறகு "By the bye, Ramu, Our Head-Clerk is going on six months' leave; If you have the confidence I will be glad to give you a trial; consider and tell me by this evening") (நம் தலைமை கிளார்க்கு ஆறுமாத லீவில் போவதால் உனக்கு தைரியமிருப்பின், அந்த ஸ்தானத்திற்கு உன்னை நியமிக்கலாமென்றிருக்கிறேன். நன்கு யோசித்து மாலைக்குள் பதில் சொல) என்று முதுகைத் தட்டிக் கொடுத்தார். நம ராமு "All right Sir, as you please, thank you very much for your kindness" (நல்லது ஸார், தங்களிஷ்டப்படியே செய்யுங்கள்: தங்களுக்கு என்மேலிருக்கும் விசுவாசத்திற்காக நன்றி செலுத்துகிறேன்) என்று முணுமுணுத்தான். "நல்ல உடைகளுக்கும் மதிப்பு இவ்வளவா? முன்பே தெரியாமற் போயிற்றே" என்று வியந்து, உடல்பூரித்து வெகு உற்சாகத்துடன் வேலைமேற் சென்றான். மறுவாரத்திலிருந்து ஆறு மாசம் வரை 250 ரூபாய் சம்பளத்தில் ஹெட் கிளார்க்கு வேலை பார்த்தான். இதன் மத்தியில் இவனது உயர்தரச்சம்பளத்தையும் கம்பீரத் தோற்றத்தையும் உத்தேசித்து அம்மணியம்மாள் ராஜத்தை ராமுவுக்குக் கொடுக்க ஒருவாறு சம்மதிக்கவே, மனம்போல் மணமும் நிறைவேறியது. வேலையும காயமாயிற்று. இப்படியே மூன்று நான்கு வருஷங்களில் படிப்படியாய் உயர்ந்து 500 ரூபாய் சம்பளத்திற்கு வந்தான். ராமுவின் ஓய்ச்சலொழிவில்லா வேலைத் திறமையும், தகுந்த ஐவேஜியுள்ளவனா யிருப்பதால் சகலருக்கும் இவனிடமிருக்கும் மதிப்பையும் உத்தேசித்து அக்கம்பெனி மானேஜர் ராமுவைத் தகுந்த பொறுப்புவாய்ந்ததும் ஆயிரக்கணக்காக வரும்படி வரக்கூடியதுமான டிபாஷ் ஏஜண்டாகவும் இறுதியில் நியமித்துவிட்டார். லக்ஷ்மியும் கண்ணைத் திறந்து நோக்கினள். லட்சக்கணக்காகப் பணமும் குவிந்தது. வீடு நிறைய வண்டு வண்டாகக் குழந்தைகள், குடியிருக்கப் பெரும் பங்களா, பூந்தோட்டத் துறவுகள், பலவித மோட்டார் வண்டிகள் இவைகளிடையில் நம் ராமு இந்திரபோகத்தை யனுபவித்து வரும் நாளில், இத்தியாதி வைபவங்கள் கிட்டியும் திருப்தியடையாது அந்தஸ்துக்குத் தகுந்த செல்வாக்கிலும் அவருக்கு அபிலாஷை யுண்டாயிற்று. பிரபுவிற்குக் கிட்டாதது ஒன்றுமில்லையாதலால், சிலரின் யோசனைப்படி சமயோசிதமாக சில டீ பார்டிகளும் விருந்துகளும் நடத்தி, பக்குவமாய் சில வெகுமதிகளும் நன்கொடைகளும் கொடுத்திலிருந்து ராய்சாகெப், ராவ்சாகெப், ராவ்பகதூர், திவான்பகதூர் என்று படிப்படியாய்ப் பட்டங்கள் வழங்கப்பெற்று, ஸர், ஸி.ஐ.ஈ. பட்டங்களும் முடிவிற் கிட்டின. இனியொன்றும் குறைவில்லையென மனம் பூரித்து விம்மிதனாய் வாழ்ந்துவரும் நாளில், பிரபல கல்கத்தா வர்த்தகரும், பிரசித்த தனிகரும்,

யிருந்த கொடையாளருமான ஸ்ரீமான் S. V. சாரியவர்களுக்கு கே.ஸி.ஐ.ஈ. பட்டமளிக்கப் பெற்றதை யுத்தேசித்து காஸ்மோபாலிடன் கிளப்பில் (Cosmopolitan Club) நடக்கவிருக்கும் ஒரு தோட்டக் கச்சேரிக்கு நம் ராமுவிற்கும் அழைப்புக் கடிதம் வந்தது. நேரே பரிச்சயமில்லாவிடினும் தன்னைப்போலவே ஸ்ரீமான் சாரியும் உழைப்பாலேயே சாதாரண ஸ்திதியிலிருந்து இம்மேன்மை ஸ்திதிக்கு வந்தவரென்று தெரியவரவே, அத்தகையோரின் பரிச்சயத்தை யபேட்சித்து அவ்விருந்துக்குப் போனார்.

சகலராலும் வெகுகுதூகலத்துடன் வரவேற்கப்பட்ட சாரியவர்கள் கிளப் மெம்பர்களொவ்வொருவரையும் கைகுலுக்கி வருமளவில் நம் ராமுவின் சமீபம் வந்ததும் திடுக்கிட்டு உற்று நோக்கினர்; பிறகு "ஹலோ! மிஸ்டர் ராமு! சௌக்கியமா? அடையாளமேதெரியவில்லையே" என்றார். ராமுவும் ஆச்சரியத்தினால் வாயைத் திறந்த வண்ணம் சற்று நின்றிருந்து "என்ன! மிஸ்டர் வெங்குட்டு! தாங்கள் தானா! வேறு யாரோவென்றல்லவோ பார்த்தேன்" என்று கை குலுக்கியபின், பால்ய சிநேகிதர்களான இவ்விருவரும் தமக்குள் "மிஸ்டர்" பட்டமில்லாது சகஜமாக சமாசாரங்களைப் பேசவேண்டி, ராமு சாரியவர்களை அடுத்த நாள் தமது கிருகத்திற்கு இராபோஜனத்திற்கு அழைத்தார். சாரியாரும் ஒப்புக்கொண்டார். தோட்டக் கச்சேரியும் ஈதிப்படி முடிவு பெற்றது.

அடுத்த நாள் விருந்துபசாரத்தின் பின்பு டிராயிங் ரூமில் (Drawing Room) இருவரும் வெற்றிலை மென்றுகொண்டு சகஜமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது "என்ன வெங்குட்டு! நீ பால்யத்திலிருந்த வேஷக்கெல்லாம்போக இப்போது கதர்ச்சட்டையும், கதர்க்குல்லாயும் யோகவேஷ்டியுமாக இவ்வேஷம் போட எப்பொழுதிலிருந்து ஆரம்பித்தாய் சொல்லு! ஆனால் சொல்ல என்ன இருக்கிறது! வேண்டிய வரை காலரும், டையும், பூட்சும் போட்டுக் கொண்டு அலுத்தாய் விட்டது; இப்போ வயதாகிவிடவே இப்படி யாரம்பித்திருக்கிறாய் காலத்திற்கு தகுந்த கோலம் போலும்! நம் சென்னையில் காங்கிரஸ் மீட்டிங்குகளுக்குப் போக இரண்டு செட்டு கதர் உடையும், பாட்டுக் கச்சேரி, டிராமா முதலியவைக் கேக சில்கு ஷர்ட்டும் சின்ன உத்தரீயமும், சினிமா கிளப்பு, பீச், தோட்டக்கச்சேரி இவைகளுக்குப்போக சில சமயோசித உடைகளுமாக இடத்திற்குத் தகுந்தபடியிருக்க, நீ காலத்திற்குத் தகுந்த வேஷம் போடுவதில் பிசகொன்றுமில்லை! இருப்பினும் அதன் விவரமேதாவதிருப்பின் அறிய ஆவலுடனிருக்கிறேன். சொல்லு பார்ப்போம்" என்றார் ராமு. அதற்கு சாரியவர்கள் "என்ன ராமு! இவ்வளவு நாளாகியும் உன் கல்விப் பேச்சு உன்னைவிட்டபாடில்லைபோலும். சுத்த கர்நாடகமாகவிருந்த நீ கூடவா இப்படி மாறிவிட்டாய்! என்னைச் சொல்ல உனக்கு வாயெங்கிருக்கிறது! இருப்பினும் நான் இப்படி எப்படி மாறினேன் என்பதைக்கேள். அதில் கேலிக்கிடம் ஒன்றுமில்லை. நான் என் ஆங்கிலேய உடைகளை வெறுத்துத் தள்ளி தேசிய சம்பிரதாயப்படி உடையுடுக்க ஆரம்பித்ததிலிருந்தே எனக்கு நல்லகாலமாரம்பமாயிற்றெனக் கூறலாம். நானும் இச்சென்னையில் நல்லுடைதரிப்பதிலே ஆசைவைத்துத்திரிந்தநாளில், என்மேலதிகாரி என்னை 'அந்தஸ்திற்கு மீறி உடையுடுப்பவன்' என்று அலட்சியம் செய்து சம்பளத்தைத் துளியுமுயர்த்தாது இடுப்பொடிய வேலையை மட்டும் கொடுத்து கஷ்டப்படுத்திய நாட்களில் ஒரு நாள் சனிக்கிழமை தினம் மாலை வீடு வந்து போஜனம் முடித்துக்கொண்டு 'ஹிந்து'ப் பேப்பரை வாசிக்கக் கையிலெடுத்தேன்,

முதற் பக்கத்தில் நம் ஸ்ரீமான் மாளவியா அவர்களின் திருவுருவப் படத்தைப் பார்த்தேன்; அவரணிந்திருக்கும் மாசற்ற உடையையும் கம்பீரத் தோற்றத்தையும் கண்டேன். அப்போதே கண்பிதுங்கும் காலரையும் மூச்சடைக்கும் சனியன் பிடித்த கண்டகௌபீனத்தையும் (Neck-tie) வெறுத்துத் தள்ளினேன்; இனி அன்னிய நாட்டு உடையுடுப்பதில் பணத்தையும் காலத்தையும் வீணாக்காது தேசிய உடையையே தரிப்பது என்று சபதம்செய்து கொண்டேன். மறுநாள்முதல் கழுத்து மூடிய கோட்டும் வெளுத்த வேஷ்டியும் தரித்து ஆபீசுக்குச் செல்ல வாரம்பித்து என் வேலையில் யதாப்பிரகாரம் ஊக்கமெடுத்து உழைக்கலானேன். வெறும் ஷோக் பேர்வழியென்று இதுவரை எண்ணியிருந்த என் மேலதிகாரிக்கு நாட்கள் செல்லச்செல்ல என் பேரில் நம்பிக்கை வளர ஆரம்பித்தது. எப்பொழுதுமே என் வேலையிற் பழுதில்லாமல் நான் இதற்கு முன்னும் செய்து வந்திருந்தும் என்மேல் மேலதிகாரிக் கேற்பட்ட நம்பிக்கைக்கு முதற்காரணம் என் சாத்வீக உடையேயென்று நன்கறிந்து கொண்டேன். வரவரச் சம்பளமுமுயர்ந்தது; அதற்குத் தக்கவாறு வேலையும் குறைந்தது! சிறிதுநாட்கள் கழித்து கல்கத்தா செல்லவேண்டுமென்று எனக்கு வெகு நாளாக விருந்த அவாவை என் மேலதிகாரிக்குத் தெரிவிக்க, அவர் பிரியத்துடன் 'எங்கு சென்றாலும் வீண் ஆடம்பரத்தில் ஆசை வைக்காதே; கருமமே கண்ணாயிரு' என்று புத்திமதி கூறியதுமன்றியில் கல்கத்தாவிலிருக்கும் தம் நண்பரான ஒரு பிரபல வியாபாரிக்கு ஒரு சிபார்சுக் கடிதமும் ஈந்து என்னை யனுப்பினர். அவர் சொல்லிய புத்திமதிகளை இருதயத்திற் பதித்தவண்ணம் அங்கு ஸ்து உயர உயர வீண் சோம்பலிலும் டம்பத்திலும் மனதைச் செல்லவிடாது ஊக்கமாக வேலைகளை கவனித்து வந்தேன். எனது வேலைத்திறமையைமெச்சிலாகித்துவந்த எனது புதிய எஜமானனும் நாளடைவில்என்உழைப்பிற்குப் பிரதி பலனாகத் தம் கம்பெனியில் என்னை ஒரு கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டார். லக்ஷ்மியும் கண் திறந்தாள். பெரியோர் ஆசீர்வாதத்தையும் உன்னைப்போன்ற ஆப்த நண்பர்களின் நல்லெண்ணத்தையும் முன்னிட்டு என் மீதி வாழ்நாட்களும் யாதொரு குறைவுமின்றி நிறைவேறி விடுமென்ற தைரிய மெனக்கிருக்கிறது. அதுவே நல்ல லக்கினமாயிருந்து என்னைச் சீர்திருத்தி இந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்த அந்த சனிக்கிழமைத் தேதியை இதோ எனது டைரியில் குறித்து வைத்திருக்கிறேன் பார்!" என்று தமது சட்டைப் பையிலிருந்து ஒரு பழைய டைரியை யெடுத்து ஒரு பக்கத்தை ராமுவுக்குக் காண்பித்தார். அப்பக்கத்தின் தேதியைப் பார்த்ததும் அதே தேதியின் அதே பேப்பரில்தான் தான் பார்த்த லேன் குப்தா அவர்களின் படமும் இருந்தது என்று நம் ராமுவுக்கு ஞாபகம் வந்தும் அதை சாமியவர்களிடம் வெளியிட்டாரில்லை. தமது புதிய ரீதியுடைகளே தங்களது அதிர்ஷ்டத்திற்கு ஆரம்பம் என்று இவர்களிருவருக்கும் எண்ணம். பழையரீதியைச் சட்டெனவொதுக்கித் தள்ளிப் புதியரீதியில் உடையுடுக்க ஆரம்பித்த தமது மனோதிடத்தை மெச்சியவண்ணம் இவர்களுக்கு சகஜமாக ஏற்பட்டிருக்கக்கூடும் உற்சாகத்தின் காரணமாய் தாங்களறியாமலே இவர்கள் தங்கள் தங்கள் வேலைகளில் எடுத்துக் கொண்ட ஊக்கமே இவர்களது முன்னேற்றத்திற்குப் பிரதம காரணமென்பது நமது எண்ணம்.

சுபம்.

கைகண்ட ஔஷதங்கள்! கவனியுங்கள்! குணமான ஔஷதங்கள்!

ரத்தினம் இங்கிலீஷ் மருந்துகள்.

இருபது வருஷத்திற்குமேல் பெயர்பெற்ற டாக்டரால் உபயோகிக்கப்பட்டு, எல்லோராலும் புகழப்பட்ட மருந்துகள்.

(1) குளிர் சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கு பிரசித்தியான நீலமருந்து.

(2) குழந்தைகளின் அள்ளு மாந்தம், மார்ச்சளி அல்லது நெஞ்சுக் கொளகொளப்புக்கு மருந்து.

(3) குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்பொழுது ஏற்படும் வயிற்றுக் கழிச்சல் முதலிய வியாதிகளுக்கு மருந்து.

இவைகள் தவறாமல் குணம் தருவதை திடமாய் நம்பலாம். அனுபவத்தில் உண்மை விளங்கும்.

புட்டி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று. தபாற் செலவு பிரத்தியேகம்.

எம். ரத்தினம் அண்டு சம்பெனி, ஔஷதாலயம்,

156, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீமான் க. சா. அ. ராம சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடக்கப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செஞ்சியில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுதித்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டில் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் அவர்கள் தங்கள் தேச [illegible] [illegible] அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு [illegible] கருவியாகவும் [illegible] அறிவாளிகள் [illegible] உணர்வார்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. தங்களால் [illegible] பெரும் பேருபகாரத்திற்கும் இத்தகைய பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங் கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார் :—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மஹிமையை "ஸுபோத ராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும, மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமசந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீரென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா.

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் இடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்னலக்ஷ்மி எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமேயல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியின் நிலையே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி பைண்டு வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜுலைவரை பன்னிரண்டு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 5-8-0

1926 ஆகஸ்டிலிருந்து 27 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1927 பிப்ரவரியிலிருந்து 27 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற்கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் தபாற் செலவின்றி 3—ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்ளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மஹாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபின் சைஸ் விலை அணா	0—6—0
பால பாரதம் டெமி 92-பக்கங்கள் அணா	0—8—0
பால பாகவதம் டெமி 87-பக்கங்கள் அணா	0—8—0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை, என்றெழுதவும்.

"சிந்தாமணி"

நான்காவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. $6\frac{1}{4}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் காரடன் ரோட், மயிலாபூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதியனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஸ்டாம்பு அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னதுக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

உமது வாழ்வில்

பெருத்த லாபம்.

எலெக்ட்ரோ கோல்ட் பிளேட்டு தங்க ஒட்டியாணம், 180-கஜ்ஜை கட்டியது விலை 1-க்கு ...	ரூ. 5	8	0
டிை சாதா ஒட்டியாணம் 1-க்கு ...	ரூ. 4	0	0
7 கல்விழைத்த இமிடேஷன் வஜ்ஜிரக்கம்மல் ஜதை 1-க்கு ...	ரூ. 1	4	0
இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய அம்ச பில்லை 1-க்கு ...	ரூ. 2	8	0
இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய ஒத்த வரிசை அட்டிகை 1-க்கு ...	ரூ. 7	0	0
இமிடேஷன் சம்பசாம் அல்லது மாட்டல் ஜதை 1-க்கு ...	ரூ. 2	8	0
எலெக்ட்ரோ கோல்ட் பிளேட் ¼-காசுமாலை 1-க்கு ...	ரூ. 4	8	0
எலெக்ட்ரோ பிலேட் பலமாதிரி வளையல்கள் ஜதை 1-க்கு ...	ரூ. 0	10	0
இமிடேஷன் டயமண்ட் பேசரி 1-க்கு ...	ரூ. 0	6	0
இமிடேஷன் ஸாபுலாக்கு 1-க்கு ...	ரூ. 0	8	0
ஒரு கல் கடுக்கன் ...	ரூ. 1	4	0

ஸ்ரீ கே. என். ராதாகிருஷ்ணா அண்டு பிரதர்ஸ்,

109, சைனாபஜார் ரோட், மதராஸ்.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின்

மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜஸுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26. பிராட்வே, மதராஸ்.

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதவாஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணு 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்,

மைலாப்பூர், சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

'தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக்கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.
   Approved as a Library Book.
2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 10.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.
3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.
   Approved as a Text-Book suitable for School use.
4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.
   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.
5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது, விலை ரூ. 1—4—0.
   Approved as a Library Book.
6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.
   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.
7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.
8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது விலை அணா 12.
   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.
9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது, விலை அணா 8.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.
10. மனு சரித்திரம்—சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா 10.
11. காளிதாஸன்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப் ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன். தாங்கள் நமது பாரத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கு சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிக சந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்தி பெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7-10-1926-ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

தங்களாலுயிருறும் "சிந்தாமணியின்" எழுச்சியால தமிழ் மகளினுட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா நந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சிறியவியல்லை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றலைக் கொண்டும் "சிந்தாமணியின" செயலமைய வரைய இயலாதிருமிடத்தா எனினும் எம சகோதரிகளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருளை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃது போன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச் சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும்.

அம்மா ! தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண்மணிகளிற் சிலரை நான் கண்ட பொழுது அவர்கள் சிந்தாமணியின் கட்டுரைகளைத் தங்களுள்ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைப்பிடித்து தாங்கள் நடப்பதாலும் தாங்கள் முன்னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப்படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை யுணர்ந்தது மல்லாமல் தாங்கள் இதுகாறும் கடந்து வந்த வழிகளை அறவே ஒழித்து விட்டனர்,

அம்மா ! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களையுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன்னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக்கத் தக்கதே இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகைத் தழைத்தோங்கும் பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப்பாராக.

கணபதி துணை.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8-5-26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமுகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குக் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதப்பத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண் மக்கள் அறியவேண்டிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டு மென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதைப் போக்கு முதலியவற்றுளின்றியமையாதன பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்து கொள்ளுதற்குரியவராவாரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தாமணியாய்த் திகழுஞ்சிந் தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கவினுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

7-2-25-ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது:—

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவை யனுப்பியிருக்கிறேன். மிற்க எனதுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தங் கொண்டதாக என் மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால தங்கள் உருவப்படம் ஒன்றை யனுப்புப்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால ஒரு படம் அனுப்பி வைக்கவும்.

7—10—25-ல் கோட்டாவிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது:—

சகோதரி அவர்களுக்கு.

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி' எனும் பெயர் பெற்ற மாத சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது! 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான் கருணைபுரிவாராக.

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்து வரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக் காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வாயப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியாவது இலக்கண பரிச்சயமாவது இலலாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு எதோ சில விஷயங்களை எடுத்து கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24-3-26-ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக் கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத்தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன் பல வழிகளிற் சிறப்புற்று விளங்கத் தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன்.

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டை காலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26-ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேறும் வழியைப் பற்றி தாங்கள் முயற்சி யெடுத்துக் கொண்டதைப் பற்றியும் சிரமம பாராது பத்திரிகை நடத்தி வருவது பற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக்கொடுத்து சிந்தாமணியை என்றும் நடத்தி வருமபடியாய் சதா கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

24—9—25-ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R.M.P.R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது:—

அம்மா,

ஒரு காலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழி காட்டியாக விருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவ நாகரிகத்தில் மூழ்கித் ததளித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண் மணிகளின் வளர்ச்சியையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2-11-1926-ல் எழுதுவது.

சாத்விகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அதிலுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல் வைக்க விரும்பாததுடன் அடுத்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்கவல்ல பழம் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

27—4—26-ல் ஸிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜெ. பரமானந்தன் அவர்கள் எழுதுவது:—

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக் கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும்சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி"நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும ஓர் சந்தாதாரராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—1—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன். அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என்மனது குதூஹலமடைந்தது. ஆகையால் என்னை யொரு சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு. சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம் போல் விளங்கும் சிந்தாமணி வரப்பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக் கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு.........வைகமும்......... மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்குக் கடவுள் கருணை புரிய வேண்டுகிறேன்.

207616

LIFE MEMBERS.

26. M.R.Ry. K. Kandiah Avl., Klang.
27. „ T. R. Subramania Iyer Avl., Klang.
28. „ S. S. Iyer Avl., P. W. D., Klang.
29. „ M. Kumaraswami Pillai Avl., J.P., Kuala-Lumpur.
30. „ R. D. Ramaswami Avl., J.P., Kuala-Lumpur.
31. „ Nilakanta Iyer Avl., Klang.
32. „ W. B. Rangaswami Iyengar Avl., Port Swettenham.
33. „ V. R. Subramania Iyer Avl., Kuala-Lumpur.
34. „ Dr. P. Varadaraja, Port Swettenham
35. „ K. A. Narayanan Avl., Kuala-Lumpur.
36. „ E. Devi Radha Avl., Kuala Lumpur.
37. „ Dr. John Ponnambalam Avl., Kuala Lumpur.
38. „ W. Ponnudurai Avl., Kuala-Lumpur.
39. „ S. Paramananda Pillay Avl., Lumut.
40. „ K. S. Ananthakrishna Iyer Avl., Port Swettenham
41. „ S. M. Ponniah Avl., Klang (F.M.S.)
42. „ S. Ponniah Avl., Port Swettenham.
43. „ A. K. Katheappa Thevar Avl., Saigon.
44. „ S. K. Ramasamy Pillai Avl., Tapah
45. „ A. S. Thampoo Avl., P.W.D., Tapah.
46. „ C. Valersamy Avl., P.W.D., Sungei.
47. „ D. S. Paramesvara Iyer Avl., P.W.D., Sungei.
48. „ T. B. Ramakrishnan Avl., Sungei.
49. „ E. Chinnayah Avl., Sungei.
50. „ V. Subramanian Avl., Sungei.
51. „ K. Elankai Nayagam Avl., Bidor.
52. „ L. Thivy (திவி) Avl., J. P., Kuala Kangsar.
53. „ A. Velu Pillai Avl., Tapah
54. „ N. Elaithambi Avl., J. P., Taiping.
55. „ M. Ratnasamy Pillai Avl., Taiping.
56. Miss Sornaletchumy, Mantin.
57. M.R.Ry. P. Sinnathamby Avl., Gemas.
58. Miss Kamaleswari, Port Swettenham.
59. M.R.Ry. S. Thamboo Avl. Port Swettenham.
60. „ Sona Socka lingam Chettiar Avl., Kuala Muda
61. „ O. R. M. O. M. S. P. Natchiappa Chettiar Avl., Tapah.

LIFE MEMBERS.

(Continued from the inner page.)

62. Dr. E. Kandiah Avl., S. Patani.
63. K. A. L. Rm Ramasami Chettiar Avl., Alorstar.
64. A. E. PL. S. PL. Muthu Karuppan Chettiar Avl., Alorstar.
65. S. K. M. Ramasami Pillai Avl, Tapah.
66. N. Kuppammal Avl., Tapah.
67. Chengalvaraya Naidu Avl., Ipoh.
68. S. V. O. Namperumal Naidu Avl., Penang.
69. Dr. Veerasingam Avl., S. Bakap.
70. S. Thilliambalam Avl., B. Mertajam.
71. A. Pasupathy Avl., B. Mertajam.
72. K. M. Rm. Palaniyappa Chettiar Avl., B. Mertajam.
73. K. Visvanathan Avl., B. Mertajam.
74. P. N. M. Muthu Karuppan Chettiar Avl., Athangudi (Ramnad)
75. M. Y. Rm. Sithambaram Chettiar Avl., Kulim.
76. Pl. K. N. Ct. Palaniyappa Chettiar Avl., Kulim.

ஸ்ரீமான் டாக்டர் கே. முத்துக்குமாரு அவர்கள் (J. P.) பினாங்கிலிருந்து 10-3-27
விருர் :—

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற மூன்று வருடங்களாகத் தாங்கள் நடத்திவரும் 'சித்தாமணி' என்
சஞ்சிகையை வாசித்து சந்தோஷமடைந்தேன். தமிழ்ப் பெண்களின் தாழ்ந்த
கல்வியின்மையையும், தேசாபிமானக் குறைவையும் நன்கறிந்த தாங்கள் இத்தகை
கையை நடத்த முன்வந்தது தமிழ் நாட்டின் நற்காலமேயாகும்.

சென்ற பலவருடங்களாகத் தாங்கள் செய்து வருகின்ற தேசத் தொண்டி
ஊழியத்திற்கும் இப்படிக்கான ஓர் அரிய சாதனம் இன்றியமையாததென்று எல்
புகழ்கொள்ளுவார்கள்.

சித்தாமணியின் பக்கங்களிலுள்ள ஒவ்வோர் விஷயமும், பிரதானமா
பெண்கட்கும், பொதுவாகத் தமிழ் மக்கட்கும் கல்வியறிவையும், ஞானத்தையும், ச
யும், தேசியப்பற்றையும் உண்டாக்கக்கூடியதென்பது எனது துணிபு.

மேலும் சமையல் சாஸ்திரம், குடும்ப சாஸ்திரம், சிசுபரிபாலனம் முத
கள் 'சித்தாமணி' ஏற்றுவதால் முன்னிலும் அதிக பலனைத் தமிழ் மக்கட்கு அ
ற சந்தேகமில்லை.

இவ்வரிய தொண்டைச் செய்துவரும் தாங்கள் இம்மலேயா நாட்டிற்கு
களையும், எங்கள் பெண்மணிகளையும் கௌரவம் செய்வது நாங்கள் செய்துகொண்
தாம்.

அன்புள்ள சகோதரியே! உம்மையும் உமது அருமைச் 'சித்தாமணி'யை
நாட்டுத் தமிழ் மக்களாகிய நாங்கள் அபிமானித்து ஒவ்வொருவரும் சந்தாதாரா
உங்கள் உயரிய நோக்கத்தையும், தேசத்தொண்டையும் அபிவிருத்தி செய்ய மு
ன்று வேலைசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். சர்வவல்லமையுள்ள கடவுள் தங்க
ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் கொடுத்து தாங்கள் செய்துவரும் தொண்டை மே
விருத்தி செய்ய ஆசீர்வதிப்பாராக.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras.—2,520—30-7-1927.